இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 20

சுடர் 32 | கதிர் 122 | வள்ளுவர் ஆண்டு 2048 | பங்குனி 15 செவ்வாய்க்கிழமை 28.03.2017



ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்ற

## மாலி செல்லும் ராணுவத்துக்கு காங்கேசனில் பயிற்சி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
மாலியில் ஐ.நா. அமைதிப் படையில் பணியாற்றச் செல்லவுள்ள இராணுவத்தின் அணியொன்று, பெரிய களப்பயிற்சி ஒத்திகையை காங்கேசன்துறையில் நேற்று ஆரம்பித்தது.
காங்கேசன்துறையில் ஆரம்பமான இந்தப் பயிற்சி எதிர்வரும் 4 ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நிறைவடையவுள்ளது. >> 17

## வேலையற்ற பட்டதாரிகள் வடக்கில் நாளை போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் நாளை அடையாளக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாண மாவட்டத்தில். >> 17

நிலத்தடி நீரில் ஒயில் கலந்த விவகாரம்

## கையூட்டல் தொடர்பில் விசாரிக்க பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
சுன்னாகம் உள்ளிட்ட இடங்களில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்தமை தொடர்பான வழக்கில் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி மல்லாகம் நீதிவான் மன்றில் நேற்று முற >> 17

## நிபுணர் குழு அறிக்கையை சமர்ப்பிக்க மன்று உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
சுன்னாகம் உள்ளிட்ட இடங்களில் நிலத்தடி நீரில் ஒயில் கலந்த விடயம் தொடர்பில், வடக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிபுணர் குழுவின் சகல அறிக்கைகளையும் மன் >> 17

புதிய அரசமைப்பை உருவாக்கும்

# வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை நாடாளுமன்றுக்கு ஏப்ரலில் முன்வைப்பு

### மைத்திரியுடன் நேற்றிரவு நடந்த கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மார்ச் 28
புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கையை, அரசியல் நிர்ணய சபையில் (நாடாளுமன்றத்தில்) அடுத்த மாதம் சமர்ப்பிப்பதற்கு நேற்று இரவு திடீர் முடிவு எட்டப்பட்டுள்ளது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. இதன்போது இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கும் முடிவுக்கு அனைவரும் இணங்கியுள்ளனர்.
அதிகாரப் பகிர்வு, அரச தலைவர் நிறைவேற்று அதிகாரம் ஒழிப்பு, நாட்டின் தன்மை, தேர்தல் முறைமை தொடர்பில் வழிநடத்தல் குழு ஆராய்ந்து வந்தது. அதிகாரப் பகிர்வு தொடர்பான விவகாரம் கடந்த வாரம் நடைபெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்துடன் முற்றுப் பெற்றிருந்தது.
அடுத்த கட்ட நகர்வு குறித்து ஆராய்வதற்கு முன்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை, வழிநடத்தல் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் தலைவர்களும் சந்தித்துப் பேச முடிவு செய்திருந்தனர். இந்தச் சந்திப்பு நேற்றிரவு நடைபெற்றது. அரச தலைவர் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில், ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர் பங்கேற்றனர். மக்கள் விடுதலை முன்னணியும், மகிந்த >> 16



## ஒன்றரைக் கிலோ ஹெரோயினுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 28
வல்வெட்டித்துறையில் ஒன்றரைக் கிலோ ஹெரோயின் போதைப் பொருளுடன் குடும்பத் தலைவர் ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.
தொண்டமானாறு சந்திப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான நபர் ஒரு >> 17

## 53இல் நடந்ததைவிட மிகப் பிரமாண்டமான முழு அடைப்புப் போர்

அரசை எச்சரிக்கிறார் கும்மன்பில



கொழும்பு, மார்ச் 28
1953 ஆம் ஆண்டை விடவும் மிகப் பிரமாண்டமான முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் >> 15

## விளையாட்டு பணிப்பாளராக படை அதிகாரியை நியமிக்கத் தடை

கொழும்பு, மார்ச் 28
கல்வி அமைச்சின் விளையாட்டுப் பணிப்பாளர் பதவி தொடர்பில் இராணுவ கேர்ணலை நியமிக்க, உயர்நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.
இலங்கை கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கத்தினால் முன்வைக்கப் >> 16

பன்னாட்டை நிராகரித்து செயற்படமுடியாது அரசு

## தீர்மானத்தை அப்படியே நிறைவேற்றவேண்டும் என்கிறார் பாக்கியசோதி

கொழும்பு, மார்ச் 28
கொழும்பு அரசின் தலைவர்கள் கூறுவதைப் போன்று பன்னாட்டுச் சமூகத்தை நிராகரித்துச் செயற்பட முடியாது. பொறுப்புக்கூறல் விடயத்தில் ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட் >> 17

புதிய அரசமைப்பு குறித்து

## மைத்திரியுடன் பேச நேரம் கேட்கிறது மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 28
புதிய அரசமைப்பு உருவாக்கம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் மகிந்த அணியினர் விரைவில் சந்தித்துப் >> 16

## இலங்கைக்கு இதுவே இறுதி கால அவகாசம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்பதில் நம்பிக்கையீனம் அதிகரித்துச் செல்கின்றது. தற்போது வழங்கப்பட்ட கால அவகாசமே இலங்கைக்கு வழங்கப்படும் இறுதிக் கால அவகாசமாக இருக்கும்.
இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ் >> 15

முச்சந்தி முரளி



உவற்ற உணவு ஒறுப்பு லெமன் பவ்வோடதானே இருக்கும் பாருங்கோ...

சிறுப்பிட்டி இளைஞர்கள் படுகொலை;

## ஐந்து இராணுவத்தினருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை

யாழ்ப்பாண நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணம், சிறுப்பிட்டியில் இளைஞர்கள் இருவர் காணாமல் ஆக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் உள்ள 5 இராணுவத்தினருக்கும் எதிராக கொலைக் குற்றச்சாட்டுப் பத்திரம் தாக்கல் செய்யுமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது. சுருக்கமுறையற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறும் மன்று பொலிஸாருக்கு >> 17

## யாழ். பல்கலை மாணவர்கள் 13 பேருக்கு வகுப்புத் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 28
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட வரவேற்பு நிகழ்வுக்கு முதல் நாள் இரவு இடம்பெற்ற அசம்பாவிதங்கள் தொடர்பில் கலைப்பீடத்தின் 13 மாணவர் >> 17

## குற்றம் இழைத்தோரை மட்டுமே தண்டிக்க வலியுறுத்துகின்றோம்

### ஒட்டுமொத்த இராணுவத்தையும் அல்ல என்கிறார் முதல்வர் விக்கி

யாழ்ப்பாணம், மார்ச் 28
"போரின் போது குற்றம் இழைத்தவர்களை அடையாளம் கண்டு தண்டிக்குமாறு வலியுறுத்துகின்றோமே தவிர, ஒட்டுமொத்த இராணுவத்தினரையும் தண்டிக்குமாறு கேட்கவில்லை. அதனையே பன்னாட்டுச் சமூகமும் வலியுறுத்துகின்றன"
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
சுவிஸின் இலங்கைக்கான தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகைதந்தார். அவர் வடக்கு மாகாண >> 04

## "குடும்பத்தோட சாவுங்கோ" என்று கூறியே வெட்டினார்

### அச்சுவேலி முக்கொலை வழக்கில் சந்தேகநபரின் மனைவி சாட்சியம்

யாழ்ப்பாணம், மார்ச் 28
"நான்கு மணித்தியாலங்களாகப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். என்ன கூத்தா போடுறியள். குடும்பத்தோட சாவுங்கோ" என்று கூறி என்னைக் கழுத்தில பிடிச்சு தூக்கி வாளால் வெட்டினார். அடுத்தடுத்து மூவரைக் கோரமாக வெட்டிக் கொலை செய்தார்.
இவ்வாறு அச்சுவேலி கதிரிப்பாயில் நடைபெற்ற முக்கொலை வழக்கில் >> 04

## மீண்டும் ஒரு போர் மூள விடமாட்டோம்

கூறுகிறார் யாழ். கட்டளைத் தளபதி

யாழ்ப்பாணம், மார்ச் 28
போர் என்பது அரசியலின் தொடர்ச்சி என்று தெரிவிக்கப்படுவதில் மீண்டும் சிக்கிக்கொள்ள விரும்ப >> 17

## அடக்குமுறைக்கு எதிராகவே வீரவன்ச உணவை ஒறுத்தார்

இப்படிக் கூறுகிறது மகிந்த அணி

யாழ்ப்பாணம், மார்ச் 28
பிணையைப் பெறுவதற்கு அல்ல, இந்த நாட்டில் தலைதூக்கியுள்ள அரசின் பெரிய அடக்குமுறைக்கு எதிராகவே விமல்வீரவன்சஉணவு ஒறுப்புப் >> 04

# வடக்கில் பாதீனியத்தை கட்டுக்குள் வைக்க 72 பேர்

## நியமித்தார் விவசாயப் பணிப்பாளர் நாயகம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பாதீனியத்தை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசில் உள்ள உயர்மட்ட அலுவலர்கள் 72 பேர் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

72 அரச அலுவலர்களுக்கு இதற்கான அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகள் என்ற நியமனமும் அதற்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச அதிகாரி திருமதி சுகர்சிஹேரத் ஜெயவீர தெரிவித்தார்.

வடக்கில் பாதீனியத்தைக் கட்டுப்படுத்துவது, சட்ட நடவடிக்கையை எவ்வாறு கையாள்வது தொடர்பான சட்டம் சம்பந்தமான விளக்கவுரை, பயிற்சி என்பன கிளிநொச்சி விவசாயப் பயிற்சி நிலையத்தில் அண்மையில் வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தலைமையில் இடம்பெற்றது.

முதற்கட்டமாக பாதீனியம் வடக்கில் எவ்வாறு மையம் கொண்டது. அதன் தாக்கம், எதிர்காலத்தில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் மற்றும் பொதுமக்கள் எவ்வாறான தாக்கத்துக்கு உள்ளாகப் போகின்றனர் உள்ளிட்ட கணினி மூலமான விளக்கத்தை விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் வழங்கினார்.

தொடர்ந்து கருத்துரை வழங்கிய சட்டமா அதிபர் திணைக்கள மூத்த அரச பிரதிநிதி கூறியதாவது:

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா உள்ளிட்ட மொத்தப் பிரதேசத்தில் 873 ஏக்கர் நிலப் பரப்பில் பாதீனியம் பரவியுள்ளது. இந்தப் பாதீனியச் செடிகளை உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டியது அனைத்துப் பொது மக்கள், விவசாயிகள், காணிச் சொந்தக்காரர், உடைமையாளர். அரச காணிகள் ஆயின் அதன் அதிகாரிகள் முழுப் பொறுப்பாவர்.

எனவே இந்த விடயத்தை முழுமையாகக் கட்டுப்படுத்த உயர்மட்ட அரச அலுவலர்கள் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளாக நியமிக் கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களுக்கு அடையாள அட்டை, நியமனக் கடிதம் என்பன வழங்கப்பட்டுள்ளன.

அடையாள அட்டை, நியமனக் கடிதம் வழங்கப்படாத அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளுக்கு வடக்கு மாகாண விவசாய பணிப்பாளர், விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரால் அவை வழங்கப்படும்.

எனவே 72 அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களும் அந்தப் பிரதேச செயலாளர் மற்றும் விவசாயப் பயிற்சித் திணைக்களங்கள் மற்றும்நிறுவனங்களுடன் இணைந்து பாதீனியச் செடியைக் கட்டுப்படுத்தல் தொடர்பான நடவடிக்கையில் முழுமையாக இறங்கலாம். இதற்கான சட்டவரைவுகள், சில ஆவணங்களில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் சீராக்கங்கள் முடிவுற்ற பின்னர் இந்தத் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும்என்றார்.

இந்த நிகழ்வில் பயிர்பாதுகாப்புப் பிரதிப் பணிப்பாளர் எஸ்.எஸ் வெலிகம கலந்து சிறப்பித்தார். (சு-8,50)



## யாழ். மாவட்ட செயலகத்தில் தளபதிக்குப் பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம் மார்ச் 28

யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியாகப் பணியாற்றித் தற்போது பதவி உயர்வு பெற்றுச் செல்லும் மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் பிரிவு உபசார விழா யாழ். மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய யாழ் மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தில் மக்களின் பிரச்சினைகளை. மக்கள் சார்ந்த பிரச்சினைகளை நட்பு ரீதியாகத் தெரிவிக்கக் கூடியதாக வழிவகைகளைச் செய்த யாழ். கட்டளைத் தளபதியின் சேவைகள் பாராட்டக்கூடியவை. குறிப்பாகக் காணிப் பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் போன்றவற்றை உடனடியாகத் தெரிவித்துத் தீர்க்கக் கூடியவகையில் அவர் சேவையாற்றியுள்ளார்.

மனித வலுக் கொண்டு செய்ய வேண்டிய வேலைகள் எதுவாயினும் சிறப்பான தலைமைத்துவத்தின் கீழ் அவற்றை இலகுவாக செய்யக்கூடிய கட்டளைத் தளபதியின் சேவை பாராட்டப்படவேண்டியது என்றார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட வரைபடம் பொறிக்கப்பட்ட நினைவுப் பரிசு கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்கவால் யாழ். மாவட்ட செயலருக்கு வழங்கப்பட்டது. (சு)

*183 கிலோ கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டு*

## சந்தேகநபரின் பிணை விண்ணப்பம் யாழ். மேல் நீதிமன்றால் நிராகரிப்பு

183 கிலோ 600 கிராம் கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 5 வருடங்களுக்கு மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவரின் பிணை விண்ணப்பத்தை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்றும் நிராகரித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாவனை குறைவடைந்து வரும் இந்தத் தருணத்தில் சந்தேகநபரை பிணையில் விடுவிக்க முடியாது என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் கட்டளையிட்டார்.

பருத்தித்துறை அம்மன் கோயில் பகுதியில் 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி 183 கிலோ 600 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தனர் மற்றும் விற்பனை செய்தனர் என்ற இரண்டு குற்றச்சாட்டுக்களில் 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கைதாகிய தினத்திலிருந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஒரு சந்தேகநபர் சார்பில் அவரது சட்டத்தரணி மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார்.

இந்த வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.

"விதிவிலக்கான காரணங்களுக்காக சந்தேகநபர் ஒருவருக்குப் பிணை வழங்க முடியும். ஆனால் 183 கிலோ கேரள கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்தமை பெரும் குற்றமாகும்.

ஒரு சமூகத்தையே அழிக்கும் குற்றமாகும். இத்தகைய குற்றச்செயலில் ஈடுபடுவோரைப் பிணையில் விடுவிப்பது மிகவும் பாரதூரமான விடயமாகும். தற்பொழுது யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனை மற்றும் கடத்தல் குறைவடைந்து வருகின்றது.

இவற்றைக் கருத்தில் எடுத்து பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு சந்தேகநபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருக்க மன்று உத்தரவிடுகின்றது" என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கட்டளையிட்டார். சந்தேகநபர் சார்பில் முன்னர் ஒரு தடவையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டு மன்றால் நிராகரிக்கப்பட்டிருந்தது. (வ-ரி)

## அகதி முகாமிலுள்ள 22 ஈழத் தமிழரை நாடு கடத்த இந்தோனேசியா முயற்சி

ஜகார்த்தா, மார்ச் 28

இந்தோனேசியாவில் தங்க வைக்கப்பட்டுள்ள 22 ஈழத் தமிழ் அகதிகளையும் நாடு கடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தோனேசியக் கடலில் தத்தளித்த 44 இலங்கை தமிழ் அகதிகள் கடந்த ஆண்டு பல்வேறு அழுத்தங்களுக்குப் பின்னர் இந்தோனேசியாவில் தற்காலிகமாக தங்க அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் தமிழகத்திலிருந்து ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்தார் கள் என்று கூறப்பட்டது.

44 அகதிகளில் 5பேருக்கு அகதி நிலை வழங்கப்பட்டது. 17 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர். மீதமுள்ள 22 அகதிகளும் நாடுகடத்தப்படக்கூடிய ஆபத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## திருட்டுத் தொடர்பான விசாரணையில் பொலிஸார் மீது நீதிமன்றம் அதிருப்தி

*விளக்கம் தருமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 28

திருட்டு சம்பவம் தொடர்பில் பொலிஸ் பொறுப்பதிகாரியின் விசாரணை திருத்திகரமாக இல்லைாததனைக் கண்டறிந்த மல்லாகம் நீதிமன்று அது தொடர்பில் விளக்கமளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்குப் பணித்தது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு|; பட்ட பகுதியில் 2014ஆம் ஆண்டு பெண் ஒருவருடைய ஒரு லட்சம் ரூபா பணம் திருடப்பட்டது. அவரது கைப்பையுடன் அலைபேசியும் திருடப்பட்டது.

இது தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னரான விசாரணைகளுக்கு சந்தேகநபர் நீதிமன்றுக்குச் சமுகமளித்திருக்கவில்லை. பகிரங்க பிடியாணை மன்றால் வழங்கப்பட்டும் சந்தேக நபர் கைதுசெய்யப்படவில்லை. இந்த நிலையில் சந்தேகநபர் இல்லாமலேயே வழக்கு விசாரணை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் கருணாகரன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. திருட்டு நடைபெற்ற காலப்பகுதியில் மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய றொகான் மகேஸ் என்பவரின் சாட்சியம் மன்றில் பதிவு செய்யப்பட்டது.

"இந்தத் திருட்டுடன் தொடர்புடைய குற்றவாளியை கண்டுபிடிப்பது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. திருடப்பட்ட அலைபேசி இலக்கத்தை கொண்டு குற்றவாளியைக் கண்டுபிடிக்க எவ்வித முயற்சிகளை மேற்கொண்டீர்கள்" என்று நீதிவானால் கேட்டகப்பட்டது. எனினும் அப்போதைய நிலைய பொறுப்பதிகாரி தகுந்த முறையில் பதிலளிக்க தவறியமையால் நீதிவானால் அவர் மிகக்கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

அதனையடுத்தே, நிலைய பொறுப்பதிகாரியின் விசாரணையிலுள்ள தவறுகள் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டனவா? அல்லது விசாரணை செய்வதில் போதிய திறமை காணப்படவில்லையா? என்பது தொடர்பில் விசாரணை நடத்தி மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு நீதிவான் கருணாகரன் பணித்தார். (வ-4)

## யாழ். தளபதியாகிறார் தர்சன ஹெட்டியாராச்சி

கொழும்பு, மார்ச் 28

யாழ்.பிராந்தியத் துக்கான இராணுவக் கட்டளைத் தளபதியாக



மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி நியமிக் கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டது.

யாழ். பிராந்தியத்துக்கான கட்டளைத்தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க இராணுவத் தலைமை அதிகாரியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். (வ-5)

*விபத்தில் கைப்பற்றிய*

## பஸ்ஸை மீளளிக்க உத்தரவிட்டது யார்?

*பொலிஸாரிடம் கேள்வியெழுப்பியது நீதிமன்று*

யாழ்ப்பாணம், மார்ச் 28

விபத்தில் கைப்பற்றப்பட்ட தனியார் பேருந்து நீதிவான் மன்றில் முற்படுத்தப்படாமல் யாருடைய உத்தரவின் பேரில் மீளக் கையளிக்கப்பட்டது?

இவ்வாறு பொலிஸாரிடம் கேள்வி எழுப்பியது மல்லாகம் நீதிவான் மன்று. இது தொடர்பில் மன்றுக்கு விளக்கமளிக்குமாறு பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த வழக்கு மல்லாகம் நீதி மன்றில் நீதிவான் கருணாகரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் இந்த மாதம் தனியார் பேருந்து ஒன்று மோதி குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

விபத்தையடுத்து பேருந்தின் சாரதி மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். குறித்த வழக்கு மல்லாகம் நீதிவான் கருணாகரன் முன்னிலையில் கடந்த 17ஆம் திகதி எடுத்துக்கொள்ளப்பட்டது. சாரதியை எதிர்வரும் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் சாரதியின் பிணை விண்ணப்பம் நேற்று விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. விபத்தில் கைப்பற்றப்பட்ட பேருந்து மன்றில் பாரப்படுத்தப்படாமல் மீளவும் உரிமையாளர்களிடம் பொலிஸாரால் கையளிக்கப்பட்டு விட்டது. குறித்த பேருந்து மீள கையளிக்கப்பட்டமை தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரியிடம் நீதிவான் நேற்று விளக்கம் கேட்டார்.

பேருந்து யாருடைய உத்தரவின் பேரில் மீளகையளிக்கப்பட்டது? என்று நீதிவான் கேள்வியெழுப்பினார். இது தொடர்பில் பொலிஸாருக்குக் கடும் எச்சரிக்கையும் அவர் விடுத்தார். இது தொடர்பிலான அறிக்கையை நாளை (இன்று) மல்லாகம் நீதிவான் மன்றில் சமர்ப்பிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். சாரதியை பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.

(வ-4)

# கடற்படைக்கு நன்னீர் கொண்டு செல்வதை உடனே நிறுத்துங்கள்

*சந்திரிகா குமாரதுங்கவிடம் பொன்னாலை மக்கள் கோரிக்கை*

யாழ்ப்பாணம், மார்ச் 28

சுழிபுரம் சம்பில்துறையில் உள்ள கடற்படை முகாமுக்கு பொன்னாலையில் இருந்து தினமும் 40 ஆயிரம் லீற்றர் தொடக்கம் 50 ஆயிரம் லீற்றர் வரையான தண்ணீர் எடுத்துச் செல்லப்படுகிறது. அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்கவிடம் பொன்னாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தினால் பொன்னாலைக் கடற்கரையில் அமைக்கப்படவுள்ள உவர்நீர்த் தடுப்பணைக்கான வேலைகளை முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரதுங்க கடந்த சனிக்கிழமை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது, பொன்னாலை மற்றும் கல்விளானில் உள்ள அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுதல் தொடர்பாகப் பொன்னாலைக் கிராம அபிவிருத்திச் சங்கம் சந்திரிகாவிடம் மனு ஒன்றைக் கையளித்தது. அந்த மனுவிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடற்படையினர் தினமும் பொன்னாலையிலிருந்து நன்னீரை எடுத்துச் சென்றுகொண்டிருப்பதால் அந்தக் கிணறுகளில் உள்ள நன்னீரின் தன்மையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலைமை தொடர்ந்தால் அடுத்துவரும் சில வருடங்களில் நன்னீர் உவர் நீராக மாறும் அபாயம் ஏற்படும்.

பொன்னாலையில் உள்ள மக்களுக்குத் தினமும் காலை ஒரு மணித்தியாலம் மட்டும் நன்னீர் விநியோகிக்கப்பட்டுகொண்டிருக்கும் நிலையில், கடற்படையினர் பெருமளவு நீரை எடுத்துச் செல்வது எந்த வகையிலும் நியாயம் அற்ற செயற்பாடாகும்.

பொன்னாலையில் நன்னீர் வளம் இல்லாமற்



போனால் கடற்படையினர் கொழும்பில் இருந்து கப்பல்களிலோ விமானம் மூலமாகவோ நன்னீரைக் கொண்டுவந்து பயன்படுத்த முடியும். ஆனால் சாதாரண மக்கள் நன்னீருக்காக ஆங்காங்கே அலைய வேண்டிய நிலை ஏற்படும் என்றுள்ளது.

பொன்னாலைப் பிரதேசம் அண்மையிலேயே மீள் குடியேற்றப்பட்ட இடம் என்பதால் அங்கு வீடு அற்றவர்களுக்கு வீட்டுத் திட்டங்களை வழங்கி, வீதிகள், குடிதண்ணீர்ப் பிரச்சினை போன்ற உள்ளகக் கட்டமைப்புக்களைச் சீராக்கவேண்டிய தேவைகள் அதிகம் உள்ளன எனவும் மேற்படி மனுவில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொன்னாலை, கல்விளான் மக்கள் மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதை நிவர்த்தி செய்வதற்காக அங்கு ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று அமைக்கப்படவேண்டியதன் அவசியமும் இருக்கின்றது.

மேற்படி விடயங்கள் அனைத்தும் வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் பொன்னாலை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மேற்படி மனுவில் கூறப்பட்டுள்ளது..

இந்த மனுவின் பிரதிகள் நேற்று அங்கு வருகை தந்த சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே ஆகியோருக்கும் வழங்கப்பட்டன.

மனுவைப் பெற்றுக்கொண்ட சந்திரிகா குமாரதுங்க, இந்த விடயங்கள் தொடர்பாக விரைவில் சாதகமான பதில் வழங்குவதாகக் கூறினார். (து-8)



# நாய்களுக்கு இருக்கும் மதிப்பு, மரியாதை கூட எமக்கு இங்கு இல்லை

*கேப்பாபிலவு மக்கள் கவலை*

முல்லைத்தீவு, மார்ச். 28

இந்த நாட்டில் நாய்களுக்கு உள்ள மரியாதை கூட எமக்கு இல்லை எனக் கேப்பாபிலவு மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவில் உள்ள 482 ஏக்கர் பூர்வீகக் காணிகளை விடுவிக்கக் கோரி 138 குடும்பங்கள் முல்லைத்தீவு மாவட்டப் பாதுகாப்புப் படைத் தலைமைக் காரியாலயம் முன்பாக 27ஆவது நாளாகவும் மக்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

இரவு பகலாக நாங்கள் போராடி வருகின்றோம். வெயிலின் கொடுமையாலும், நுளம்பின் தாக்கத்தாலும் குழந்தைகள் நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்கள். எங்கள் நியாயமான கோரிக்கைக்கு நல்லாட்சி அரசு தகுந்த பதிலைத் தரவேண்டும். அரசு எங்களை மேலும் துன்பகரமான நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

நாட்டில் நாய்களுக்கு இருக்கும் மதிப்பும் மரியாதையும் எங்களைப் போல நிலத்துக்காகப் போராடி வரும் மக்களுக்கு இல்லை என்பது தெளிவாகத் தெரிகின்றது என்றனர்

தமது போராட்டத்துக்கு ஆக்கபூர்வமான முடிவை ஒரு கிழமைக்குள் பெற்றுத் தாருங்கள் என தம்மைச் சந்தித்த மக்கள் பிரதி நிதிகளிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-7)

# வடக்கு கிழக்கில் புலிகள் மீளெழுச்சி

*சிங்கள அமைப்புக்கள் குற்றச்சாட்டு*

கொழும்பு, மார்ச் 28

நாட்டில் தற்போதுள்ள தலைமைத்துவங்கள் யார் என்பதே தெரியாதுள்ளது. நாட்டின் வளங்களைச் சீனாவுக்கும் இந்தியாவுக்கும் விற்பனை செய்கின்றனர். மறுபுறத்தில் வடக்கு, கிழக்கிலுள்ள இராணுவம் முடக்கி வைக்கப்பட்டுள்ளதால் புலிகளும் தமிழ் பிரிவினைவாத அமைப்புக்களும் மீண்டும் தலைதூக்கியுள்ளன.

இவ்வாறு பொதுபல சேன, ராவணா பலய, சிங்கள ராவய, தாதியர் சங்கம் ஆகிய சிங்கள அமைப்புக்கள் ஒருமித்துக் குற்றம்சாட்டியுள்ளன.

தற்போதைய ஆட்சியாளர்களை வீட்டுக்குத் துரத்த வேண்டிய அவசியம் தோன்றியுள்ளதை நாம் உணர்ந்துள்ளோம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்துக்குள் இவர்களை வீட்டுக்குத் துரத்துவோம் எனவும் அந்த அமைப்புக்கள் சூளுரைத்துள்ளன.

நாரஹேன்பிட்டி அபயராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்படி அமைப்புக்கள் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தன. (த)

# ரஜனியின் பயணத்தை நிறுத்தியதற்கு எதிராக நல்லூரில் போராட்டம்





யாழ்ப்பாணம், மார்ச் 28

சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்தின் யாழ்ப்பாணப் பயணத்துக்குத் தடை ஏற்படுத்தியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, நல்லூரில் நேற்று மாலை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. பேருந்துகளில் ஏற்றி வரப்பட்ட சுமார் 300 பேர் வரை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, முல்லைத்தீவு நகரிலும் நேற்று மதியம், இதேபோன்றதொரு போராட்டம் நடத்தப்பட்டது. அதில் பத்துக்கும் குறைவானோரே பங்குபற்றியிருந்தனர்.

லைக்கா நிறுவனத்தால் வவுனியாவில்

>> 04

# சாவகச்சேரி வைத்தியசாலையில் டெங்கு ஒழிப்புத் துப்புரவுப் பணி

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்களாக இனங்காணப்பட்ட பகுதிகள் நேற்று வாகனம் மூலம் துப்புரவு செய்யப்பட்டன.

கடந்த மாதங்களில் இந்த வைத்தியசாலையில் 300க்கு மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெற்றுச் சென்றுள்ளனர். டெங்கு நுளம்பு உற்பத்தியாகாமல் சுகாதாரத் திணைக்களத்தினரால் புகையூட்டல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதிலும் வளாகத்தில் பல இடங்களில் புற்கள் வளர்ந்து காணப்பட்டன. அத்துடன் வைத்தியசாலை மலக் கழிவுகள் எரித்து அழிக்கும் எரியூட்டி பழுதடைந்து காணப்பட்டதால் வளாகத்தில் ஓரிடத்தில் குழி வெட்டி கழிவுகள் போடப்பட்டு வந்தன. இங்கு போடப்படும் கழிவுகள் பறவைகளாலும் மிருகங்களாலும் எடுத்துச் செல்லப்பட்டுக் கண்ட இடங்களிலும் போட்டுச் சுகாதாரச் சீர்கேட்டை ஏற்படுத்தியிருந்தன. அத்துடன் வடிகால்களில் நீர் தேங்கி டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய நிலை காணப்பட்டதால் வைத்தியசாலை வளாகத்தைத் துப்புரவு செய்ய 15 நாள்கள் கால அவகாசம் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழங்கப்பட்டது.

இந்த விடயங்கள் ஊடகங்களில் செய்தியாக வெளிவந்ததையடுத்து மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பின் பேரில் பிராந்திய சுகாதார பணிப்பாளர் பார்வையிட்டு வைத்தியசாலை வளாகத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்யுமாறு பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டிருந்தார்.

சாவகச்சேரி இளைஞர் குழுவினர் கடந்த சனிக்கிழமை வைத்தியசாலைச் சவச்சாலை அமைந்துள்ள பகுதியில் சிரமதானம் செய்தனர். முன்னைய காலங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பொது அமைப்புகள் மாதத்தில் ஒரு தடவை வைத்தியசாலையில் சிரமதானம் செய்து வந்தனர்.

வைத்தியசாலையில் பணிபுரியும் சிற்றூழியர்கள் மூலம் தினமும் துப்பரவு செய்யமுடியாதா என வைத்தியசாலை நிர்வாகத்திடம் கேட்டபோது, 2 ஆண் தொழிலாளர்களே கடமையாற்றுகின்றனர். இவர்களை வெளி நோயாளர் பிரிவு, விடுதி போன்றவற்றில் கடமைக்கு விடவேண்டிய நிலை உள்ளது. ஏனையோர் பெண்களாக உள்ளதால் சுற்றாடலைத் துப்புரவு செய்யும் பணிகளை இவர்கள் மூலமே மேற்கொள்ளவேண்டியுள்ளது என வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (த-9)

# முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்.மார்ச் 28

அளவெட்டி முற்போக்கு முன்பள்ளிச் சிறார்களின் வருடாந்த விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு முன்பள்ளி முன்றிலில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

நிலையத்தலைவர் க.மயூரதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## ரஜனியின்...

அமைக்கப்பட்ட வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் பங்கு கொள்வதற்காக ரஜனிகாந் யாழ்ப்பாணத்துக்கு அடுத்த மாதம் 9 ஆம் திகதி வருகை தரவிருந்தார். ரஜனியின் இந்தப் பயணத்துக்குத் தமிழகத்தில் கடும் எதிர்ப்பு எழும்பியது. இதனையடுத்து தனது பயணத்தைக் கைவிடுவதாக ரஜனி அறிவித்திருந்தார்.

ரஜனியின் யாழ்ப்பாணப் பயணத்தைத் தடுத்த தமிழக அரசியல்வாதிகளைக் கண்டித்துப் போராட்டம் நடைபெறும் என்றும் அதற்கான அழைப்பு முகநூல் ஊடாக நேற்றுமுன்தினம் பகிரப்பட்டிருந்தது. அத்துடன் நேற்று முன்தினம் இரவோடு இரவாக யாழ்ப்பாண நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுவரொட்டியும் ஒட்டப்பட்டிருந்தது.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில், நல்லூர் கோயில் பின்புறமாக குளிர்களி நிலையங்கள் அமைந்துள்ள பகுதியில், பேருந்துகளில் ஏற்றி வரப்பட்ட மக்கள் இறக்கப்பட்டனர். சுமார் பத்துப் பேருந்துகளும், சில ஹைறயேஸ் வாகனங்களிலும் வந்திறங்கிய போராட்டக்காரர்கள் அங்கிருந்து பேரணியாக நல்லூர் கோயில் முகப்பை அடைந்தனர். அங்கு சுமார் அரை மணி நேரத்துக்கும் அதிகமாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சிறுவர்கள், இளையோர், வயோதிபர்கள் என்று சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். போராட்டக்காரர்கள் தாங்கிப் பிடித்திருந்த பதாகைகள், கட்டவுட்களில் மிக மோசமான எழுத்துப் பிழைகள் காணப்பட்டன.

வேலணை, அராலி, வவுனியா போன்ற பிரதேசங்களிலிருந்தே அதிகளவானவர்கள் வந்திருந்தனர். வீடு வழங்குவதாகச் சொன்னார்கள் வந்தோம் என்று பலர் தெரிவித்தனர். போராட்டத்தில் ஈடுபட்ட சிலர், ரஜனியின் வருகையைத் தடுத்த தமிழக அரசியல்வாதிகளைக் கண்டிப்பதாகவும் குறிப்பிட்டனர். போராட்டம் முடிந்ததும் மக்கள், தாங்கள் வந்த பேருந்துகளில் திரும்பிச் சென்றனர். (த-5-37-101)

## குடும்பத்தோட...

சந்தேகநபரான தனது கணவன் தனஞ் செயன் மீது குற்றச்சாட்டுக்களை முன் வைத்தார் முதன்மைச் சாட்சியான அவரது மனைவி. இந்த வழக்கின் தொடர் விசாரணைகள் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று ஆரம்பமானது.

முதலில் குற்றப்பத்திரிகை தமிழ் மொழியில் எதிரிக்கு வாசித்துக்காட்டப்பட்டது.

"2014ஆம் ஆண்டு மே மாதம் 4ஆம் திகதி இரவு 12.30 மணியளவில் அச்சுவேலியில் நற்குணான்ந்தன் அருள்நாயகி என்பவரது வீட்டுக்குள் அத்துமீறி உட்பிரவேசித்துச் சென்ற தனஞ்செயன் அங்கு ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த மூன்று பேரை வாளால் வெட்டி உயிர் பிரியச் செய்தார்.

இரண்டு பேருக்கு வாளால் வெட்டிக்காயம் ஏற்படுத்தினார். எதிரிக்கு எதிராக ஐந்து குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனால் இந்த வழக்குடன் தொடர்புடைய சாட்சிகளின் சாட்சிப் பதிவுகள் நடைபெறும்" என்று மன்று அறிவித்தது.

இந்த வழக்கில் முதன்மைச் சாட்சியான தனஞ்செயன் தர்விகா தனது சாட்சியத்தில் தெரிவித்ததாவது:

அச்சுவேலி கதிரிப்பாயில் நாங்கள் வாடகைக்கு இருந்த வீட்டில் இரவு 12 மணியளவில் சம்பவம் நடந்தது. நற்குணானந்தன் அருள்நாயகி என்னுடைய அம்மா. நற்குணானந்தன் சுபாங்கன் என்னுடைய தம்பி. யசோதரன் மதுசா என்னுடைய அக்கா. தங்கவேல் யசோதரன் என்னுடைய அக்காவினுடைய கணவர். நான் எனது மகன் விஸ்ணு ஆகியோர் வீட்டில் இருந்தோம். சம்பவ தினமன்று, அம்மாவும் நானும் தம்பியும் பெரிய அறைக்குள் உறங்கினோம். அக்காவும் அத்தானும் என்னுடைய மகனும் மற்றொரு அறைக்குள்ள உறங்கினார்கள்.

நான் நித்திரையில் இருக்கும் போது எவரோ கூரான ஆயுதத்தால் வெட்டுவது போன்று இருந்தது. கண்விழித்தபோது அம்மாவும் தம்பியும் எழுந்து நின்றிருந்தனர். அக்காவை தனஞ்செயன் வெட்டிவிட்டான் என்று அம்மா கூறினார். எனது கணவர் தனஞ்செயன் வாளுடன் நின்றதனைக் கண்டேன். சின்னதாக ஒரு வெளிச்சமும் அவரிடம் இருந்தது. அவரைக் கண்டதும் நான் வெளியில் ஓடினேன். அந்த நேரம் அக்காவும் அத்தானும் எங்களைக் காப்பாற்றுங்கோ என்று கத்தினார்கள். என்னை வந்து எனது கணவரான தனஞ்செயன் கழுத்தில் பிடித்தார். "நான்கு மணித்தியாலயங்களாக பார்த்துக்கொண்டிருக்கிறேன். என்ன கூத்தா போடுறியள். குடும்பத்தோட சாவுங்கோ" என்று கூறி கழுத்தில பிடிச்சு தூக்கி வாளால் இடது கை, தோள்மூட்டு, முள்ளந்தண்டு மற்றும் முழங்கைக்கு மேற்பட்ட பகுதிகளில் ஓங்கி வெட்டினார். பின்னர் என்னைத் தூக்கி எறிந்தார். அம்மா படுத்திருந்த அறைக்குள் தனஞ்செயன் போனார். நான் கேற்றுக்கு வெளியில் சிறிதுதூரம் வந்துவிட்டேன். அந்த நேரம் நிலவு. வீட்டு மதிலால் எட்டிப்பார்த்தால் வீட்டுக்குள்ள என்ன நடக்கின்றது என்பது தெரியும். வீட்டு வெளி வெளிச்சத்தில் பார்த்தபோது, தனஞ்செயன் வாளுடன் நிற்பது தெரிந்தது. அந்த நேரம் அக்காவினுடைய கணவரும் அங்கு வந்தார். அவருக்கு தலையில் காயமிருந்தது. தன்னால் ஏலாமல் இருக்கிறது என்றும் அக்கா மதுவுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றும் அவர் கூறினார். பின்பு நாங்கள் இருவரும் ஓட்டோவில் ஏறி அச்சுவேலி மருத்துவமனைக்குச் சென்றுவிட்டோம். எதிரிக் கூண்டில் நிற்கும் நபர்தான் என் கணவர். அவர்தான் என்னை வெட்டியவர் என்று சாட்சி சுட்டிக் காட்டினார்.

எனது அக்கா மதுசாவைத் தான் திருமணம் செய்யப் போகிறேன் என்று சிறிது காலத்துக்கு முன்னர் தனஞ்செயன் கேட்டார். "நீ இரண்டு வருடத்தில் இறந்து விடுவாய். எனது மகனைப் பார்த்துக் கொள்ள மதுசாவை நான் திருமணம் செய்யப்போகின்றேன்" என்று அலைபேசி மூலம் அவர் தெரிவித்தார். அக்காவைத் திருமணம் செய்து தரச்சொல்லி கேட்டார். அதனால்தான் அவர் இவ்வாறு செய்தார். 21நாள்கள் அச்சுவேலி வைத்தியசாலையில் நான் சிகிச்சை பெற்றேன். வலது பக்க கன்னத்தில் காது வரை வெட்டுக்காயமும் இடது பக்க கன்னத்தில் நடுக்குழியில் இருந்து இடதுபக்கக் காது வரை வெட்டுக்காயமும் இருந்தன.

இடது கையில் பெருவிரலில் கீழ்நோக்கி மணிக்கூண்டு வரை வெட்டுக்காயமும் ஒவ்வொரு விரலும் வெட்டப்பட்ட நிலையில் மடிக்க முடியாத நிலை இருந்தது.

அம்மாவும் தம்பியும் அக்காவும் இறந்துவிட்டார்கள் என்பது சம்பவம் நடந்து எட்டு நாளைக்குப் பின்புதான் தெரியும். அதுவும் அவர்கள் என்னை வந்து மருத்துவமனையில் பார்க்காத காரணத்தாலேயே நான் கேட்டேன். அவர்கள் ஏன் என்னைப் பார்க்க வரவில்லை என்று அப்பொழுதுதான் உறவினர்கள் கூறினார்கள்.

ஒன்றரையடி நீளமுள்ள நீட்டுக்கத்திதான் தனஞ்செயன் வைத்திருந்தார். வாளைக்கண்டால் இனங்காட்ட முடியும் என்று சாட்சி மன்றில் தெரிவித்தார்.

தடயப்பொருள்கள் வந்ததும் 4ஆவது சாட்சியை மீண்டும் மன்றுக்கு அழைத்து தடயப்பொருள்களை இனங்காட்ட உத்தரவு தருமாறு அரச சட்டத்தரணி மன்றிடம் கோரினார். மன்று அனுமதி வழங்கியது.

குறுக்கு விசாரணை செய்த எதிரி தரப்புச் சட்டத்தரணி வி.திருக்குமரன், எதிரிக்கூண்டில் நிற்கும் எதிரியான உங்களது கணவர் நீங்கள் பிரிந்து வாழ்ந்த காலத்திலிருந்தே அவர் தனது பிள்ளையைப் பார்க்க கேட்டிருக்கிறார். நீங்கள் அனுமதிக்கவில்லை என்று கூறினார். அதற்கு சாட்சி ஆம், நான் எப்பொழுதும் அனுமதி கொடுக்கவில்லை என்று பதிலளித்தார்.

5ஆவது சாட்சியான தங்கவேல் யசோதரன் தனது சாட்சியத்தில்,

பக்கத்து அறையில இருந்து எங்களை காப்பாற்றுங்கோ தனஞ்செயன் வெட்டிவிட்டான் என்ற சத்தம் வந்தது. எல்லோரும் சேர்ந்து கத்தியதால் குரலை என்னால் இனங்காண முடியவில்லை. சில விநாடிகளுக்குள் வெளியில் வந்துவிட்டேன். வீட்டின் முன் வெளிச்சத்தில் தனஞ்செயன் ஒன்றரையடி நீளமுடைய கத்தி வைத்திருந்ததனைக் கண்டேன். சத்தம் கேட்ட அறைக்குள் இருந்து ஓடி வந்த அவர் கத்தியால் ஓங்கி என்னை வெட்டினார். வலக்கையில் முழங்கைக்கு கீழே வெட்டு விழுந்தது. கையைத் தூக்க முடியாமல் இருந்தது. சுய நினைவை முழுமையாக இழக்கவில்லை. நடப்பது தெளிவாகத் தெரிந்தது. எனது உடலில் எட்டுக்காயங்கள் இருந்தன என்றார்.

2ஆவது சாட்சியான கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம், 6ஆவது சாட்சியான கணபதிப்பிள்ளை செல்வநாயகமும் சாட்சியமளித்தனர்.

"காப்பாற்றுங்கோ காப்பாற்றுங்கோ என கூப்பிட்ட சத்தம் கேட்டது. நான் வெளியில் வந்து பார்த்தேன். இரண்டு பேர் வெளியில் நின்றார்கள். நான் அவர்களை அச்சுவேலி மருத்துவமனையில் கொண்டு போய்ச் சேர்த்தேன்" என்று 3ஆவது சாட்சியான பொன்னுத்துரை கௌரிகாந்தன் சாட்சிமளித்தார்.

ஏனைய சாட்சிகளின் சாட்சியம் இன்று தொடரவுள்ளது. தடயப்பொருள்கள் அரச பகுப்பாய்வு நிலையத்தில் பகுப்பாய்வு செய்யப்பட்டு தயார் நிலையில் இருப்பதாகவும் அதைப்பெற்று வருமாறு பொலிஸார் ஒருவரையும் அனுப்பிவைத்தார்.

இதன்போது எதிர்க்கூண்டில் நின்ற எதிரி, தனது குழந்தையை தூர நின்று பார்ப்பதற்காகவாவது அனுமதி வழங்குமாறு நீதிபதியிடம் கேட்டார். அந்தக் கோரிக்கையை ஏற்ற நீதிபதி, நாளை (இன்று) குழந்தையை மன்றுக்கு அழைத்துவருமாறு பணித்தார்.

வழக்கில், சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டத்தரணி நா. நிஷாந் முன்னிலையானார். எதிரி தரப்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், பா.ரஞ்சித் குமாரும், பாதிக்கப்பட்டவர்கள் நலன்சார்பில் சட்டத்தரணிகளான கௌதமன், பார்த்தீபன் ஆகியோரும் முன்னிலையாகினர். (வ-4-ரி)

## அடக்கு முறைக்கு...

போராட்டத்தை முன்னெடுக்கின்றார். இவ்வாறு மகிந்த அணி தெரிவித்தது. அரச சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவை மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட பொது எதிரணியினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

தமக்குப் பிணை வழங்காமல் இருப்பதற்கு மேல் நீதிமன்றம் தீர்மானத்துள்ளமைக்குஎதிராக வெலிக்கடை சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள விமல் வீரவன்ச நேற்று முன்தினம் சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார்.

விமல் வீரவன்சவைப் பார்வையிடுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, உதய கம்மன்பில, மகிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட பொது எதிரணி உறுப்பினர்கள் வெலிக்கடை சிறைச்சாலைக்கு நேரடியாகச் சென்றிருந்தனர். விமலைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் உதய கம்மன்பில கருத்து வெளியிட்டார்.

"அரசின் அடக்குமுறைக்கு எதிராகவே இந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தை விமல் வீரவன்ச முன்னெடுக்கிறார். தான் இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பது பிணையைப் பெறுவதற்கு அல்லவென்பதை ஊடகங்களுக்கு விமல் வீரவன்ச கூறச் சொன்னார். பிணை வழங்குவது என்ற விடயம் நீதிமன்றச் செயற்பாடாகும். இந்த நாட்டில் தலைதூக்கியுள்ள பெரிய அடக்குமுறைக்கு எதிராகவே விமல் வீரவன்ச இந்தப் புரட்சியை செய்கின்றார். ஒரு பக்கம் நாட்டைப் பிரிக்கும் கிளர்ச்சி இடம்பெறுகின்றது. மறுபுறம் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் இருந்த மோசமான யுகத்தை நோக்கி நாடு பயணிக்கின்றது. அன்று ஜே.ஆர்.ஜயவர்தன தொழிற்சங்களில் கைவைத்தார். அடுத்ததாக மாணவர்கள் மீது, அடுத்ததாக மருத்துவர்கள் மீது, அடுத்ததாக எதிர்க்கட்சி மீது, அடுத்ததாக ஊடகவிலாளர்கள் மீது, இறுதியாக அனைத்து மக்கள் மீதும் அவர்கள் கைவைத்தனர். ஆயுததாரிகள் இலக்கத் தகடுகள் அற்ற வாகனங்களில் வந்து முழு நாட்டையும் கடத்திச் செல்லும் மோசமான யுகம் வந்தது. அன்று மக்களைப் பாதுகாப்பதற்கு யாராலும் முடியாமல்போனது. ஆகவே, இந்த அடக்குமுறை தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவே இந்தப் புரட்சி ஆரம்பிக்கப்பட்டுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். (வ-5)

## குற்றம்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை அவரது இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க செயலகத்தின் தலைவியும் அரச தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க போரை வெற்றிகொண்ட இராணுவத்தினரை தண்டிக்க இடமளிக்க முடியாது என்று தெரிவித்தார். அவரின் கருத்து தொடர்பில் செய்தியாளர்கள் முதலமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

"சந்திரிகா அம்மையார் கூறியது புதுமையான விடயமல்ல. இதே கருத்தையே எமது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் குறிப்பிட்டார். போரின் போது குற்றமிழைத்த இராணுவத்தினரையே தண்டிக்குமாறு நாமும் வலியுறுத்துகின்றோம். பன்னாட்டுச் சமூகமும் வலியுறுத்துகின்றன.

அதனை விடுத்து போரை வெற்றிகொண்ட ஒட்டுமொத்த இராணுவத்தினரையும் தண்டிக்குமாறு நாமும் கேட்கவில்லை. பன்னாட்டுச் சமூகமும் கேட்கவில்லை.

ஒரு பாடசாலையை எடுத்துக்கொண்டால், அந்த பாடசாலையில் ஒரு மாணவன் தவறுசெய்தால், அந்த மாணவனை தண்டிக்க வேண்டுமே தவிர, ஒட்டுமொத்தமாக பாடசாலையைக் குறை தண்டிக்கக் கூடாது.

தனிப்பட்ட நபர் ஒருவர் சட்டத்துக்கு முரணான வகையில், போர் நடைபெற்ற காலத்திலும் சரி, போர் முடிவுற்ற காலத்திலும் சரி குற்றமிழைத்திருந்தால் அவரை அடையாளம் கண்டு தண்டிக்க கோருகின்றோம். இந்த விடயத்தையே சந்திரிகா அம்மையாருக்கும் கூறுகின்றேன்" என்று என்று வடக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (வ-106)


மரண அறிவித்தல்கள்

**குமாரசாமி இராசரத்தினம்**



விளாத்தியடி வீதி, சுதுமலை தெற்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் தற்போது இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி இராசரத்தினம் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி தம்பதியரின் அன்பு மகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் செல்வரத்தினம் (சின்னமணி), குணபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராமலிங்கம் ஆனந்தராசாவின் அன்பு மைத்துனரும் ஆ.சிவசக்தி, ஆ.ஜெயமோகன் ராஜ் (சமுர்த்தி உத்தியோகத்தர், உடுவில்), ஆ.தயானி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணியளவில் இணுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
இணுவில் மேற்கு, இணுவில்.
0770440155 (மருமகன்)

**இம்மானுவேல் அன்ரன் (தவம்)**

**(முன்னாள் ஊழியர் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம்)**



பிராயடி மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், உயரப்புலம் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட இம்மானுவேல் அன்ரன் (தவம்) நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இம்மானுவேல் - இராக்கினி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான றிச்சேட் - எலிசபெத்கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும் பற்றீசியா சிறிமாவதியின் (ஓய்வு பெற்ற ஊழியர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) அன்புக்கணவரும் சுகந்தினி (பிரான்ஸ்), சுகந்தன், நிலோஜினி, கஜனி (பிரான்ஸ்), ரஜேந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ரெஜினோல்ட் (பிரான்ஸ்), சாந்தி, லெஸ்லி, அச்சுதன் (பிரான்ஸ்), மயூரி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மேரிலின்வின் (மலர்) காலஞ்சென்றவர்களான யோகா, ஜெயா ஆகியோரின் அன்புச்சகோதரனும் லிற்றன், சந்திராவதி, பத்மாவதி, திலகேந்திரன், விமலகுலேந்திரன், தனேந்திரன், இன்பவதி ஆகியோரின் அன்புமைத்துனரும் சாம்சன், சானுஜா, டினோசன், தரணிகா, கேதாரணி, சாள்ஸ், டொறின், ஜெறோம், செறின், கரிசன், சர்மினி, நிவேதினி, சாருயன், தஸ்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
உயரப்புலம், ஆனைக்கோட்டை.
077 4502 218, 077 844 3590, 021 221 3394

## இ. போ.ச. மன்னார் சாலைக்கு புதிய முகாமையாளர் நியமனம்

மன்னார்,மார்ச் 28

இலங்கைப் போக்குவரத்துச் சபையின், மன்னார் சாலையின், புதிய முகாமையாளராக கிளிநொச்சி சாலையில் கடமையாற்றிய கனகலிங்கம் காண்பபன் நியமிக்கப் பட்டுள்ளார்.

அவர் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலையில் கையொப்பமிட்டுத் தனது பொறுப்பை ஏற்றுக் கொண்டார். புதிய முகாமையாளரைச் சாலைப் பணியாளர்கள் வைபவ ரீதியாக வரவேற்றனர். இதன் போது சர்வமத தலைவர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் மன்னார் சாலைக்குப் புதிய முகாமையாளராக கடந்த 15 வருடங்களின் பின்னர் தமிழர் ஒருவர் கடந்த 7 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். மன்னார் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த ஏ.ஜே.லெம்பேட் என்பவரே இலங்கை அரச போக்குவரத்து சபையின் மன்னார் சாலைக்குப் புதிய முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் குறித்த நியமனத்தில் அரசியல் ரீதியாக பல்வேறு சர்ச்சைகள் ஏற்பட்டு வந்தன.

இந்த நிலையில் மன்னார் வங்காலை கிராமத்தைச் சேர்ந்த ஏ.ஜே.லெம்பேட் கிளிநொச்சி முகாமையாளராகவும், ஏற்கனவே மன்னார் முகாமையாளராக கடமையாற்றிய முஹமட் சாஹீர் வவுனியா முகாமையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ -56)

### பெயர்மாற்றம்

492/05 1/1 காலி வீதி, கொழும்பு - 06 இல் வசிக்கும் நரேந்திரன் கனகரத்தினம் ஆகிய நான் எனது பெயரை ராஜ் கனகரத்தினம் என மாற்றியுள்ளேன். இனிவரும் எல்லா ஆவணங்களிலும் புதிய பெயரினை பயன்படுத்துவேன் என அறியத்தருகிறேன்.

### விற்பனைக்கு

ரெட் லேடி பப்பாசி கன்றுகள் விற்பனைக்கு உண்டு.

076 695 3173

### பணிப்பெண் தேவை

தெஹிவளையைச் சேர்ந்த தமிழ் குடும்பத்திற்கு வீட்டுப் பணிப்பெண் தேவை.

077 592 9501

### தவறிவிட்டது

புலேந்திரன் திபாகர் ஆகிய எனது முக்கிய ஆவணங்களுடன் கூடிய File உடன் Side Bag 22.03.2017 மதியவேளை யாழ் நாவலர் பகுதியில் தவறவிடப்பட்டது. விவரம் அறிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 112 2794, 077 164 7771

### மணமகள் தேவை

- 85 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13½ பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.
- 85 இல் பிறந்த 12 இல் சூரியனும் செவ்வாயும் 14 பாவமுடைய பிரான்ஸ் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 86 இல் பிறந்த 12 இல் செவ்வாய் 29 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 81 இல் பிறந்த 10½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 26¾ பாவமுடைய நோர்வே பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 13¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
- 87 இல் பிறந்த 10 இல் செவ்வாய் 9½ பாவமுடைய அவுஸ்ரேலியா பிரஜா உரிமை பெற்ற Phd இஞ்சினியர் மணமகனுக்கு இஞ்சினியர், டாக்டர் மணமகள் தேவை.
- 89 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 21¼ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு:
கமலக்கண்ணன் திருமண சேவை
இல. 62, இராமலிங்கம் வீதி,
முடமாவடி, பூங்கனிச்சோலையடி.
T.P: 077 607 0862

CAMBRIDGE ENGLISH
Language Assessment
Authorised Centre




Accredited by EQAA European Quality Assurance Agency

DIPLOMA IN ENGLISH
Level 01 & Level 02
(2- 4 Months)
A General English course designed to cover and improve the four main language skills of Reading, Writing, Listening & Speaking.

IELTS
PREPARATION COURSE
IELTS Registration & Exam Preparation Classes
Weekdays Evening/ Weekend Morning/ Weekend Evening Classes

- All material used are updated and directly from UK.
- Conducted by experienced and qualified lecturers.
- Free Gift Pack with a CD for listening.

Why Study ICBT ?
- Qualified Lecturer Panel
- High Quality Learning Experience
- Cafeteria/Library/Computer Laboratory/Recreation Area/ Modern Lecture Halls.
- Easy Payment schemes

0770 746 553 | 0769 289 784

ICBT CAMPUS JAFFNA
580, Hospital Rd., Jaffna
Tel: (+94)214 777 888
Fax: (+94)654 777 890
Email : jaffna@icbtcampus.edu.lk

National Business Excellence 2016 | 2015 | 2014 | 2013
Gold Award Winner
Education Service Sector
www.icbt.lk

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு

# இந்தியன் செலக்ஷனின்
# மாபெரும் மெகா சேல்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்



அதிரடி விலைக்கழிவில் சகல விதமான சாறிவகைகள், சல்வார், சல்வார்த்துணிகள் மற்றும் ஆண், பெண், சிறுவர், சிறுமியர்களுக்கான ஆடைத் தெரிவுகளுக்கு இன்றே விஜயம் செய்யுங்கள்.

இந்தியன் செலக்ஷனின்
இந்தியன் பஜாருக்கு

25/03/2017 முதல்
14/04/2017 வரை

கூடுதலாக கொள்முதல் செய்பவர்களுக்கு விஷேட பரிசில் உடன் வழங்கப்படும்.

இடம்
வீரசிங்கம் மண்டபம்
யாழ்ப்பாணம்.

கஸ்தூரியார் வீதியில் உள்ள
இந்தியன் செலக்ஷனில்
அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளையும் செய்திட விரையுங்கள்.

# பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக பனையோலை, சீலைப் பைகள்

## அடுத்த வாரம் நடைமுறைக்கு

சாவகச்சேரிப் பொதுச் சந்தையில் பொலித்தீன் பைகளுக்கு மாற்றீடாக பனையோலைப் பைகளையும், சீலைப் பைகளையும் விற்பனைக்கு கொண்டு வர நகரசபையினர் ஏற்பாடுகள் செய்துள்ளனர். இவை அடுத்த வாரம் நடைமுறைக்கு வரும் என்று நகரசபைச் செயலாளர் கா.சண்முகதாசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது, பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருள்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதையடுத்து, முதற்கட்டமாக சந்தை வியாபாரிகளால் பயன்படுத்தும் சொப்பிங் பைகளுக்குப் பதிலாக கடலுணவு விற்பனைப் பிரிவில் பனையோலைப் பைகளும், சிமெந்து உறைப் பைகளும் பயன்படுத்தப்படவுள்ளன. மரக்கறி உள்ளிட்ட வியாபார நிலையங்களிலும், வர்த்தக நிலையங்களிலும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பைகளுக்கு மாற்றீடாக ' பொலித்தீன் பாவனையைத் தவிர்ப்போம் நோயற்ற வாழ்வை வாழ்வோம்' என்னும் வாசகத்துடன் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த தொழிலதிபரால் வழங்கப்பட்டுள்ள சீலைப்பைகளை வியாபார மற்றும் விற்பனை நிலையங்கள் மூலம் குறைந்த கட்டணத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சீலைப்பைகளைப் பொதுச் சந்தையில் விநியோகிக்கவென மூன்று இடங்களில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இந்த இடங்களில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்டு இயங்கும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மூலம் விற்பனை செய்யவும். இவற்றுடன் மாற்றுத் திறனாளிகள் மூலம் நடமாடும் சைக்கிள்களில் விற்பனை செய்யவும் எற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பொதுச் சந்தையில் சொப்பிங் பைகள் போடுவதற்கென தனியான தொட்டிகள் வைக்கப்படவுள்ளன. சந்தைக்கு வரும் நுகர்வோர் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளில் காணப்படும் சொப்பிங் பைகளை எடுத்து வந்து இந்தத் தொட்டியில் இடலாம். அதனால் ஒவ்வொரு குடியிருப்பாளர்களும் தமக்கு ஏற்படும் சுற்றாடல் மாசடைவைத் தடுக்க முடியும். என்றார். (ஜ-9)


## மரணஅறிவித்தல்



### திருமதி சறோஜாதேவி தவசுப்பிரமணியம்

அல்வாயைப் பிறப்பிடமாகவும் ஆண்டாள்வளவு, கொற்றாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சாவகச்சேரியில் தற்காலிகமாக வசித்து வந்தவருமான திருமதி சறோஜாதேவி தவசுப்பிரமணியம் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகேஸ்வரசாமி - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பாக்கியம் (சின்னம்மா) தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தவசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், ரஜனி, பாஸ்கரன் (கனடா), சுபாஸ்கரன் (ஆசிரியர் யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஸ்ரீபாஸ்கரன் (ஆசிரியர் யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம் பொதிகை புத்தக நிலையம் சாவகச்சேரி), மணிமேகலை (கனடா), சிவறஞ்சினி (ஆசிரியர் யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சந்தோஷ்(கனடா), சங்கீத்(கனடா), கபினாஷ் (யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை), கின்ஷிகா ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் காலஞ்சென்ற தேவச்சந்திரன், ஞானச்சந்திரன் ரவீந்திரன் மற்றும் லங்காதேவி, ஸ்ரீகரன்(ஓய்வுநிலைப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்), ரதிதேவி, விஜயா(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அரியகுலராஜா குலமணிதேவி மற்றும் விஜியராணி, சாந்தரூபினி, காலஞ்சென்ற தர்மராஜா மற்றும் லோகேஸ்வரி சிவராசா பாலேந்திரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கற்குழி வடக்கு,**
**சாவகச்சேரி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 073 9195/077 366 9620**

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற இலிகிதர் - CTB)



மாவிட்டபுரம், மதவடியைப் பிறப்பிடமாகவும் வவுணாவத்தை, துர்க்காபுரம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை தனபாலசிங்கம் (26.03.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் கனிஸ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், கவிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் நல்லூர் பிரதேசசபை), சிவரூபன் (பொறியியலாளர்-அவுஸ்ரேலியா), கௌரி (ஆசிரியை-யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி), பாலரூபன் (பொறியியலாளர்-அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் இரத்தினம் (லண்டன்) ஆகி யோரின் சகோதரனும், காலஞ்சென்றசாவித்திரிமற்றும்ராணி, காலஞ்சென்ற கெங்காதேவி மற்றும் சிவலிங்கம் (மலேசியா) ஆகியோரின் மைத்துனரும், தினேஸ் (கள உத்தியோகத்தர்-SOND நிறுவனம்), அனுசா (பொறியி யலாளர்-அவுஸ்ரேலியா), செந்தூரன் (மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அலுவலர்-மாவட்ட செயலகம்-கிளிநொச்சி) ஆகி யோரின் அன்பு மாமனாரும், தன்யஸ்ரீ, துளசிகன், தரணிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (29.03.2017) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வவுணாவத்தை,**
**துர்க்காபுரம்,**
**தெல்லிப்பழை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**021 205 9850**


## 16.5 கிலோ தங்கக்கட்டிகள் மீட்பு

கொழும்பு,மார்ச் 28

இலங்கையிலிருந்து கடத்தப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான, 16.5 கிலோ தங்கக்கட்டிகளைக் கொண்டு சென்ற ஒருவரிடமிருந்து, தமிழகப் பாதுகாப்பு அதிகாரிகள் அவற்றை மீட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையிலிருந்து கடல் வழியாகத் தங்கக்கட்டிகள் இராமநாதபுரத்துக்கு கடத்தப்பட்டு, அங்கிருந்து சென்னைக்குக் கொண்டு செல்லப்படுவது தொடர்பாக அந்த நாட்டுப் புலனாய்வு பிரிவினருக்குக்கிடைத்த தகவலைஅடுத்தே, 16.5 கிலோ தங்கக்கட்டிகள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் கடத்தப்பட்ட தங்கக்கட்டிகள் யாருக்குக் கொண்டுசெல்லப்பட்டது மற்றும் குறித்த கடத்தல் பின்னணியில் இருப்பவர்கள் தொடர்பில், இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் விசாரணைகளை நடத்தி வருவதாகத் தெரிவித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது. (ஐ)


## 8 ஆம் ஆண்டு நீங்கா நினைவுகள்





| அமரர் **கனகரத்தினம் சுரேஸ்குமார்** (புதுக்குடியிருப்பு வைத்தியசாலை ஊழியர்) | அமரர் **கந்தையா ஜெயக்குமார் (ஜெயம்)** |
| --- | --- |
| மண்ணில் 16.08.1976 — விண்ணில் 28.03.2009 | மண்ணில் 17.05.1984 — விண்ணில் 13.03.2009 |

வாழ்க்கை எனும் பாதையிலே
ஈகைக்கு இலக்கணமாய் - எம் குடும்பம்
உலாவிய வேளை - காலனவன்
கண்பட்டு உம் வாழ்வு
மறைந்ததுவோ - இப்புவியில்
ஏன் இவ்வாழ்வென - கண்ணீரில்
நீந்தும் இவ்வுள்ளம்.
அகிலம் உள்ளவரை நெஞ்சில்
நிறைந்தே வாழ்ந்திருப்பீர்

அன்பின் மதிமுகத்தவனே
நீ இன்றி வாழும் எம் இதயங்கள்
ஆண்டாண்டு காலமானாலும்
தீராது உன் இழப்பு
காலங்கள் மறையலாம்
எம் நினைவு மறையாது

**என்றும் உங்கள் ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**சு.பரிமளம் (மதி)**
**மனைவி**

**அப்பா, அம்மா, உடன்பிறப்புக்கள்,**
**அத்தான்மார், அண்ணிமார்.**

**தாவளை இயற்றாலை, வரணி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது மன்ற உறுப்பினரும் சேமிப்புத் திட்ட உறுப்பினருமான
**திருமதி ஸ்ரீ.ரஜனி** (உரிமையாளர் பொதிகை புத்த நிலையம் - கண்டி வீதி, சாவகச்சேரி) அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சறோஜாதேவி தவசுப்பிரமணியம்**

அவர்கள் 27.03.2017 ஆம் திகதி காலமானார். அன்னாரின் மறைவில் துயருறும் குடும்பத்தினருக்கு மன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி வலயத்தில் மு/நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலையின் அதிபர்
**திரு. சிறிபால ராமகிருஸ்ணமூர்த்தி**
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி லட்சுமி சின்னப்பு**

அவர்கள் 25.02.2017 அன்று சிவபதம் எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர் சங்கம்**
**துணுக்காய் கல்விவலயம், மாங்குளம்.**

புலம்பெயர் தொழிலாளர்களால் இலங்கைக்குக் கொண்டு வரப்படும்

# ஒன்பது பொருள்களுக்கு சுங்கவரி நீக்க முடிவு

கொழும்பு,மார்ச் 28
புலம்பெயர் தொழிலாளர்களால் இலங்கைக்குள் கொண்டுவரப்படும், மேலும் ஒன்பது பொருள்களுக்கான சுங்க வரிகளை முற்றாக அகற்றுவதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது. குறைந்தது ஒரு ஆண்டு காலம் வெளிநாடுகளில் பணியாற்றி விட்டு நாடு திரும்பும் புலம்பெயர் தொழிலாளர்களின் நலன்களைக் கவனத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சுங்கத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் பராக்கிரம பஸ்நாயக்க தெரிவித்ததாவது: "வெளி நாடுகளில் பணியாற்றி, நாடு திரும்பும் தொழிலாளர்களுக்கு கூடுதல் நன்மைகளை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கமைவாக குளியலறைக் கருவிகளின் தொகுதி ஒன்று, படுக்கையறைத் தொகுதி ஒன்று, 3 ஆயிரத்து 500 சிசி திறனுக்குக் குறைவான உந்துருளி ஒன்று, ஆகியவற்றையும் வெளிநாடுகளில் இருந்து திரும்பும் தொழிலாளர்கள் வரியின்றி எடுத்து வர முடியும்.

அத்துடன்சூரியகலன்கள்,கணினிகள்,மடிக்கணினிகள்,இரண்டு அலைபேசிகள் ஆகியவற்றையும் வரியின்றி எடுத்து வர முடியும் என்பதுடன், 55 அங்குலத்துக்கு உட்பட்ட தொலைக்காட்சிகளையும் வரியின்றிக்கொள்வனவுசெய்ய முடியும்." என்றார். (ஐ)

## மட்டக்களப்பு வானூர்தி நிலையம் சிவில் நிலையமாக மாற்றப்படும்

மட்டக்களப்பு,மார்ச் 28
மட்டக்களப்பு வானூர்தி நிலையம் சிவில் வானூர்தி நிலையமாக, அடுத்த மாத இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது என்று, சிவில் வானூர்திப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் நிமல சிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இராணுவப் பயன்பாட்டுக்கான வானூர்தி நிலையமாக இருந்து வந்த மட்டக்களப்பு வானூர்தி நிலையத்தை, சிவில் வானூர்திப் போக்குவரத்து அதிகார சபை பொறுப்பேற்று, சிவில வானூர்தி நிலையமாக இயக்கவுள்ளது. இலங்கையின் சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இதனைத் திறந்து வைக்கவுள்ளார்.



இந்தவானூர்திநிலையத்தில் தேவையான இடவசதி இருப்பதால், சிவில் வானூர்திப் போக்குவரத்து இயக்குநர்கள், வானூர்திப் பயிற்சிப் பாடசாலை உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்த முடியும்." என்றார். (ஐ)

## சிறை பஸ் மீது சூடு; மற்றொரு சந்தேக நபரும் கைதானார்

கொழும்பு,மார்ச் 28
களுத்துறையில் சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய மற்றுமொரு சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

குறித்த நபரை ஹிம்புட்டான பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் கைதுசெய்யப்படும்போது, துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பயன்படுத்தபட்டதாகச் சந்தேகிக்கப்படும் துப்பாக்கியொன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரொருவர் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்த நிலையில் மற்றுமொருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறையில் சிறைச்சாலைப் பேருந்து மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் பாதாள உலகக் குழு நபரான சமயங், சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் உட்பட ஏழு பேர் உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நீதிமன்றுக்கு எதிராக விமல் போராடவில்லை

தேசிய சுதந்திர முன்னணி தெரிவிப்பு



கொழும்பு,மார்ச் 28
தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தமை நீதிமன்றுக்கு எதிராகவல்ல. இந்த அரசு நீதிமன்றின் மீது செலுத்தும் நிர்வாண அரசியல் அழுத்தங்களுக்கு எதிராகவே அவர் போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார். இவ்வாறு தேசிய சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

புறக்கோட்டையில் உள்ள கட்சிக் காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
"எமது கட்சியின் தலைவர் விமல் வீரவன்ச 84 மணித்தியாலங்களாக உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.

நாட்டுக்கு அநீதி இழைக்கப்படும் போது, அந்த அபாயத்திலிருந்து பாதுகாக்கும் முகமாக அவர் குரல் எழுப்புவார்-என்றார். (ஐ)

## அர்த்தமற்றவையாக மாறும் சுயாதீன ஆணைக்குழுக்கள்

அமைச்சர் சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 28
19 ஆம் திருத்தச் சட்டத்துக்கு அமைவாக நிறுவப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்கள் அர்த்தமற்றவையாக மாறி வருகின்றன என்று மாநகரங்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
சுயாதீன ஆணைக்குழுக்களின் மூலம் நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும் என பலர் கருதிய போதிலும், உண்மையில் அவ்வாறான ஒரு நிலைமை கிடையாது. நாட்டில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு காணப்பட்டாலும், தேர்தல் சட்டங்களில் மாற்றமில்லாத காரணத்தால், ஆணைக்குழுவால் செயற்படமுடியாத நிலமை காணப்படுகின்றது. கணக்காய்வு தொடர்பில் சுயாதீன ஆணைக்குழு காணப்பட்டாலும், பழைய சட்டங்களே நடைமுறைப்படுத்தப்படுகின்றன - என்றார். (ஐ)

## பொறுப்புக் கூறலுக்கு காத்திரமான நடவடிக்கையை முன்னெடுக்கவும்

புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வேண்டுகோள்

கொழும்பு,மார்ச் 28
இலங்கையில் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன. பிரிட்டன் தமிழர் பேரவை, அமெரிக்கத் தமிழர் அரசியல் செயலவை, கனடியத் தமிழர் பேரவை ஆகிய அமைப்புக்கள் இணைந்து அறிக்கை ஒன்றின் மூலம் இந்த வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

அந்த அமைப்புக்கள் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கை அரசுக்கு, பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக, இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை அரசு, தானாகவே ஒரு பன்னாட்டுப் பொறிக்குள் அகப்பட்டிருக்கிறது. மேலும் பொறுப்புக் கூறல் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கைக்கான பொறுப்பும், கடப்பாடும், மீளவும் ஒரு முறை பன்னாட்டால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசு, குறித்த பிரேரணையின் கீழ் ஏற்றுக்கொண்டிருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு, முழு அளவிலான வேலைத்திட்டம் மற்றும் அதற்குரிய கால அட்டவணை ஆகியவற்றை ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியிருக்கின்றார். உறுப்பு நாடுகள் பலவும் அவரது கூற்றை ஆதரித்துள்ள நிலையில் , இலங்கையின் அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடியவாறான பரந்த வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொள்ள வேண்டும். என்றுள்ளன. (ஐ)

## புத்தகாயா சென்ற யாத்திரிகர்கள் சாவு

விசாரணைகள் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு,மார்ச் 28
புத்தகாயாவுக்குச் சென்ற யாத்திரிகர்கள் மூவர் திடீரென உயிரிழந்தமை தொடர்பாக, தூதுவர் காரியாலயம் ஊடாக விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சு தெரிவித்தது.

கடந்த 13 ஆம் திகதி புத்தகாயாவுக்குச் சென்ற குழுவில் மூன்று பேர் திடீரென சுகவீனமுற்று உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் இரண்டு சடலங்கள் வானூர்தி நிலையத்துக்கு கடந்த சனிக்கிழமை கொண்டு வரப்பட்டன.

எனினும், சடலங்களை விடுவித்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

இவர்களின் உயிரிழப்புத் தொடர்பாக அயலுறவுத் துறை அமைச்சிடம் வினவிய போது, அதற்கு பதிலளித்த பேச்சாளர், இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் காரியாலயத்தின் ஊடாகத் தகவல்களை பெற்று வருவதாகத் தெரிவித்தார். (ஐ)

# முகவரி இல்லாத அரச திணைக்களம்

மூதூர், மார்ச் 28
கிழக்கு மாகாண அமைச்சின் கீழ் இயங்கும் ஒரு திணைக்களம் கிண்ணியாவில் கொழும்பு பிரதான வீதியிலுள்ள குட்டித்தீவில் அமையப் பெற்றுள்ளது. இந்தத் திணைக்களத்தின் பெயர்ப்பலகை கடந்த பல மாதங்களாக உடைந்து தேடுவாரற்றுக் காணப்படுகின்றது. கிழக்கு மாகாண விவசாய கால்நடை வளர்ப்பு அமைச்சாக இந்தத் திணைக்களம் இருக்காலாமென உடைந்த ஒருபகுதியை வைத்து மக்கள் சந்தேகம் தெரிவித்தனர்.

இந்தத் திணைக்களம், பிரதான வீதியில் இருந்தாலும் கூட மக்கள் தொடர்ந்து அதனைத் தேடுவதை அவதானிக்க முடிகிறது. எனவே, திணைக்களத்துக்கு பொறுப்பான பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் பெயர்ப்பலகையை நடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ-ய-40)



# கூட்டமைப்புக்குள் பனிப்போர் தமிழருக்கு பாதிப்பை ஏற்படுத்தும்

## நல்லையா குமரகுருபரன் கருத்து



கொழும்பு,மார்ச் 28

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் பனிப்போர், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆரோக்கியமானதொன்றல்ல. தமிழினத்துக்கு எதிரான சக்திகளுக்கு இது வாய்ப்பாகவும், தமிழினத்தின் ஒருமைப்பாடு இன்மையைக் காட்டிக் கொடுப்பதாகவும் அமைந்து விடும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸின் பொதுச் செயலாளர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ஏற்பட்டிருக்கும் இன்றைய நிலை குறித்து கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர் மீதான போர்க்குற்றங்கள் எனும் விடயத்தில் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்குவது எம்மை நாம் ஏமாற்றுவதாக அமைந்து விடக்கூடாது. குமார் பொன்னம்பலம், "அரசியலில் நேர்மை இருக்க வேண்டும், முதலில் நாம் எமக்கு நேர்மையாக இருக்க வேண்டும்" என்று அடிக்கடி கூறுவார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் கலந்துரையாடிப் பெரும்பான்மையுடனான ஜனநாயக முடிவைக் கூட்டுப்பொறுப்புடன் எடுத்துச் செயற்பட வேண்டியது தலைமையின் கடமையாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் ரெலோ தலைமை, புளொட் தலைமை, ஈ.பி.ஆர்.எல்.எப் தலைமை ஆகியன ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கும் அதேவேளை, வடமாகாண முதலமைச்சர் உள்ளிட்ட மாகாண பிரதிநிதிகளும் இதனையே ஆதரிக்கின்றனர்.

ஆனால் தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள், வேறு நிலைப்பாட்டை எடுத்து இலங்கைக்கு மீண்டும், மீண்டும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்குவது சாணக்கியம் என்று கருதுமாயின், அதனைப் பற்றிய தெளிவான விளக்கத்தை, மக்களை ஈர்க்க வல்ல மூத்த தலைவர்களான இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா போன்றவர்கள் நேர்மையுடன் எடுத்துரைக்க வேண்டும். இதுவே மக்கள் பிரதிநிதிகளின் தலையாய கடமையாக அமையும்-என்றார். (ஐ)

## 16 மாதங்களில் கடற்படைக்கு ரூ.3 பில்லி. வருமானம்

கொழும்பு,மார்ச் 28

கடந்த 16 மாதங்களில் வணிகக் கப்பல்களுக்கு அளித்து வந்த பாதுகாப்புச் சேவையின் மூலம், இலங்கைக் கடற்படை, 3 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளது.

காலியில் உள்ள நிலையத்தில் இருந்தே இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையை அண்டிய கடற்பரப்பு வழியாகப் பயணம் மேற்கொள்ளும் வணிகக் கப்பல்களுக்குப் பாதுகாப்புச் சேவைகளை வழங்கியதன் மூலம், இந்த வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. முன்னர் அவன்ட் கார்ட் நிறுவனத்தால், இந்தப் பாதுகாப்பு வழங்கப்பட்டு வந்தது. எனினும் ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர், இந்தப் பாதுகாப்புச் சேவை இலங்கைக் கடற்படையிடம், கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடுப்பகுதியில் கையளிக்கப்பட்டது.

அதற்குப் பின்னர், காலி செயற்பாட்டு நிலையத்தின் ஊடாக பாதுகாப்புச் சேவையைப் பெற்று பயணத்தை மேற்கொண்டிருந்த 8 ஆயிரத்து 181 கப்பல்களின் மூலம், 3 பில்லியனுக்கு மேற்பட்ட வருமானம் கடற்படைக்குக் கிடைத்துள்ளது.

வணிகக் கப்பல்களில் பணியில் ஈடுபட்டிருக்கும் உள்ளூர் மற்றும் பன்னாட்டுப் பாதுகாப்புக் குழுக்களுக்குத் தேவையான ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் உள்ளிட்டவற்றை இலங்கைக் கடற்படை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஆட்சியாளர்களில் பயனற்று கடவுளிடம் மன்றாடும் மக்கள்

### கவலைப்படுகிறார் மகிந்த



கொழும்பு,மார்ச் 28

நாட்டின் பிரச்சினைகளுக்கு மாத்திரமல்ல, மக்களின் பிரச்சினைகளுக்கும் இந்த ஆட்சியாளர்கள் தீர்வை வழங்காது மௌனமாகவுள்ளனர். அதனால் ஆட்சியாளர்கள் மீது நம்பிக்கையற்ற மக்கள், தமது துக்கத்தையும், கஷ்டங்களையும் கடவுளிடம் கூறுவதற்காக வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்ல நேர்ந்துள்ளது.

இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கவலை தெரிவித்தார். வெலிவேரிய கிரிகிகந்தே பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்கொலைத் தாக்குதல் நடத்த வெடிகுண்டைக் கொண்டு வந்த புலி உறுப்பினர் வெளியில் உள்ளனர். ஆனால் அவரைப் பிடித்துக் கொடுத்தப் படையினர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச சிறைச்சாலையில் உணவு தவிர்ப்பை ஆரம்பித்துள்ளார். அவரது உடல் நலன் குறித்து அறிய நான் சிறைக்குச் சென்றிருந்தேன். அங்கு, வீரவன்ச தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கு எதிரில் உள்ள சிறைக் கூண்டிலில், நாட்டின் ஒருமைப்பாட்டுக்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடிய 6 இராணுவத்தினர் உள்ளனர். மேலும் சில படையினர் தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் - என்றார். (ஐ)

## கூட்டு எதிரணி போன்றே தமிழக அரசியல்வாதிகள்

### நாமலுக்கு மனோகணேசன் பதிலடி



கொழும்பு,மார்ச் 28

தமிழக அரசியல்வாதிகள், இலங்கையின் கூட்டு எதிரணியினரைப் போன்று தீவிரப் போக்குடையவர்கள். இவ்வாறு தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன், நாமல் ராஜபக்சவுக்கு பதிலுரைத்துள்ளார்.

உதவி நிறுவனமொன்றால் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை வழங்கி வைப்பதற்காக இந்திய நடிகர் ரஜினிகாந்த் இலங்கைக்கு வருகை தரவிருந்தார். எனினும் அவரது பயணம் நிறுத்தப்பட்டமை தொடர்பில் கீச்சகத்தில் கருத்து தெரிவித்த, நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்குப் பதிலளிக்கும் முகமாகவே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக, கீச்சகத்தில் கருத்துத் தெரிவித்த நாமல் ராஜபக்ச, "தமிழ்நாடு அரசியல்வாதிகளின் உண்மையான தன்மை, மீண்டும் வெளிப்பட்டுள்ளது. இலங்கையின் தமிழ் மக்களுக்காக உதவுவதற்கு, சுப்பர் ஸ்ரார் ரஜினிகாந்தைக் கூட அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள்" என்று பதிவிட்டுள்ளார். அதற்கு ஆங்கில மொழியில் பதிலளித்த அமைச்சர் மனோ, "ஆம். பிரிக்கப்படா இலங்கைக்குள், அதிகாரங்களைப் பகிர்வதன் மூலமாகத் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முயல்வதைக் குழப்பும் ஒன்றிணைந்த எதிரணியின் அரசியல்வாதிகளின் உண்மையான தன்மைக்கான, தீவிரப் போக்குடைய எதிராளிகளே" என்று தெரிவித்தார். பின்னர் தமிழ் மொழியில் பதிலளித்த அமைச்சர், "நாமல், அவர்கள் உமது தமிழக மச்சான்ஸ். இங்கே அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைத் தீர்வை தடுக்கும் உம்மைப் போல" என்று பதிலளித்தார்.

முன்னதாக, வேறொரு கீச்சகப் பதிவுக்குத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர், "இன்று, ஈழவாதிகளை விட தெற்கின் பேரினவாதிகள் தான், தமிழீழம், பிரிவினை, மீண்டும்போர் ஆகியவற்றுக்கான சூழல்களை வேகமாக உருவாக்குகிறார்கள். "துவேசம் மூலம் அதிகாரப் பகிர்வு, மொழி சமத்துவம் ஆகியனவற்றை எதிர்த்து அரச/அரசற்ற பயங்கரவாதங்களை முன்னெடுக்கிறார்கள் வணக்கத்துக்குரிய பேரினவாதிகள்" என்றார். (ஐ)

## இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளுடன் இவ்வருடம் இந்தியா ராணுவப்பயிற்சி

### இந்தியப்பாதுகாப்பு இணை அமைச்சர் தகவல்



கொழும்பு,மார்ச் 28

இந்தியா, இலங்கை உள்ளிட்ட 16 நாடுகளுடன் இந்த வருடத்தில் கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது என்று இந்தியாவின் பாதுகாப்பு இணை அமைச்சர் சுபாஸ் பாம்ரே தெரிவித்தார்.

இந்திய நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இருதரப்புப் பாதுகாப்பு உறவுகளையும், ஒத்துழைப்புகளையும் வலுப்படுத்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் 16 நாடுகளுடன் இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா, கசாகஸ்தான், கிரிகிஸ்தான், மலேசியா, மாலைதீவு, மொங்கோலியா, நேபாளம், ரஷ்யா, இலங்கை, தாய்லாந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், மற்றும் அமெரிக்கா ஆகிய 16 நாடுகளுடனேயே இந்தியா கூட்டு இராணுவப் பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. இராணுவ அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல், பயிற்சிக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், மற்றும் ஏனைய செயற்பாடுகள் இந்தக் கூட்டுப் பயிற்சிகளின் போது உள்ளடக்கப்படும்' - என்றார். (ஐ)

## புதிய சட்டங்கள் இவ்வருடத்தில் அறிமுகப்படுத்தப்படும்

கொழும்பு,மார்ச் 28

ஏராளமான புதிய சட்டங்களை இந்த வருடத்திலிருந்து அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளோம். எனவே பயங்கரவாத தடைச்சட்டத்துக்கு மாற்றீடான பதலீட்டுச் சட்டத்தை எதிர்வரும் மே மாதமளவில் நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதற்கும் எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் புதிய தலைவராக யூ.ஆர்.டி. சில்வா தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் 43ஆவது நிர்வாகக் குழுவின் உத்தியோகபூர்வ நிகழ்வு கடந்த சனிக்கிழமை கொழும்பிலுள்ள கிங்ஸ்பெரி ஹோட்டலில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (ஐ)



## படையினரின் பங்களிப்புடன் நேற்று டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம்

வவுனியா, மார்ச் 28

முப்படைகளின் பங்குபற்றலுடன் வவுனியால் நேற்று டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மு.ப. 9 மணியளவில் வவுனியா நகர சபை மைதானத்தில் வவுனியா மாவட்ட தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தலைமையில் டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டம் ஆரம்பமானது. நகர சபை ஊழியர்களுடன் இணைந்து இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"இந்த ஆண்டு ஆரம்பத்தில் இருந்து வவுனியா நகரில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், நகரசபையினர் கூடிய கவனம் எடுத்து டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். தற்போது முப்படையினரும் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தில் இணைந்துள்ளமை பாராட்டுக்குரியது.


வவுனியா மாவட்டத்தில் தற்போது நிலவும் காலநிலையாலேயே டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. நகரைச் சுத்தமாக வைத்திருப்பதன் ஊடாக டெங்குத் தொற்றைக் கட்டுப்படுத்த முடியும். பொது மக்களும், வியாபார நிலைய உரிமையாளர்களும் எமது செயற்பாட்டுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டும்" -என்று வவுனியா நகர சபைச் செயலாளர் ஆர்.தயாபரன் தெரிவித்தார்.

நிகழ்வில் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.லவன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சுகாதாரப் பரிசோதகர்கள், நகர சபை ஊழியர்கள், விமானப் படையினர், சிறப்பு அதிரடிப் படையினர், பொலிஸார், ஊர்காவல் படையினர் இணைந்து டெங்கு ஒழிப்புச் செயற்றிட்டத்தை முன்னெடுத்தனர். (ந-21)

# பாதீனியத்தைக் கட்டுப்படுத்த துரித கதியில் செயற்படுங்கள்

## ஒட்டுசுட்டான் பிரதேச மக்கள் கோரிக்கை



முல்லைத்தீவு, மார்ச் 28

``ஒட்டுசுட்டானின் பல பிரதேசங்களை பாதீனியம் ஆக்கிரமித்துள்ளது. எமது விவசாய நிலங்கள் அழியும் நிலையை அடைந்துள்ளன. பாதீனிய அழிப்பில் விவசாய அமைச்சு மந்த கதியில் செயற்படுகின்றது".

இவ்வாறு பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வடக்கு விவசாய அமைச்சால் கடந்த காலங்களில் பாதீனியத்தை அழிப்பதற்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. பல குழுக்களும் அமைக்கப்பட்டன.

தற்போது வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பாதீனியம் பெருகி வளர்ந்துள்ளது. முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் உள்ள விவசாயக் காணிகளில் பாதீனியம் பரவலாகக் காணப்படுகின்றது.

"ஒட்டுசுட்டானில் இந்திய இராணுவத்தின் வருகைக்குப் பின்னரே பாதீனியம் பெருமளவில் பரவியது. இருபது ஆண்டுகளாக அவற்றை அழிக்க முடியாதுள்ளது. வடக்கு மாகாண விவசாய அமைச்சு பாதீனியத்தை அழிப்பதற்குப் பல வேலைத் திட்டங்களை அறிவித்தது. பாதீனியத்தை அழிக்கும் செயற்பாட்டையும் ஆரம்பித்தது.

விவசாய அமைச்சின் நடவடிக்கையால் எமது விவசாய நிலங்கள் பாதுகாக்கப்படும் என்று எண்ணினோம். எனினும் விவசாய அமைச்சின் நடவடிக்கைகள் காலப்போக்கில் மந்த கதியை அடைந்துள்ளன. எமது பகுதியில் பாதீனியத்தை அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாய அமைச்சு இது தொடர்பாக முனைப்புடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்" -என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

"பாதீனிய அழிப்புத் தொடர்பாக ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து பாதீனிய அழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்" -என்று முல்லைத்தீவு மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் அற்புதசந்திரன் தெரிவித்தார். (ந-21,7)

## தொழில் முயற்சியாளருக்கும் நம்பிக்கை நிதிய உறுப்புரிமை

அச்சுவேலி, மார்ச் 28

சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட்டிருப்போரை ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளும் ஏற்பாடுகளை நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு செய்துள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட சுயதொழில் முயற்சியாளர்கள் 200 ரூபாவுக்குக் குறையாத தொகையை மாதாந்தம் செலுத்தி ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தில் உறுப்புரிமையைப் பேணலாம். சுயதொழில் ஆயுள் காப்புறுதி, நிரந்தர இயலாமைக்கான நட்ட ஈடு, இருதய அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக அறுவைச் சிகிச்சை களுக்கு 3 லட்சம் ரூபா உதவு தொகை, கண் வில்லை பொருத்துவதற்கு 15 ஆயிரம் ரூபா, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கொடுப்பனவு, வியன வீட்டுக் கடன், தரம் 5 புலமைப் பரிசில் கொடுப்பனவு 15 ஆயிரம் ரூபா, க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த பிள்ளைகளுக்கான கொடுப்பனவு 12 ஆயிரம் ரூபா, நிரந்த ஊனமுற்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கான புலமைப் பரிசில் கொடுப்பனவு உள்ளிட்ட பல உதவிகளை இதன்மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

மாதாந்தம் செலுத்திய தொகையை வட்டி மற்றும் பங்குலாபத்துடன் மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.

விவசாயம், கடற்றொழில், சிறு வியாபாரம், கால்நடை வளர்ப்பு, ஓட்டுவேலை உள்ளிட்ட சிறுதொழில் முயற்சியாளர்கள் உறுப்புரிமை விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து உறுப்பினர்களாக இணைந்து கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சிறுதொழில் முயற்சியாளர்கள் யாழ்ப்பாணம், மார்ட்டீன் வீதியில் உள்ள பிராந்திய அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-11)

## கிளி. மாவட்டத்தில் சிறுபோகம் 3,000 ஏக்கரில் செய்யத் திட்டம்



கோப்புப்படம்

கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளக்கூடிய நிலை உள்ளது என்று கிளிநொச்சி மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் சிறுபோகச் செய்கை தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

அக்கராயன், குடமுருட்டி, புதுமுறிப்பு, வன்னேரிக்குளம் ஆகியவற்றில் சிறுபோகச் செய்கை மேற்கொள்ளக் கூடிய அளவில் குள நீர் மட்டம் காணப்படுகின்றது. தற்போது 10 அடியாகக் காணப்படும் நீர்மட்டம் இனிவரும் நாள்களில் பெய்யும் மழையால் 18 அடியாக உயருமானால் இரணைமடுவில் சிறுபோகம் செய்யும் வாய்ப்பு ஏற்படும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதால், சிறுபோகச் செய்கை, விதை நெல்லுக்காகவே மேற்கொள்ளப்படும்.

இனிவரும் நாள்களில் பெய்யும் மழையே சிறுபோகச் செய்கையின் அளவைத் தீர்மானிக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ந-21)

## ஊறணிக் கிராம அபிருத்திக்கு எதிர்காலத்தில் நடவடிக்கை

### அமைச்சர் டெனீஸ்வரன் கிராம மக்களுக்கு உறுதி

யாழ்ப்பாணம், மார்ச் 28

"யாழ்ப்பாணம், ஊறணி கிராம மக்களின் பிரச்சினைகளை முகநூல் ஊடாகவே அறிந்து கொண்டேன். எனது நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்தித் திட்டங்களை அந்தக் கிராமத்தில் மேற்கொள்வேன்."

இவ்வாறு வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா. டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது:

வலிகாமம் வடக்கு ஊறணிக் கிராமம் அண்மையில் விடுவிக்கப்பட்ட பிரதேசமாகும். அங்கு ஏறக்குறைய 193 குடும்பங்கள் மீள்குடியமர்ந்து பல்வேறு அசௌகரியங்களின் மத்தியிலும், நாளாந்த வருமானமின்றியும் வாழ்கின்றனர். அங்குள்ள மக்களது பிரச்சினைகள் தொடர்பில் முகப்புத்தகத்தில் பதிவு செய்யப்படிருந்தது.

அவற்றைப் பார்த்த வடமாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் அந்தப் பகுதி மக்களுக்கு தனது அமைச்சினூடாக அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த சனிக்கிழமை அங்கு சென்றார். அங்குள்ளவர்களுடன் கலந்துரையாடினார்.

அங்குள்ள பெரும்பாலான குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாக கடற்றொழிலையே நம்பியுள்ளன. மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வாழ்வதை அமைச்சர் நேரடியாகப் பார்வையிட்டார்.

"இங்கு கலந்துரையாடல் நடத்துவதற்குப் பொது நோக்கு மண்டபம் மற்றும் தளபாட வசதிகள் இன்றி சிரமப்படுவது வேதனையளிக்கின்றது. எதிர்காலத்தில் எனது நிதி ஒதுக்கீட்டினூடாகச் செய்யக்கூடிய அபிவிருத்தித் திட்டங்களை கிராமத்துக்கு கொண்டுவருவேன். இந்த வருடம் மாவீரர், புனர்வாழ்வு பெற்ற போராளிகளுக்கான வேலைத் திட்டத்தில் நலிவுற்ற குடும்பங்களை உள்வாங்கவுள்ளேன்" என்று அங்கு அமைச்சர் தெரிவித்தார்- என்றுள்ளது. (ந-21)

## பேருந்துகள் அதிக கட்டணம் அறவிட்டால் நடவடிக்கை

### முல்லை. மாவட்ட தனியார் பேருந்துச் சங்கத் தலைவர் அறிவுறுத்து

முல்லைத்தீவு, மார்ச் 28

``முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பயணிப்போரிடம் நடத்துநர்கள் அதிக அளவில் பணம் அறவீடு செய்கின்றனர் என்று கூறப்படு கின்றது. அதிக பணம் அறவிடப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்".

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துச் சங்கத் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனியார் பேருந்துகளில் பயணிப்போர் குறிப்பிட்ட தூரத்துக்கு வழமையாக அறவிடப்படும் பணத்தை விட அதிக பணம் அற விடப்படுகின்றது என்று கூறுகின்றனர். மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் செல்வதற்கு 40 ரூபா அறவிடப்படுவதே வழமை. சில தனியார் பேருந்துகளில் 55 ரூபா அறவிடப்படுகின்றது. திடீரென கட்டணங்கள் மாறுபடுவதால் பேருந்தில் பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

"மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் செல்வதற்கு 40 ரூபாவே அறவிடப்படுகின்றது. அதற்கு அதிகமான பணம் அறவிடப்பட்டால் பற்றுச்சீட்டை ஒப்படைத்து, பேருந்து இலக்கத்தையும் அறிவித்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதே எமது நோக்கம்" -என்று முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்துச் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ந-7)

### விவசாயப் பண்ணைகளிலிருந்து

# இராணுவமே வெளியேறு

### கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள் பேரணி





கிளிநொச்சி, மார்ச் 28

கிளிநொச்சி மாவட்ட விவசாயத் திணைக்களக் காணிகளைக் கையகப்படுத்தி நிலை கொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்று வலியுறுத்தி நேற்று மாவட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

வட்டக்கச்சிப் பண்ணையில் இருந்து மாவட்ட செயலகம் வரை அவர்கள் பேரணியாகச் சென்று ஜனாதிபதிக்கான மனுவையும் கையளித்தனர்.

அரச திணைக்களக் காணிகளைக் கையகப்படுத்தியுள்ள இராணுவத்தினர் அவற்றைத் தமது முகாம்களாக மாற்றியுள்ளனர். மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் அதனால் கேள்விக்குறியாகியுள்ளது. திணைக்களக் கட்டடங்களை விடுவித்து விவசாயிகளின் முன்னேற்றத்துக்கு உதவ வேண்டும் என்று மாவட்ட விவசாயிகள் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டம் வட்டக்கச்சியில் உள்ள விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான பண்ணையில் ஆரம்பமானது. அங்கிருந்து கிளிநொச்சி நகர் சென்று மாவட்ட செயலகத்தைச் சென்றடைந்தது. ஆர்ப்பாட்டத்தில் 500 இற்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

"கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்ட இரு பிரதான அரச பண்ணைகள் இராணுவத்தின் வசமுள்ளன. கடந்த 8 ஆண்டுகளாக அவை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. அவற்றை விடுவிப்பதற்கான எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் மாவட்ட விவசாயிகள் பாதிப்படைகின்றனர்.

வட்டக்கச்சியில் உள்ள 415 ஏக்கர் பரப்புள்ள விவசாயப் பண்ணை, இரணைமடுக் குளத்துக்கு அருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கண்காணிப்பாளர் அலுவலகம், ஏ9 வீதியில் உள்ள விவசாயத் திணைக்களத் தில் சேவைக்கால பயிற்சி நிலையம், காக்கா கடைச் சந்திக்கருகில் உள்ள நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அலுவலகக் கட்டடம் என்பவற்றை இராணுவத்தினர் விடுவிக்க வேண்டும்." என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் வலியுறுத்தினர்.

"படைவசமுள்ள வட்டக்கச்சி மற்றும் இரணைமடு விவசாயப் பண்ணைகள் கிளிநொச்சி மாவட்ட விவசாயத்துக்கு முதுகெலும்பாகக் காணப்பட்டன. வட்டக்கச்சி விவசாயப்பண்ணை 1950ஆம் ஆண்டு காலப் பகுதியிலிருந்து நெல், மரக்கறிவகை, தானியவகை, கிழங்குவகை, கால் நடை வளர்ப்பு மற்றும் இயந்திரவியல் போன்ற விவசாய செயற்பாடுகளின் செயன்முறைப் பயிற்சிகளை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கும், பாடசாலை மாணவர்களுக்கும் மற்றும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கும் மிகச் சிறப்பாக வழங்கியது. போதிய அளவு விதை உற்பத்திகளையும் மேற்கொண்டு எமது மாவட்டத்துக்கு மட்டுமல்லாது வெளி மாவட்டங்களுக்கும் வழங்கிய பண்ணையாகும்.

இரணைமடு விவசாய பண்ணையும் சேவைக்கால பயிற்சிப் பண்ணையாக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கி வந்தது. தற்போது அவை இராணுவத்தினரின் பயன்பாட்டில் உள்ளன. தற்போது இரசாயன பாவனைகளை தவிர்த்து உற்பத்திகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தப்படுகின்றது. இந்தக் கருத்துக்கள் அறிக்கைகளாகவோ, செய்திகளாகவோ மக்களிடம் சென்று பயனை ஏற்படுத்தாது. செயன்முறைப் பயிற்சிகள் மூலமே பூரணமான பயனைப் பெறமுடியும். இவற்றை பண்ணைப் பயிற்சிகள் மூலமே பெறமுடியும். இவ்வாறான பண்ணைப் பயிற்சிகள் தென்பகுதி மாவட்டங்களில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

வட்டக்கச்சி மற்றும் இரணைமடு அரச விவசாயப் பண்ணைகளை மீளவும் விவசாயத் திணைக்களத்திடம் ஒப்படைத்து எமது மாவட்டம் சிறந்த விவசாய மாவட்டமாக திகழ ஆவன செய்ய வேண்டும் என்று எமது மாவட்ட விவசாய சமூகம் சார்பாக தங்களிடம் பணிவுடன் வேண்டுகின்றோம்." என்று அவர்கள் கையளித்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச தலைவர், தலைமை அமைச்சர், கொழும்பு விவசாய அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், மாவட்ட செயலாளர் ஆகியோருக்கான மனு மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ற - 21,101,35)

## நன்மைகளை ஆதரிப்போம்

ஆர்வத்துடன் கற்று கணக்குப் பாடத்தில் 95 மதிப்பெண் வாங்கி மகிழ்வுடன் துள்ளிக்குதித்து வந்த மகனைப் பாராட்டாமல் பெற்றோர் திட்டினர். இன்னும் 5 மதிப்பெண் எங்கே போச்சு? என்ற வார்த்தை மகனது மகிழ்ச்சியை சுக்குநூறாக்கியது. சோர்ந்துபோன மகன் சென்றதும் பாராட்டினால் படிப்பைக் குறைச்சிடுவான் என பெற்றோர் தங்கள் செயலுக்கு சப்பைக் கட்டுக் கட்டினர்.

சட்டநுணுக்கங்களைத் தெரிந்த ஆதிக்க கும்பலான யூதரின் முன் 38 ஆண்டுகளாக முடக்குவாதமுற்ற ஒருவரை இயேசு ஓய்வுநாளில் குணமாக்கினார். யூதர்கள் சட்டத்தை தூக்கிப்பிடித்து குற்றம் சுமத்தினர். நன்மைத் தனங்களும், சாதனைகளும் நிகழும்போது மட்டம் தட்டி குறை கண்டுபிடிக்கும் போக்கு அநீதியானது என்பதை இயேசு தமது செயலால் புரியவைக்கி றார்.

வாழ்வை வளப்படுத்தும் செயற்பாடுகள் எங்கு எப்படி நடந்தாலும் அவற்றைப் பாராட்டி ஒத்துழைப்போம். இந்த மனப்பான்மை இன்றைய அரசியல் சமூக தலைவர்களிடம் காணப்படுகிறதா? துள்ளிப் பாயும் ஆற்றுநீரானது பாயும் இடமெல்லாம் வாழ்வளித்துக் கொண்டே செல்வதுபோல் நமது வாழ்வு எல்லோருக்கும் எல்லாமுமாக இருக்கட்டும். குற்றம் கண்டுபிடித்தல் மற்றும் சாக்குப் போக்குச் சொல்லல் போன்ற அணைகளைப் போட்டு நீதியைக் கட்டிப் போடவேண்டாமே. வாழ்வோம்! வாழவிடுவோம்! வாழவைப்போம்!




*எஸ்.யேசுதாஸ்*

## சுயசக்தி கடனைப் பெற முண்டியடிக்கும் மக்கள்

வவுனியா, மார்ச் 28

அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 10 இலட்சம் தொழில் முயற்சியாளரை உருவாக்கும் சுயசக்தி கடன் விண்ணப்பத்தைக் கையளிக்க வவுனியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் மக்கள் நேற்று முண்டியடித்தனர்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கீழான தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் ஊடாக நாடு முழுவதும் 10 இலட்சம் தொழில் முயற்சியாளர் களை உருவாக்கும் நோக்குடன் சுயசக்தி என்னும் பெயரில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இளைஞர், யுவதிகளின் தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் முகமாக சுமார் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் வரை குறைந்த வட்டி வீதத்தில் அவர்களது தொழில் தகமை மற்றும் தொழில் நடவடிக்கைக்கு ஏற்ப கடன் வழங்கப்படவுள்ளது.

அதற்கு விண்ணப்பிப்பதற்காக இளைஞர்கள், யுவதிகள், தாய்மார், முதியவர்கள் எனப் பலரும் மாவட்ட செயலகத்தில் உள்ள அலுவலகத்திலும், வவுனியா பிரதேச செயலகத்திலும் விண்ணப்பங்களை பெறுவதற்கும், சமர்ப்பிப்பதற்கும் முண்டியடிக்கின்றனர்.

கடந்த சில நாள்களாக விண்ணப்பங்களைப் பெறும் மற்றும் வழங்கும் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. இதுவரை வவுனியா மாவட்டத்தில் ஐயாயிரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் வரை பெறப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. (ற - 21)



# தேறாங்கண்டல், ஐயங்குளத்துக்கு போக்குவரத்துச் சேவை வழங்குக

## *கிராம மக்கள் கோரிக்கை*

முல்லைத்தீவு, மார்ச் 28

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேறாங்கண்டல், ஐயங்கன்குளம் கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. அங்குள்ள 300க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தினமும் 10 கிலோமீற்றர் தூரம் தமது சொந்த வாகனங்களில் பயணிக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டவை தேறாங்கண்டல், ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான், பழைய முருகண்டிக் கிராமங்கள். அந்தக் கிராமங்களில் சுமார் 400 பேர் வரையில் வாழ்கின்றனர். அவர்களின் பயணத்துக்கான துணுக்காய் மாங்குளம் வீதியில் ஆலக்குளம் சந்தியில் இருந்து கொக்காவில் வரையுள்ள 18 கிலோமீற்றர் வீதி உள்ளது. கொக்காவில் முதல் ஐயங்கன்குளம் வரையான வீதி மட்டுமே சீரமைப்புச் செய்யப்பட்டது. ஏனைய பகுதி வீதி மணல் வீதியாகவே உள்ளது.

அந்த வீதி சேதமடைந்த நிலையில் உள்ளதால் எந்தப் போக்குவரத்துச் சேவையும் நடைபெறுவதில்லை. தேறாங்கண்டல், ஐயங்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் தமது அன்றாடப் பணிகளுக்காக தினமும் துவிச்சக்கர வண்டியிலேயே மல்லாவிக்குச் செல்ல வேண்டியுள்ளது.

"இந்தப் பகுதிகளுக்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிம் பல தடவைகள் கோரினோம். அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் எம்மைக் கண்டுகொள்ளவில்லை. தேர்தல் காலங்களில் மட்டும் போக்குவரத்துச் சேவை நடத்தப்பட்ட சம்பங்களும் உண்டு. எமது கிராமத்தில் உள்ளவர்களின் அவல நிலையைக் கருத்தில் கொண்டு போக்குவரத்துச் சேவையைத் தொடர்ச்சியாக நடத்த ஆவன செய்ய வேண்டும்." என்று கிராங்களைச் சேர்ந்தவர்களும், கிராம அபிவிருத்திச் சங்கத்தினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற - 101)

## நேபாளத்தில் மருத்துவ முகாம்களை அமைத்தார் கால்பந்து வீரர் மெஸ்ஸி

காத்மண்டு, மார்ச் 28
உலகின் ஆகச் சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவரான மெஸ்ஸி, தனது நிறுவனமான மெஸ்ஸி பவுண்டேசன் மூலமாக நேபாளத்தில் 14 மருத்துவ முகாம்களை அமைக்கவுள்ளார்.
நேபாளத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் காரணமாக அந்த நாடு மிகப்பெரிய இழப்பை சந்தித்தது. இதையடுத்து, கொஞ்சம் கொஞ்சமாக இயல்பு நிலைக்கு திரும்பி வரும் நேபாளத்தில், மருத்துவ முகாம்களை அமைக்க யுனிசெப் அமைப்புடன் அந்த நாட்டு அரசு ஒப்பந்தம் செய்துள்ளது. யுனிசெப் அமைப்புடன் இணைந்து ஆர்ஜென்ரீனா கால்பந்தாட்ட அணியின் தலைவரும் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி 14 மருத்துவ முகாம்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளார். நான்கு முகாம்களின் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஏனைய



முகாம்களை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



# 1,200 அகதிகள் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டனர்

## இத்தாலிக் கடற்பரப்பில்

உரோம், மார்ச் 28
இத்தாலிக் கடல்பரப்பில் நேற்று முன்தினம் மட்டும் ஆயிரத்து இருநூறு அகதிகள் மீட்கப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈராக், சிரியா நாடுகளில் நடைபெற்றுவரும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் காரணமாகவும், சூடான், சோமாலியா, எத்தியோப்பியா, சிம்பாப்வே, ஆப்கானிஸ்தான், ஈரான், ஏமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் உள்நாட்டுப் போர்சூழல் மற்றும் வறுமை காரணமாகவும் பல்லாயிரக் கணக்கான மக்கள் லிபியாவுக்குச் சென்று அங்கிருந்து இத்தாலிக்கும் இத்தாலியின் கடல்பரப்பின் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கும் அகதிகளாகச் செல்கின்றனர். அவ்வாறு 11 படகுகளில் ஐரோப்பியாவுக்குச் செல்ல எத்தனித்த ஆயிரத்து 200 அகதிகள் நேற்றுமுன்தினம் மட்டும் மீட்கப்பட்டனர் என்று இத்தாலிக் கடலோரக் காவல்படை அறிவித்தது. ஒரு யுவதி மூச்சுத் திணறலினால் சாவடைந்துள்ளார் என்றும் குறிப்பிடப்படுகிறது.
ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் அகதிகளின் எண்ணிக்கை இதுவரை 25 லட்சத்தை எட்டியுள்ளது.
கடந்த வருடம் மட்டும் கிட்டத்தட்ட 6 ஆயிரம் அகதிகள் இத்தாலிக் கடல்பரப்பில் பாதுகாப்பற்ற பயணங்கள் காரணமாகச் சாவடைந்துள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சபையின் முன்னைய அறிக்கையொன்று சுட்டிநிற்கிறது. நடப்பு வருடத்தில் இதுவரை கிட்டத்தட்ட 22 ஆயிரம் அகதிகள் மீட்க ப்பட்டுள்ளனர் என்று இத்தாலிய கடலோர காவல்படையின் அறிக்கை ஒன்று குறிப்பிடுகிறது. (ம)

## 300 சிறுவர்களைக் காவு கொண
## கப்பலைப் பார்த்துக் கண்ணீ

சியோல், மார்ச் 28
300 சிறுவர்கள் உட்பட 304 பேரைக் காவு கொண்ட தென்கொரியக் கப்பல் பொதுமக்களின் கோரிக்கைக் கமைய கடலுக்கு அடியில் இருந்து மீண்டும் தூக்கி நிறுத்தப்பட்டது. கப்பலைப் பார்க்க உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோரும் உறவினர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் கப்பலைப் பார்த்ததும் கதறியழுது தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
தென்கொரியாவில் மாணவ, மாணவிகள் உல்லாசப்பயணம் மேற்கொண்ட கப்பலொன்று, ஜிண்டோ தீவில் கடந்த 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி மூழ்கி விபத்துக்குள்ளானது. இதில் 304 பேர் சாவடைந்தனர். அவர்களில் 300 பேர் சிறுவர்கள். இந்த சோகத்தில் இருந்து சிறுவர்களின் பெற்றோர் இன்னும் மீள முடியாமல் தவிக்கின்றனர். 6 ஆயிரத்து 825 தொன் எடையுடைய அந்த கப்பல், கடலுக்கு அடியில் மூழ்கியது. கப்பலை தூக்கி நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை அங்கு வலுத்தது. இதையடுத்து அதற்கான நடவடிக்கையை அந்த நாட்டு அரசு மேற்கொண்டது.
அதன் விளைவாக கடுமையான முயற்சிக்குப் பின்னர் அந்தக் கப்பல் சிலதினங்களின் முன்னர் தூக்கி நிறு த்தப்பட்டது. விபத்தில் சாவடைந்த சிறுவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கப்பலை நேரில்சென்று பார்த்து கதறியழுகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)





## மணிக்கு 300 கி.மீ. வேகத்தில் ஆஸியை நெருங்குகிறது புயல்

சிட்னி, மார்ச் 28
மணிக்கு 300 கிலோ மீற்றர் வேகத்தில் ஆஸ்திரேலியாவை புயலொன்று நெருங்கி வருகிறது. டெபி என்று பெயரிடப்பட்டுள்ள குறித்த புயல் மிகவும் அபாயகரமானது என்று அதியுயர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
குவீன்ஸ்லாந்தில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான விட்சன்டே தீவுகளில் இருந்து டெபியின் கோரத்தாண்டவம் ஆரம்பமாகும். முன்னேறி வரும் டெபி புயலின் சீற்றத்தில் இருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் பல்லாயிரக்கணக்கானோரை பேரிடர் மேலாண்மை குழுவினர் அவசரமாக வெளியேற்றி, பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்துள்ளனர். புயலால் முக்கிய துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன. புயல் தாக்கவுள்ள பகுதிகளுக்கு எரிபொருள் மற்றும் உணவு வகைகள் கூடுதலாக அனுப்பி வைக்கப்பட்டன. எவ்வித அசம்பாவிதத்தையும் சமாளிக்கும் வகையில் ராணுவ சிப்பாய்கள், பேரிடர் மீட்புக் குழுவினர் மற்றும் நீச்சல் படை வீரர்கள் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர். பலத்த காற்றுக் காரணமாக கடல் அலைகள் கிட்டத்தட்ட இரண்டு மீற்றர் உயரமுள்ளவையாக அமைந்தன என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மீண்டும் மீண்டும் ஏமாற்றியபடி நகர்வதுதான் அரசின் திட்டம்

வழக்கம் போலவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் தீர்மானம் நிறைவேறும் வரை பதுங்கியிருந்துவிட்டுப் பின்னர் தீர்மானத்துக்கு மாறான கருத்துக்களைத் தெரிவிக்க ஆரம்பித்துவிட்டது கொழும்பு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் கடந்த வியாழக்கிழமை நிறைவேற்றப்பட்ட தீர்மானம், 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும்படி கேட்கிறது. அந்தத் தீர்மானத்துக்கு ஜெனிவாவில், ஏனைய 35 நாடுகளுடன் இணைந்து இலங்கையும் இணை அனுசரணை வழங்கியிருந்தது.

தீர்மானத்தில் இருந்து முழுமையாக நடைமுறைப்படுத்தல் என்கிற வார்த்தையை நீக்கி 2015 தீர்மானத்தை சாத்தியமான வழியில் நடைமுறைப்படுத்துதல் என்று மாற்றுவதற்குக் கொழும்பு எடுத்த முயற்சிகள் தோற்றுப்போன நிலையில்தான் தீர்மானத்தை அப்படியே ஏற்று அதற்கு இணை அனுசரணை வழங்கியது கொழும்பு.

ஆனால், அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சில நாள்களிலேயே ஐ.நா. மனித உரிமைகள் சபை பிறப்பிக்கும் கட்டளைகளுக்கெல்லாம் தலையாட்ட முடியாது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருக்கிறார்.

''ஐக்கிய நாடுகள் சபையுடன் முரண்படுவதற்கு அரசு தயாரில்லை. அதற்காக அந்தச் சபை பிறப்பிக்கும் கட்டளைக்கெல்லாம் தலையாட்ட முடியாது'' என்று அவர் கூறியிருந்தார்.

கொழும்பு ஆள்மன எண்ணவோட்டத்தை அச்சொட்டாக வெளிப்படுத்தும் கருத்து இது. உலக அரங்கில், மேற்கு நாடுகளுடனோ, அவற்றின் ஆதிக்கத்தில் இருக்கும் ஐக்கிய நாடுகள் சபையுடனோ முரண்படாமல் இருப்பதற்காக அவை வலியுறுத்தும் எல்லாவற்றுக்கும் தலையையாட்டி ஆமாம்சாமி போட்டுப் பிரச்சினையில் இருந்து தப்பிப்பது பின்னர் அதனை நிறைவேற்றாமல் கடுக்காய் கொடுத்துவிட்டு மீண்டும் பிரச்சினை எழும்போது அதே உத்தியைக் கையாள்வது என்பதே கொழும்பின் நடைமுறை. அதனையே அது 2015 ஐ.நா. தீர்மானத்தின் போதும் செய்தது. இந்தத் தடவையும் செய்துள்ளது.

அமைச்சரின் கருத்துப்படி, தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தையும் கொழும்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்போவதில்லை. அதாவது 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐ.நா. தீர்மானத்தை அது நிறைவேற்றப்போவதில்லை. அதிலும் குறிப்பாக, போர்க்குற்றவிசாரணைகளுக்கான கலப்புநீதிமன்றத்தை வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் நடைமுறைப்படுத்தப்போவதில்லை.

கடந்த வாரத்தில் ஐ.நா. தீர்மானம் மீண்டும் நிறைவேற்றப்படுவதற்கு முன்னதாவே கொழும்பின் அரச தலைவர்கள் உறுதியாக இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார்கள். நாட்டுக்காகப் போர்புரிந்த படையினரைத் தண்டிக்கப்போவதில்லை என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார். ஆனால், அதே படையினர் மீதே போர்க் குற்றங்கள் எனக் கொள்ளத்தக்க மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்த குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன. தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, கலப்பு நீதிமன்றம் நாட்டின் அரசியல் சூழலில் பொருத்தமற்றது என்றார். ஆயினும் தீர்மானம் நிறைவேறுகின்ற நாள்களில் அனைத்துத் தலைவர்களும் வாய்மூடி அமைதி காத்தார்கள்.

எனவே இரண்டாவது ஐ.நா. தீர்மானத்தின் பின்னரும் கலப்பு நீதிமன்றத்தைக் கொழும்பு உருவாக்கி போர்க்குற்ற விசாரணைகளை நடத்தப்போவதில்லை என்பதையே சபை முதல்வர், அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சூசகமாகச் சொல்லியிருக்கிறார்.

நெருக்கடி மிக்க நிலைகளில் உலகையும் ஐ.நாவையும் நம்ப வைத்து கால அவகாசத்தை வாங்குவதும் பின்னர் அதனை நிறைவேற்றாமல் விடுவதும்தான் கொழும்பின் திட்டம் என்பது தெளிவாகின்றது.

இந்த நெருக்கடியைத் தாண்டுவதற்கு பன்னாட்டு குற்றவியல் விசாரணை ஒன்றை நோக்கிச் செல்வதற்கான முயற்சிகளைத் தமிழர் தரப்பு இப்போதே தொடங்கியாகவேண்டும். அடுத்து வரும் இரண்டுவருட கால அவகாச முடிவின்போதாவது உண்மையானநீ யை அடையத் தமிழர்கள் திடசங்கற்பம் பூணவேண்டும்.

# நடிகர் ரஜனிகாந்தின் இலங்கைப் பயணம் கைவிடப்பட்டதன் பின்னணி என்ன?

ந.லோகதயாளன்

வட இலங்கையில் கடந்தவாரம் ரஜனிகாந்த் என்கின்ற ஓர் அலை அடித்து ஓய்ந்தது. தமிழர் தேசத்தில் இன்று உள்ள பல தேவைகளுக்குத் தீர்வு கிடைக்காத நிலையில், திரைப்படக் கலைஞரொருவர் வந்து மக்களின் மனநிலையை மாற்ற முயலக் கூடாது. அதனால் வடக்குக்கு நடிகர் ரஜனிகாந்த் வரக் கூடாது என ஒரு புதிய சர்ச்சையும் எழுப்பப்பட்டு, அரசியல் நாடகம் ஒன்று நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் யாழ்ப்பாணத்துக்கு இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி வருகை தந்தமையினால் எந்தவொரு நன்மையோ அல்லது எந்தவிதமான மாற்றமோ ஏற்படாத நிலையில், நடிகர் ரஜனிகாந்தின் வருகையினால் நன்மை கிட்டிவிடும் என இங்கு எவருமே எதிர்பார்க்கவும் இல்லை. இந்தியப் தலைமை அமைச்சரது பயணம் மூலமே மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்றால், இனிமேல் இந்தியாவின் அடித்தள நிலையில் உள்ளவர்களாலோ அல்லது எவர் மூலமோ அரசியல் மாற்றம் ஏற்படப் போவதில்லை என்பதே யதார்த்தம்.

இந்த நிலையில், 'லைக்கா' நிறுவனத்தினரால் வடக்கின் வவுனியாவில் பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த மக்களுக்கே சின்னடம்பன் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட 150 வீடுகளை பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வுக்காக வருகை தரவிருந்த ரஜனிகாந்த் யாழ்ப்பாணத்துக்கும் பயணிப்பதென்பது ஒரு சாதாரண விடயம்.

ஆனால் ஏன் இது பூதாகரமாக்கப்பட்டது என்பதே தற்போது அனைவர் மனதிலும் எழுகின்ற கேள்வியாகும். வடக்கு மக்கள் பெரும் சோகத்தோடும், வேதனையோடும், போராட்டத்தின் மத்தியில் வாழும் நிலையில், இவ்வாறான ஒரு பயணம் தேவைதானா எனவும் கேள்வி எழுப்பப்பட்டது.

இருப்பினும், இந்தக் கேள்விக்கு பதில் கிடைக்காதபோதிலும் ரஜனிகாந்தின் வருகையால் தமிழரசுக் கட்சிக்கு ஏதேனும் நன்மை அல்லது மக்கள் பலம் கிடைத்துவிடும் என அஞ்சும் சக்திகளே இதனைத் தடுப்பதில் முனைப்புக் காட்டியதாகவும் தெரிகின்றது.

இதற்குக் காரணம் ரஜனிகாந்த் வருகைதரும் 150 வீட்டுத்திட்டத்திற்கான வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் 'லைக்கா' நிறுவனத்தினால் அழைக்கப்பட்டவர்களில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் ஒருவர் என்பது மட்டுமே இதற்குள் இருக்கும் சூட்சுமம் என்று இன்னுமோர் கருத்தும் உள்ளது.

> இங்கே ரஜனி தமிழர் அல்ல என்ற வாதம் முன்வைக்கப்பட்டால் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தொடர்பான கேள்விக்கும் அவர்கள் விடையளிக்க வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொண்டால், இந்த விடயத்தின் உண்மை வெளித்தெரியும். ஆக மொத்தம், தற்போது ரஜனியின் வருகை தடுக்கப்பட்டு விட்டது. தடுக்க முனைந்தவர்களின் நோக்கம் நிறைவேறிவிட்டது. சின்னடம்பனில் குடியேற முனைந்த எமது மக்களுக்காகக் கட்டப்பட்ட அந்த 150 வீடுகளும் அன்றைய தினம் உரிய மக்களிடம் கையளிக்கப்பட்டு அந்த மக்களின் தேவை நிறைவேறுமா? என்பது அந்த நிறுவனத்தின் கையில் உள்ள அடுத்த முக்கிய பிரச்சினை.

### தடைப்பட்ட ரஜனியின் இலங்கைப் பயணம்

ரஜனியின் இலங்கைப் பயணம் குறித்து தலைதூக்கிய சர்ச்சை இதனை எதிர்ப்பவர்கள் கூறுவதுபோன்று, ஈழத்தில் காணாமல்போனோர் விடயம், நில மீட்பு விடயம் உள்ளிட்ட பல விடயங்கள் தற்போது பரபரப்பாக இடம்பெற்றுவருவது தொடர்பில் எவருக்குமே மாற்றுக் கருத்துக் கிடையாது. இதேநேரம் இந்திய மத்தியஅரசுடன் நெருங்கிய உறவு உள்ள ஒருவர், வெறும் 150 வீடுகளைக் கையளிப்பதற்காக வரத்தான் வேண்டுமா? எனவும் கேள்வி எழுப்பப்பட்டது. இந்தக் கருத்துக்காகத்தான் ரஜனியின் வருகை எதிர்க்கப்பட்டதாகக் கூறினால், அதைவிட மடமைத்தனம் வேறேதும் இருக்க முடியாது. இங்கே உண்மையில் தெரிவது ரஜனி மீதான எதிர்ப்பா? அல்லது தேவையுள்ள மக்கள் மீதான அக்கறையா? என ஆராய்ந்தால், இவற்றில் இரண்டுமே இல்லை என்பது தெளிவாகப் புலனாகின்றது. ரஜனி மத்திய அரசோடு நெருக்கமானவர் என்றும், ஓர் இந்தியக் கலைஞனின் வருகை, எமது போராட்டப் பார்வையைத் திசைதிருப்பும் என்பதும் ஒரு ஒப்புக்கு உண்மை என எடுத்துக் கொண்டால், இங்கே பல கேள்விகள் எழும்.

அதாவது, ரஜனி மத்திய அரசுக்கு நெருக்கமானவர் என்றுதான் கூறப்படுகின்றது. மத்திய அரசின் தலைமை அமைச்சரே இங்கு வந்தவேளை என்ன கோரிக்கையை முன்வைத்தீர்கள் என்ற ஒரு கேள்வியை எழுப்பினால், அதற்கு இந்த எதிர்ப்புச் சக்திகளிடம் பதிலுண்டா? மோடியின் வருகையின்போது வடமாகாணத்துக்கு என்ன தேவை என்று ஏதாவது திட்டங்களை அல்லது இதுதான் தீர்வாக எதிர்பார்க்கின்றோம் என்ற எழுத்துமூலமான கோரிக்கை எவையும் இன்றி, பேச்சில் மட்டும் தீர்வு தொடர்பில் கோரியது நியாயமா? அது இன்றுவரையில் நகைப்புக்கிடமாகவே உள்ளது.

### மற்றும் பலபேர் ஏற்கனவே வந்து போனார்கள்தானே?

இதற்கு அப்பால் இது ஒரு கலைஞனின் வருகை என மட்டுமே நோக்கினாலும், பாரதிராஜாவின் வருகை, வைரமுத்துவின் வருகையும் அதனோடு இடம்பெற்ற நிகழ்வுகளும், அதற்கும் அப்பால் எமது மக்களின் பணத்தைச் சுருட்டும் பாலசுப்பிரமணியம், கங்கை அமரனின் வருகைகள் இவை அனைத்து நிகழ்வுகளின் போதும் இவர்கள் உறக்கத்தில் இருந்தனரா அல்லது அப்போது எமது மக்களின் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட்டிருந்தனவா? அல்லது மறக்கப்பட்டனவா என்ற கேள்விகளுக்கு இவர்களின் பதில் என்ன? இவ்விதம் நிகழ்வொன்றுக்கு வருகை தந்த ஒரு கலை

ஞனை வட மாகாண அமைச்சரொருவரது வாகனம்கொழும்புகட்டுநாயக்கா விமான நிலையம் சென்று ஏற்றி வந்ததில் இருந்து திரும்பிச் செல்லும்வரையில் பயன்படுத்தப்பட்டபோது எமது மக்கள் சுதந்திர தமிழீழத்திலா வாழ்ந்தனர்? என்ற வினாவும் எழுப்பப்படுகின்றது.


இதற்கும் அப்பால் ரஜனி பா.ஜ.கவுடன் நெருங்கிய தொடர்புபட்டவர். அதனால் மோடியுடன் பேசி எமது பிரச்சனைக்குத் தீர்வைப் பெற்றுத் தந்தபின்னர் வேண்டுமானால் வரலாம் என்கின்ற கூற்றும் முன்வைக்கப்படுகின்றது. இங்கே வந்த வரவிருந்த கலைஞர்களில் ரஜனி மட்டும் தான் பா.ஜ. கவுக்கு ஆதரவானவரா? என்றால்அதுவும் இல்லை. ரஜனியை விடவும் கங்கை அமரன் நேரடியாகவும் பகிரங்கமாகவும் பா.ஜ.கவுடன் உறவும், பகிரங்க செயற்பாடும் கொண்டவர். அதன் வெளிப்பாடே தமிழ்நாடு ஆர்.கே. நகர்த் தொகுதியில் இடம்பெறவுள்ள இடைத்தேர்தலில் பா.ஜ.க சார்பில் நேரடி வேட்பாளராகவும் களமிறக்கப்பட்ட நிலையில், ரஜனியிடம் சென்று ஆதரவு கோரியபோது எந்தக்கட்சிக்கும்நேரடிஆதரவுஇல்லை என்ற பதிலே ரஜனியால் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பவாதக் கருத்துக்கள் மூலமும், சிலரது போலிக் கூட்டுகளும்போலி உணர்வுகளுமே வெளித்தெரிந்தனவே அன்றி இதில் உண்மையான உணர்வு உண்டா என்பதே பெரும் கேள்வி. ஒரு வேளை ரஜனியின் சொல் பெரிதாக தமிழ் நாட்டில் ஏற்கப்படும் என்ற நிலையோ அல்லது அவரால் எதையாவது சாதிக்க முடியும் என்ற நிலமையோ இருந்தால், அதனையும் இந்த அவலப்பட்ட மக்களின் விடிவுக்காகத் திருப்பி இருப்பின், அதுவே உண்மையான அரசியல் வெற்றியாகக் கொள்ளப்பட்டிருக்கும்.

இதேவேளை, இங்கே சிலர் எதிர்ப்பை வெளிப்படுத்திய அதே நேரம்,ஒரேகூட்டில்இணைந்துள்ள தமிழக அரசியல் கட்சிகளது சில உறுப்பினர்களும் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கத் தவறவில்லை என்பதனாலேயே இச் சந்தேகம் மேலும் வலுப் பெறுகின்றது. ரஜனி ஓர் தீர்மானிக்கும் சக்தியாகவோ அல்லது மக்கள் பலம் கொண்டவராகவோ காணப்படின், அவர் அழைக்கப்பட்டு, அவர் வந்த நோக்கத்துடன் எமது நிலமைகள், தேவைகளையும் புரிய வைத்திருந்தால், அது உலக அளவில் மேலும் எடுத்தியம்பப்பட்டிருக்கும் . தமிழகத்தில் குறிப்பிட்ட அளவு மக்கள் அபிமானம் பெற்ற கலைஞனைப் பகைத்ததினால் அந்தக் கலைஞனின் ரசிகர்களின் பகையாகவே இது மாறும். இதனால் பயணத்தை எதிர்த்தவர்கள் நாளை தமிழகம் செல்லும் போது இந்திய ரசிகர்கள் எதிர்ப்புப் காட்டும் நிலமை ஏற்படக்கூடும்.

### பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதையா?

அவ்வாறு நிகழுமாயின், அது பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காக மாறிய கதையாகிவிடும். இங்கே எந்தனையோ வேண்டாதவர்கள், விரும்பாதவர்கள் எல்லாம் வந்து எமது பணத்தையும் சுருட்டிக் கொண்டு போகும்போது பேசாமல் இருந்துவிட்டு, ரஜனி என்னும் கலைஞனுக்கு மட்டும் எமக்கு வேண்டாதவர் என்று எதிர்ப்பைக் காட்டுவது மேலும் பாதகத்தையே ஏற்படுத்தும். அவ்வாறு ஓர் பாதக நிலைஏற்பட்டால்,அதற்கும்நொண்டிக் காரணம் தேடப்படுமே அன்றி, நாமே பொறுப்பு என மக்கள் முன் துணிந்து கூற ரஜனியின் வருகையை எதிர்த்தவர்கள் முன் வருவார்களேயானால் ஒருவேளை உண்மையான அரசியல் நிலைப்பாடாக அதனைக் கருத முடியும்.



ஏற்கனவே காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராட்டத்தை நடத்திய கட்சி, 1987முதல் 1990 வரையில் ஒருகட்டமாகவும், பின்னர் இன்னுமோர் கட்டமாகவும் பல தமிழ் இளைஞர்களைக் காணாமல் போகச் செய்த ஒரு கட்சியே இன்று அந்தப் போராட்டத்தை நடத்தியதுஎன்றபழிச்சொல்லில்இருந்து திசை திருப்ப முனைபவர்கள், தம்மால் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்குப் பதில் கூறுவார்களா என்ற தமிழ் மக்களின் நியாயமான கேள்விக்கு பதிலளிக்காது, அந்தக் கேள்விகளை மறக்கச் செய்யும் நோக்கிலேயே ஓர் புகழ்மிக்க கலைஞனின் விடயத்தைக் கையில் எடுத்ததாக இன்னுமோர் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது.

அதாவது, முன்பு செய்த பாவங்களுக்கு விமோசனம் தேடவும், தமது அணியின் ஆதாயம் கருதியும் தாளம் போடுகின்றது ஒரு அணி. அந்த தாளத்துக்கு ஆடாது, கிடைக்கும் சந்தர்ப்பம் அனைத்தையுமே எமது மக்களின் விடிவுக்கும் வாழ்வியலின் மேம்பாட்டுக்கும் பயன்படுத்த முனைந்திருக்கவேண்டும். இங்கே ரஜனி தமிழர் அல்ல என்ற வாதம் முன்வைக்கப்பட்டால் எஸ்.பி.பாலசுப்பிரமணியம் தொடர்பான கேள்விக்கும் அவர்கள் விடையளிக்க வேண்டும் என்பதனையும் கவனத்தில் கொண்டால்,இவ்விடயத்தின்உண்மை வெளித்தெரியும். ஆக மொத்தம், தற்போது ரஜனியின் வருகை தடுக்கப்பட்டு விட்டது. தடுக்க முனைந்தவர்களின் நோக்கம் நிறைவேறிவிட்டது. சின்னடம்பனில் குடியேற முனைந்த எமது மக்களுக்காகக் கட்டப்பட்ட அந்த 150 வீடுகளும் அன்றைய தினம் உரிய மக்களிடம் கையளிக்கப்பட்டு அந்த மக்களின் நோக்கம் நிறைவேறுமா? என்பது அந்த நிறுவனத்தின் கையில் உள்ள அடுத்த முக்கிய பிரச்சினை.

இந்தியாவின் ரஜனிகாந்தையோ அல்லது ஈழத்தில் உள்ள எந்த ஒரு வடிவேலுவையோ அழைத்து வந்து வீட்டை எங்களுக்குத் தரட்டும் என மக்கள் எண்ணுகின்றனர். ஏனெனில், இங்கு படித்துபெயர்பெற்றவர்களைவிடவும், குற்றம் கண்டு பிடித்துப் பெயர் எடுப்பவர்களே அதிகம் என்பதனை அவர்களும்புரிந்துகொண்டுவிட்டனர்.

ரஜனி வந்தால் என்ன வராவிட்டால் என்ன, வடக்கு மக்களின் விடிவுக்கு வடக்கு மக்கள் மட்டுமே போராட வேண்டிய நிலமைதான் இன்று உள்ளது. இன்று போராடுகின்றோம் எனக் கூறுபவர்கள் உரிய நேரத்தில் எல்லோருடனும் ஒன்றிணைந்து போராட முன்வராது ஒதுங்கிக்கொண்டவர்கள்தானே?



## வாசகர் திருமுகம்

### மக்களுக்கு இடையூறின்றி மலக்கழிவகற்றல் மேற்கொள்ளப்படல் வேண்டும்

நெருக்கமான கட்டடத் தொகுதிகள், தேநீர்க் கடைகள், அரச செயலகக் கட்டடத் தொகுதிகள், ஏனைய தனியார் அரச அலுவலகங்கள் இயங்கும் சுற்றாடலில், காலை 7 மணிமுதல் மாலை வரை பல்வேறு தேவைகளுக்காக பல்வேறு வகையான பொதுமக்கள், அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள், வாகனதாரிகள் எனப் பலர் வீதியால் பயணிக்க நேர்ந்துள்ள சூழ்நிலையில், சுகாதாரச் சீர்கேட்டையும், தாங்க முடியாத கடும் துர்நாற்றம், வாந்தியை உண்டாக்கும் வகையிலான கெட்ட மணம் பரப்பும் வகையில் மலக்கழிவு அகற்றப்பட்டு வருகின்றமையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணம் அரச செயலக (கச்சேரி) கட்டட வளாகத்திலிருக்கும் மிகப் பெரிய மலக்கழிவுத் தொட்டிகளில் இருந்து காலை 8 மணிக்கும் பி.ப.4 மணிக்கும் இடையில் மாதத்தில் பல தடவைகள் மாநகர சபையினர் மற்றும் ஒப்பந்தகாரர்கள் மூலம் மலக்கழிவு அகற்றல் நடைபெற்று வருவதால், பல தரப்பினரும் பல வகைகளில் பாதிக்கப்படுகின்றனர்.

மேலேகாட்டிய வகையான பலதரப்பு மக்களுக்கும், சுற்றாடலிலுள்ள தேநீர், உணவுச் சாலைகளில் உணவு உட்கொள்வோர் எனப் பலருக்கும் அசௌகரியம், துர்நாற்றம் வீசும் நிலையில் காலை 8மணிமுதல் மாலை 4 மணிக்குள் விரும்பிய நேரங்களில் மேற்கொள்ளப்படும் அரச செயலக மலக்கழிவகற்றல் செயல்பாடு தவிர்க்கப்பட்டு மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுதல் அவசியமாகும். காலை 5மணி முதல் 6மணிக்குள்ளேயோ அல்லது மாலை 6.30மணிக்குப் பின்னரோ அந்த மலசலக்கழிவுத் தொட்டியிலிருந்து மலக்கழிவுகளைப் பவுசர் வாகனங்கள் மூலம் அகற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளும் வகையில் உரிய பகுதியினரும், அரச செயலக உயர் அதிகாரிகளும், மக்கள் நலன்கருதி, சுகாதார நலன் கருதி, ஆவன செய்து உதவுமாறு அன்பான வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

*வ.க.ஜெயபாலன்*
*சமாதான நீதிவான்*
*யாழ்ப்பாணம்*

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை வெளிப்படுத்த வலியுறுத்தி நடத்தும்

# போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்

## மருதங்கேணியில் தொடர் போராட்டம் நடத்தும் மக்கள் வேண்டுகோள்



யாழ்ப்பாணம், மார்ச் 28
போராட்டம் ஆரம்பித்து 11 ஆவது நாளாகின்றது. இதுவரை எவரும் வந்து எமது பிரச்சினையைக் கேட்கவில்லை. நாங்கள் எங்கள் உறவுகளை மீட்கவே போராட்டம் நடத்துகின்றோம். எமது போராட்டத்துக்கு ஆதரவளியுங்கள்.

இவ்வாறு விரக்தியுடன் தெரிவித்தனர் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை விடுவிக்க வலியுறுத்தி வடமராட்சி மருதங்கேணியில் போராட்டம் நடத்திவரும் மக்கள்.

"எமது உறவுகளை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம். எமது போராட்டம் இன்று 11 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. இதுவரை எவரும் இங்கு வந்து எமக்கு ஆதரவு தரவில்லை. அரசியல் தலைவர்களும் வரவில்லை. எமது போராட்டத்தில் பங்குகொள்ளாவிட்டாலும் ஆதரவு தெரிவித்திருக்கலாம். வாக்குக் கேட்கும்போது வருவார்கள். எமக்குப் பிரச்சினை என்றால் ஒதுங்கிக் கொள்கிறார்கள்." என்று அவர்கள் விரக்தியுடன் கூறினார்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 5 மாவட்டங்களில் மேற்கொண்டுவரும் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது. வடக்கில் கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய 4 மாவட்டங்களிலும் கிழக்கில் திருகோணமலையிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்படுகின்றன. தமக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டங்களைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படும் போராட்டங்களுக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருகின்றனர். பொது அமைப்புகள், பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் தலைவர்கள், இளைஞர்கள் எனப் பல தரப்பினர் போராட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று தமது ஆதரவைத் தெரிவிக்கின்றனர்.

நேற்று கிளிநொச்சி மாவட்டத்தில் 36 ஆவது நாளாகவும், வவுனியா மாவட்டத்தில் 32 ஆவது நாளாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணத்தில் 13 ஆவது நாளாகவும், கிழக்கில் திருகோணமலையில் 23 ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்ந்தன.

"நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்து எமக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர். எங்கள்போராட்டத்தின்நியாயத்தன்மையை உணர்ந்து கொண்டுள்ளார்கள். இதே போல் அரசும் உணர்ந்து எங்கள் பிள்ளைகளை எம்மிடம் கையளிக்க வேண்டும்." என முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த







காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர். மருதங்கேணியில் நடத்தப்படும் போராட்டத்துக்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என்று அங்கு தொடர் போராட்டம் நடத்தும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ற - 21,7,35,26)





# 5 நாள் கடந்து தொடர்கின்றது முள்ளிக்குளம் போராட்டம்

மன்னார், மார்ச் 28
தமது பூர்வீக நிலங்களில் நிலை கொண்டிருக்கும் கடற்படையினர் அவற்றிலிருந்து வெளியேற வேண்டும் என்று வற்புறுத்தி முள்ளிக்குளம் மக்கள் நடத்திவரும் தொடர் போராட்டம் நேற்று 5ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

தமது பிரச்சினை தொடர்பாக அதிகாரிகள் அசமந்தப் போக்குடன் செயற்படுகின்றனர் என்று போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

மக்களின் போராட்டத்துக்கு பொது அமைப்புக்கள், அருட்தந்தையர்கள்,மீனவ அமைப்புக்களின் பிரதி நிதிகள், தொண்டு அமைப்புக்களின் பிரதி நிதிகள், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

நேற்று மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உட்பட அருட்தந்தையர்கள் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களை சந்தித்தனர்.

தமது போராட்டம் தொடர்பாக மாவட்டத்தில் உள்ள உயர் அதிகாரிகள் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை என தெரிவித்த முள்ளிக்குளம் மக்கள் எத்தனை நாள்கள் கடந்தாலும் நிலம் மீட்கப்படும் வரை போராட்டம் தொடரும் எனவும் தெரிவித்தனர்.

(ற - 56)

# ஊழியர்களின் செயலால் அவதிப்படும் பயணிகள்

கிளிநொச்சி, மார்ச்28
பளை முகமாலைக்கு இடைப்பட்ட பகுதியில் அரச மற்றும் தனியார் பேருந்துகள் பயணிகளை ஏற்றாமல் செல்கின்றன என முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பளையிலிருந்து முகமாலைக்கும், முகமலையிலிருந்து பளைக்கும் செல்லும் குறுந்தூரப்பயணிகளே இவ்வாறு தவிர்க்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

ஏ9 வீதியில் பயணிக்கும் பேருந்துகள் மேற்படி பிரதேசங்களுக்குள் வரும்போது வீதிகளில் காத்திருப்போரிடம் எங்கே செல்கிறீர்கள் எனக் கேட்டுவிட்டு, இடத்தைச் சொன்னதும் ஏற்றாது செல்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் வயோதிபர்களும், கைக்குழந்தைகளுடன் காத்திருப்போரும் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றும் விசனிக்கப்படுகிறது.

இவர்களின் செயலால் பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இதற்கு முன்னர் ஒருநாள் இவ்வாறு பேருந்துகள் பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்வதை மறைந்திருந்து அவதானித்த பற்றுச்சீட்டுப் பரிசோதகர்கள், பின்னர் தாங்களே பஸ்ஸை நிறுத்தி மாணவர்களை ஏற்றி அனுப்பிய சம்பவமும் இடம்பெற்றதுண்டு.

இது தொடர்பில் வடமாகாண போக்குவரத்து அமைச்சரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ற - 21)

# 13 மாடுகளை கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் கைது

வவுனியா, மார்ச் 28
சட்டவிரோதமாக ஆவணங்கள் ஏதுமின்றி படிரக வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட 13 மாடுகள் மீட்கப்பட்டுள்ளன. வாகனங்களின் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

"வவுனியா, ஹெப்பிட்டிக் கொலாவவில் நேற்றுமுன்தினம் இரு படி ரக வாகனங்களில் மாடுகள் கொண்டு செல்லப்படுகின்றன என்று தகவல் கிடைத்தது. அந்த வாகனங்கள் சிறப்பு அதிரடிப் படையினரால் மறிக்கப்பட்டு சோதனையிடப்பட்டன. அவற்றில் மாடுகள் இருந்தன. மாடுகளை ஏற்றிச் செல்வதற்கான ஆவணங்கள் சாரதிகளிடம் இருக்கவில்லை. சாரதிகள் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

மாடுகள் ஒட்டுசுட்டான், நெடுங்கேணி ஆகிய இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவை என்று கூறப்பட்டது. ஹொரவப்பொத்தான கொல்களத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன என்றும் விசாரணைகளின் தெரியவந்தது. விசாரணையில் பின்னர் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை நீதிமன்று பிணையில் செல்ல அனுமதித்தது" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ற - 21)

## 53 இல்...

உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். அவரது கட்சித் தலைமையகத்தில் நேற்று மாலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போராட்டத்திற்காக நாடு ஆயத்தப்படுத்தப்பட்டு வருகின்றது. அரசு தொடர்ந்தும் தேர்தல்களை ஒத்தி வைத்து மக்களை ஏமாற்றி வருகின்றது.

**ஐ.நா. தீர்மானம்**

2015 ஆம் ஆண்டு தீர்மானத்தை நிறைவேற்றத் தமக்கு 2 வருடகால அவகாசம் வழங்கப்பட்டமையானது இராஜதந்திர ரீதியிலான வெற்றி என்று அரசு தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. பன்னாட்டுச் சதிவலையொன்று இலங்கைக்கு எதிராகப் பின்னப்பட்டுள்ளதை அரசு இன்னும் உணரவில்லை. இலங்கை பொருளாதார வீழ்ச்சியை நோக்கிப் பயணிக்கின்றது. இதனால் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்குக் கொடுத்தே ஆகவேண்டும் என்ற சூழலும் உருவாகியுள்ளது. இன்னும் சிறிது காலத்திலேயே நாட்டில் பெரியளவிலான பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டவுடன், உலக வங்கியூடாக இலங்கைக்கு கடன் வழங்க மேற்குலக நாடுகள் முன்வரும். இப்படி உதவிக்கு வருபவர்கள், கூட்டாட்சித் தீர்வை முன்வைத்த அரசமைப்பு உருவாக்கப்படல் வேண்டும் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து பன்னாட்டு நீதிமன்றமொன்றை அமைக்க வேண்டும் என்று கடனுக்கான நிபந்தனைகளை விதிப்பார்கள். நாட்டில் நிலமை மோசமாக இருக்கும் காரணத்தால் அரசு இந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்படவேண்டும்.
1998ஆம் ஆண்டில் இந்தோனேசியாவில் பெரிய பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோது, அந்த நாட்டுக்குக் கடன் வழங்க முன்வந்த உலக வங்கியானது இந்தோனேசியாவிலிருந்து கிழக்குத் தீமோரைப் பிரிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தான் முதலாவதாக விதித்தது.
இவ்வாறான ஒரு நிலமை தான் இலங்கைக்கும் ஏற்படும். எமது நாட்டு மக்களினாலேயே பன்னாட்டு நீதிமன்ற மொன்று வேண்டும், கூட்டாட்சித் தீர்வொன்று வேண்டும் என்று கூற வைப்பதற்காகவே பன்னாட்டுச் சமூகம் இலங்கைக்கு அடுத்த இரண்டு வருட காலத்தை வழங்கியுள்ளது. இதன் பாதகத் தன்மையை உணர்ந்து அரசு அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார். (த-5)

## இலங்கைக்கு...

தூதுவர் ஹென்ஸ் வோக்கர் தெதர்கோன் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறை மாணவர்களை, பல்கலைக்கழகத்தில் தூதுவர் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது சட்டத்துறை மாணவர்கள், ஜெனிவாத் தீர்மானம், நிலைமாறு கால நீதிப் பொறிமுறை, புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் கேள்விகளை எழுப்பினர். அதற்குப் பதில் வழங்கும் போதே தூதுவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
"உலகில் மிகச் சிறந்த கூட்டாட்சி முறைமையைக் கொண்ட நாடாக சுவிஸ் உள்ளது. அவ்வாறான ஆட்சி முறைமையை இலங்கையில் ஏன் நடைமுறைப்படுத்த முடியாது' என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில், எங்கள் நாட்டின் ஆட்சிமுறையை இலங்கையில் நடைமுறைப்படுத்தலாம் என்ற மனோநிலை எங்களுக்கு இருக்கின்றது. ஆனால் இலங்கை அரசு அதனை எந்தளவு தூரம் ஏற்றுக் கொள்ளும் என்று தெரியவில்லை. கூட்டாட்சி நடைமுறைப்படுத்தப்பட்டால், தென்னிலங்கை, வடக்கு இலங்கை என்று பிரிவினைவாதம் ஏற்பட்டுவிடும் என்று அரசு சிந்திக்கக் கூடும். அதனால் பின்னடிக்கலாம் என்று குறிப்பிட்டார்.
'இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பான உங்களது நிலைப்பாடு என்ன ?' என்று எழுப்பப்பட்ட கேள்விக்கு, இது தொடர்பில் உரிய நடவடிக்கை தேவை என்பது எங்களின் நிலைப்பாடு. ஐ.நாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு கால அவகாசம் கேட்கின்றது. உறுதிமொழிகளை உரியமுறையில் நிறைவேற்றுமா என்று நம்பிக்கையீனம் அதிகரித்துள்ளது. இலங்கைக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்துக்கு எமது நாடு வழங்கும் இறுதி ஆதரவு இதுவாகவே இருக்கும் என்று தெரிவித்தார்.
'இங்கிருந்து பெருமளவானோர் உங்களது நாட்டில் அகதி அந்தஸ்துக் கோரி வருகின்றனர். அவர்கள் தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன ?' என்று சட்டத்துறை மாணவர்கள் வினாவியதற்கு, தற்பொழுதும் இங்கிருந்து அகதி அந்தஸ்து கோரி எமது நாட்டுக்கு வருகின்றனர். போருக்குப் பின்னர் அகதி அந்தஸ்து வழங்கப்படவேண்டிய தேவைப்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. உண்மையில் நாட்டில் பிரச்சினை இருக்கின்றது என்று நியாயமான கோரிக்கை முன்வைக்கப்பட்டால் அவை தொடர்பாக பரிசீலிக்கப்படும் என்றார். (த-58)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**அறிவித்தல்**

கலைப்பீட 3ஆம், 4ஆம் வருட மாணவர்களுக்கான கற்கை நடவடிக்கைகள் 29.03.2017 (புதன் கிழமை) அன்று ஆரம்பமாகும்.
விடுதியில் தங்கியிருக்கும் மாணவர்கள் 28.03.2017 (செவ்வாய்க்கிழமை) அன்று மாலை முதல் தத்தம் விடுதி களுக்கு திரும்பலாம்.
பதிவாளர்
27.03.2017
(C/28565)(10)

**மரண அறிவித்தல்**



தோற்றம் 04 . 06 . 1942 — மறைவு 27 . 03 . 2017

**புஸ்பவதி தனபாலசிங்கம்**

யாழ். சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வளநகர் யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட புஸ்பவதி தனபாலசிங்கம் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று அனிஞ்சியங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.குணாலன்,
கமநலசேவை நிலையம், ஒலுமடு.

தகவல்
குடும்பத்தினர்.
077 369 8001

**நல்லூர் பிரதேச சபை**
**கொக்குவில் உப அலுவலகம்**
**ஆதனப் பெயர் மாற்றம்**

**ஆதன உரிமையாளர் பெயர் : எஸ்.இராஜேந்திரம்,**
**வட்டாரம் - 04, புகையிரதநிலைய வீதி,**
**ஆதன இலக்கம் : 159/1**


மேற்படி விவரத்தோடு ஆதனம் காணப்பட்ட போது அதே ஆதனத்தை கணபதிப்பிள்ளை நிஷாகரன் என்பர் ஆதனப்பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

குறித்த ஆதனங்களை பரிசீலனை செய்ததன் பிரகாரம் ஆரம்ப உறுதியை கணபதிப்பிள்ளை கைம்பெண் பொன்னம்மா என்பவர் பிரசித்த நொத்தாரிசு சோ. தேவராஜா முகதாவில் 1993.07.17 இல் 6071 ஆம் இலக்க உறுதியின் பிரகாரம் வெளிப்படுத்தல் சாதனமாக வழங்கியுள்ளார். கணபதிப்பிள்ளை பரமநாதன், கணபதிப்பிள்ளை தேவராசா, கணபதிப்பிள்ளை தயாபரனும் ஆகியோர் அற்றோணித்தத்துவத்தின் மூலம் கணபதிப்பிள்ளை நிஷாகரன் என்பவருக்கு திருமதி சுதா கஜேந்திரகுமார் முகதாவில் 30.11.2016 இல் 1931 இல் நன்கொடை உறுதி ஊடாக உரிமைகோரி, பெயர்மாற்று விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே குறித்த ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் ஆதனம் தொடர்பாக ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிப்பின் பத்திரிகைப் பிரசுரத்திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் சட்டபூர்வமாக ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினரூடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயரிற்கு குறித்த இலக்கமுடைய ஆவணத்தை பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர்**
**நல்லூர் பிரதேசசபை**

**துயர் பகிர்கின்றோம்**



எமது பாடசாலையின்
உபஅதிபர்
**திரு. சூ. இருதயநாதன்**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி**
**பிறிஜிற்றம்மா**
**சூசைப்பிள்ளை**

அவர்கள் 23.03.2017 அன்று இறைபதம் அடைந்தமையால் துயருறும் உபஅதிபர் அவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனு தாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், அலுவலர்கள்,**
**யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி**

**மரணஅறிவித்தல்கள்**

**தில்லையம்பலம் மகாதேவ**




அன்னை மடியில் - 15.02.1934
சிவனடியில் - 27.03.2017

யாழ். நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் மகாதேவா 27.03.2017 திங்கட்கிழமை சிவபத மடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தில்லையம்பலம் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் ஏகபுத்திரனும் காலஞ்சென்ற கந்தவனம் தையல்நாயகியின் அன்புச்சகோதரனும் காலஞ்சென்ற நாகநாதர் - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக்கணவரும் வாசுகி, மனோகரி (பிரான்ஸ்), மகிந்தன்(UK), சந்திரன், தர்மேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மகுமார், ஸ்ரீதரன் (பிரான்ஸ்), சிவசக்தி (UK), உதயகலா, ஜெயந்தினி ஆகியோரின் அன்புமாமனாரும் சேஜோன், மாஜோன், சுருதிகா, ஷஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 8.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்துக்கு மு.ப 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 36, கைலாசபிள்ளையார்
கோயில்வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 8853



மலர்வு 12 . 08 . 1999 — மறைவு 21 . 03 . 2017

**செல்வன் இரவிச்சந்திரா ஆகாஷ்**

யாழ் நல்லூர் கல்வியங்காட்டை பூர்வீகமாகவும் ஜேர்மனி Bergheim ஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரவிச்சந்திரா ஆகாஷ் அவர்கள் கடந்த 21.03.2017 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்தார்.
அன்னார் இரவிச்சந்திரா தர்சினி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் யாகிஷ், வர்னிஸ், ஜஸ்வந்தி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற இராசையா மற்றும் இந்திராணி, கைலாயநாதன், இந்திராதேவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணிக்கு ஜேர்மனியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல 48, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 8166

# தொடர்ச்சிகள்



குருக்கள் தேவை

வெளிநாடு ஒன்றில் உள்ள அம்மன் கோயிலுக்கு குருக்கள் பட்டம் பெற்ற எல்லா கிரியைகளும் செய்யக்கூடிய குருக்கள் தேவை. தொடர்பு

Apskylimo@gmail.com

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2859 திகதி: 27.03.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
22 24 46 61 Z
போனஸ் இல. 15
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 53,919,197/-
தொ.இ: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
ஊதா நிற டிக்கட்டுக்கள் 29 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL சுப்பர் போல
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 633
சீட்டிழுப்பு திகதி 27.03.2017 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
05 12 15 54 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 324, 508/=
தொ.இ: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
பச்சை நிற டிக்கட்டுக்கள் 30.03.2017 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1352
சீட்டிழுப்பு திகதி 2017.03.27
வெற்றி இலக்கங்கள்
22 35 40 47 W
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 10,000,000/-
தொ.இ: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சகுந்தலாதேவி செல்வரத்தினம்



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்செழு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி செல்வரத்தினம் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தசாமி - தங்கரத்தினம் தம்பதியரின் மருமகளும் செல்வரத்தினத்தின் பாசமிகு மனைவியும் முகுந்தன், சிறிகாந்தன் (யாழ். பல்கலைக்கழக இறுதி வருட கலைப்பீடதிட்டமிடல் மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயும் மங்களேஸ்வரன், கௌரிதேவி காலஞ்சென்றவர்களான சுசீலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் செல்வராசா, விமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் கஜதீபன், செந்தீபன், கார்த்தீபன், பங்குஷா, கிந்துஷன் ஆகியோரின் பாசமிகு சித்தியும் சரண்ஞா, லாவண்ஞா, சாதுர்த்திகா, சாரங்கா, கவிதா ஆகியோரின் பாசமிகு மாமியும் கபிஷா, தர்ணிகா, சதுர்த்திகன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அச்செழு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
அச்செழு, நீர்வேலி.
076 7498944

### கலாபூஷணம் நாகமுத்து செல்லத்துரை
(நவாலியூரான்)



நவாலியூரைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், ஆத்திசூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கண்டி திரித்துவக்கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியருமான கலாபூஷணம் நாகமுத்து செல்லத்துரை (நவாலியூரான்) கடந்த(26.03.2017)ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் மகேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) பாசமிகு கணவரும் காலஞ்சென்ற N.C. முருகேசு (ஆசிரியர்), காலஞ்சென்ற கிரிஸ்ரினாள் ஐயாத்துரை, காலஞ்சென்ற C.P.M சபை தேவ ஊழியர் அரியம் அரியமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற நாகமுத்து குணநாயகத்தின்(ஆசிரியர்) மைத்துனரும் மகிழ்ச்சிகரன்(ஆசிரியை, யா/இந்துக்கல்லூரி), மதியமிர்தன்(சுவிஸ்), மகிழ்வதனன்(சுவிஸ்), பவானி (சுவிஸ்), மதிவண்ணன்(இந்தியா), வோல்ட்டன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிறின்ஸ், ஏஞ்சலா, ஜஸ்மின் ஆகியோரின் அப்புச்சியும், ராஜநாதன், மேசி, கனி, அன்ரூ, ராசாத்தி, தேவிமனோகரன், றஞ்சனா, தயாளம், பாபு, திவி ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (29.03.2017) புதன்கிழமை மு.ப. 9.00 மணிக்கு கந்தர்மடத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, நல்லூர் பரி.யாக்கோப்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்.
தகவல்
குடும்பத்தினர்.

வேலைவாய்ப்பு (வடக்கு, கிழக்கில்)

மலரும் New Year உங்கள் வாழ்வில் ஓர் மாற்றம் தரும் ஆண்டாக அமைய G.M.T Group Company உடன் இணையுங்கள்
* O/L மட்டும் போதுமானது
வயதெல்லை - (18 - 30)
பயிற்சி இல்லையா ? பயிற்சி வழங்கப்படும்.
நிரந்தர தொழில் நிரந்தர வருமானம்
குறைந்தது 18000/= பதவிக்கேற்ப அதிகூடியது 65000/=
(EPF/ETF அடங்கலாக)
குறித்த 50 பேருக்கு வாய்ப்புக்கள்
மேலதிக தகவல்களுக்கு : T.P- 076 989 5016, 077 999 4807

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனத்தில்
கடமையாற்றும்
ம. தர்மேந்திரா
அவர்களின்
அன்புத்தந்தையார்

**தில்லையம்பலம் மகாதேவா**

அவர்கள் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர் - வாணி ரெக்ஸ்
இல. 81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

One Week Course - Full Time
வேலை வாய்ப்புடனான
Video Editing
With DSLR Camera Training
Int. to Digital Video , Adobe Premiere cc , Adobe Photoshop cc
Pinnacle Studio , After effects ,Adobe Audition cc ,Studio Project
Advance Video editing
Visual Effect
DSLR Camera
HD Video editing
DMI COMPUTER EDUCATION
Free
# Softwares
# Effect plugins
# Background Video
Course Fee 7500
DMI COMPUTER EDUCATION
No.113, யாழ்ப்பாணம் 021 222 4403
M.M.V. வீதி, நெல்லியடி 021 226 2470
No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி 021 227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் 021 224 1970
No.19,A9 வீதி, கிளிநொச்சி 021 228 5655

## அறிவித்தல்

**வலிகாமம் தெற்கு பிரதேச சபை**
**உப அலுவலகம் ஏழாலை**
**வட்டாரம் - 02 மல்லாகம், புன்னாலைக்கட்டுவன் வீதி, இல.20**
**ஏழாலை மேற்கு, ஏழாலை.**

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் ஏழாலை உப அலுவலகத்திற்குட்பட்ட ஏழாலை மேற்கு ஏழாலை எனும் முகவரியில் உள்ள ஆதனமானது வட்டாரம் - 02 மல்லாகம் புன்னாலைக்கட்டுவன் வீதியில் ஆதன இல. 20 இல் T. நல்லநாதன் எனும் பெயரில் எமது சபையின் ஆதனவரி பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

ஏழாலை மேற்கு J/201 கிராமசேவகர் பிரிவு ஏழாலை இறை புளியங்கிணற்றடி நிலப்பரப்பு ஒன்றே கால் (11/4) உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.பாலசுப்பிரமணியம் அவர்களின் 26.01.2017 ஆம் திகதிய 406 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தில் துண்டு 01 எனக்குறிப்பிடப்பட்ட நிலப்பரப்பு 1 குழி 06.67 அளவு கொண்ட 4217 ஆம் இலக்க 07.05.2012 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் எழுதிய சீதன உறுதி மூலம் அஜந்தன் மனைவி சரன்ஜாவுக்கு வந்தடைந்த ஆதனத்தினை அஜந்தன் மனைவி சரன்ஜா என்ற பெயரில் பெயர்மாற்றம் செய்யும் பொருட்டு அஜந்தன் மனைவி சரன்ஜா விண்ணப்பித்துள்ளார்.

சுரேந்திரன் பெண் நந்தினி ஆகியோரால் சீதனமாக வழங்கப்பட்டு அஜந்தன் மனைவி சரன்ஜாவிற்கு வந்தடைந்த 4217 இலக்க 07.05.2012 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு சொக்கலிங்கம் சண்முகலிங்கம் எழுதிய உறுதியில் குறிப்பிடப்பட்ட 5340 ஆம் இலக்க 28.08.2001 ஆம் திகதிய பிரசித்த நொத்தாரிசு மு. சபாநாதன் எழுதிய தாய் உறுதியானது ஏழாலை வாசியும் தற்போது ஜேர்மனியில் வசித்துவரும் நல்லைநாதன் சர்வேஸ்வரன் இல.22 அப்துல்ஜாபர் மாவத்தை கொழும்பு 12 இல் வசிப்பவரான நல்லைநாதன் சிறீகாந்தன் ஆகியோரால் பொன்னுத்துரை சுரேந்திரன் பெண் நந்தினிக்கு வழங்கப்பட்டுள்ளது. இவ்வுறுதியில் ந.சர்வேஸ்வரன் என்பவருக்கு பதிலாக இவரின் அற்றோனித்தத்துவகாரரான ந.சிறீகாந்தன் கையொப்பமிட்டுள்ளார். இதற்கான அற்றோனித்தத்துவம் எதுவும் விண்ணபதாரரினால் சமர்பிக்கப்படவில்லை அத்துடன் குறித்த அற்றோனித்தத்துவம் யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் ஒப்படைக்கப்படாமையினால் அதன் பிரதியினை பெறமுடியாதுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற் குறித்த ஆதனத்தை தற்போதைய உரிமையாளர் அஜந்தன் மனைவி சரன்ஜா எனும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அஜந்தன் மனைவி சரன்ஜா எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

மேலும் இப் பெயர்மாற்றத்தால் ஏற்படக்கூடிய எவ் விளைவுகளிற்கும் வலிகாமம் தெற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

## வழிநடத்தல்...

அணியும் கலந்து கொள்ளவில்லை. மிக நீண்ட நேரம் நடைபெற்ற சந்திப்பில், அரசமைப்புத் தொடர்பில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், கூட்டமைப்பின் நிலைப் பாடு தொடர்பில் நீண்ட விளக்கத்தை வழங்கினார் என்று அறிய முடிகின்றது.

வழிநடத்தல் குழுவின் அடுத்த கூட்டம் எதிர்வரும் 4ஆம் மற்றும் 5ஆம் திகதிகளில் நடத்துவது என்றும், அந்தக் கூட்டத்துடன் வழிநடத்தல் குழுவின் விடயங்களை முடிவுக்கு கொண்டு வந்து, இடைக்கால அறிக்கையை சமர்ப்பிப் பது என்றும் தீர் மானிக்கப்படது. இதற்கு கூட்டத்தில் கலந்து கொண்டி ருந்த அனைத்துக் கட்சித் தலைவர்க ளும் இணக்கம் தெரி வித்துள்ளனர்.

இதேவேளை, புதிய அரசமைப்பை உருவாக்கும் வழிகாட் டல் குழுவின் இடைக் கால அறிக்கை கடந்த ஆண்டு டிசெம்பர் 1ஆம் திகதி நாடாளு மன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று முன்னார் அறிவிக்கப்பட்டிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கது. (வ5)

## மைத்திரியுடன்...

பேச்சுநடத்தவுள்ளனர்என்றுதெரிவிக்கப்பட்டது. சந்திப்புக்கான கால நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரும் கடிதம் அரச தலைவருக்கு உடனடியாக அனுப்பப்படும் என்றும் மகிந்த அணி வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக சிறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தை நடத்தி வரும் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் நிலைப்பாடு தொடர்பாக நேற்று மாலை மகிந்த அணியினர் அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தினேஸ் குணவர்த்தன, வாசுதேவ நாணயக்கார, பந்துல குணவர்த்தன, மகிந்தானந்த அளுத்கமகே ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர். விமல் வீரவன்சவின் உடல் நிலையைக் கருத்தில் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அவர்கள் மைத்திரியிடம் வலியுறுத்தினர். இந்த விடயத்தை சபாநாயகர் கரு ஜெயசூரியவின் கவனத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அரச தலைவரும் தலைமை அமைச்சரும் கூட்டாகத் தெரிவித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

## விளை...

பட்ட மனுவை ஆராய்ந்த உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது. மனுவை முன்வைத்தபோது, அந்தச் சங்கத்தினர் மன்றில் கூறியதாவது:

கல்வி அமைச்சின் விளையாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு இராணுவ அதிகாரியை நியமிப்பது, கல்விச் சேவை யாப்புக்கு முரணானது. இதனால் அந்த நியமனத்துக்கு தடையுத்தரவு பிறப்பிக்கும் படி அவர்கள் கோரினர்.

இவற்றை ஆராய்ந்த நீதியரசர்கள் குழாம், வழக்கு விசாரணையை ஜூலை 24 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தது. (கு-5)

## கையூட்டல்...

பட்டார்.
நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்த விவகாரத்தில் அரச அதிகாரிகள் மற்றும் தவறான ஆய்வு அறிக்கையை வெளியிட்டவர்கள் கையூட்டல் பெற்றார்களா என்று விசாரணை நடத்துமாறு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு நீதிமன்றம் வழங்கிய கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்குச் சேர்ப்பிக்குமாறு அவர் மன்றில் கோரினார். அதனை ஏற்ற மன்று மேற்கொண்டு நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு பொலிஸ்மா அதிபருக்கு கட்டளையின் பிரதியை அனுப்பிவைக்குமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டது.
சுன்னாகம் உள்ளிட்ட பகுதிகளில் நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது.
இந்த வழக்கில் மேலதிக விசாரணையை முன்னெடுப்பதற்கு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மல்லாகம் நீதிவான் மன்று கடந்த ஜனவரி 23ஆம் திகதி கட்டளை வழங்கியது.
இந்த நிலையில் பொலிஸ்மா அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் தொழிற்படும் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மன்றில் நேற்று முற்பட்டார்.
நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்த விவகாரத்தில் அரச அதிகாரிகள் மற்றும் தவறான ஆய்வு அறிக்கையை வெளியிட்ட தரப்பினர் கையூட்டல் பெற்றுள்ளனரா என்று விசாரணை நடத்துமாறு நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு மல்லாகம் நீதிவான் மன்று வழங்கிய கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பவேண்டும் என்று பொறுப்பதிகாரி கோரியிருந்தார். அவரது கோரிக்கையை ஏற்ற நீதிமன்று கட்டளையின் பிரதியை பொலிஸ்மா அதிபருக்கு அனுப்புமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டது.
பின்னணி
"நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்த விவகாரம் தொடர்பில் 2011 ஆம் ஆண்டிலிருந்து முறையிட்டுள்ளமைக்கான ஆதாரங்களும் உள்ளன. ஆனால் நிலத்தடி நீரில் பெரும் கழிவுகளை விட்ட குற்றச்சாட்டில் இதுவரை எவருமே கைது செய்யப்படவோ, சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ இல்லை. பதிலாக அவர்களைக் காப்பாற்றும் முகமாக பல தரப்பினரும் முயற்சிப்பது போல் தெரிகிறது. இந்த வழக்கு முதலில் பொது சுகாதார பரிசோதகர்களால் தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும் பின்னர் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டது. எனினும் விசாரணை முன்னேற்ற அறிக்கை எதுவும் மன்றில் முன்வைக்கப்படவில்லை. பெரும் சுற்றுப் புறச் சூழல் மாசடைதல் ஏற்பட்டிருக்கிறது.
எனவே நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் மற்றும் உராய்வு நீக்கி எங்கிருந்து கலந்துள்ளது என்று இலங்கை கனியவளங்கள் ஆய்வு மையம் உடனடியாக மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று குறித்த நிறுவன அதிகாரிக்கு மன்று கட்டளையிடுகிறது.
குறித்த வழக்கின் குற்றச் செயல்களைப் புரிந்தவர்களைத் தப்ப வைக்க அதிகாரிகள் மீது அழுத்தம் கொடுப்பதாக மன்றுக்குத் தோன்றுகிறது. குறித்த குற்றச் செயயல்களைச் செய்தவர்களை எவரோ ஒருவரின் கரம் காப்பாற்ற மறைமுகமாக முயற்சிப்பதாகத் தெரிகிறது.
இந்த விடயத்தைச் சாதாரண பொலிஸ் அதிகாரிகளால் உரிய விசாரணை செய்யப்பட்டிருக்கவில்லை. குற்றச் செயல்களைச் செய்தவர்களுக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதும், அரச அதிகாரிகள் பலர் இந்தக் குற்றச் செயலுக்கு உடந்தையாக உள்ளார்கள் என்ற சந்தேகமும் நீதிமன்றுக்கு ஏற்பட்டுள்ளது.
அரச அதிகாரிகள் பலர் மற்றும் பிழையான அறிக்கைகளைத் தயாரித்து வெளியிட்டவர்கள் ஏதாவது கையூட்டல் பெற்றுக்கொண்டு அவ்வாறு செய்தனரா என்ற கேள்வியும் மன்றுக்கு எழுகிறது. எனவே நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் இந்த விடயம் தொடர்பில் விசாரணை செய்து குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும்" என்று மல்லாகம் நீதிமன்று கட்டளையிட்டிருந்தது. (வ-4)

## தீர்மானத்தை...

டுள்ளதை அப்படியே நிறைவேற்ற வேண்டிய தேவை இலங்கைக்கு இருக்கின்றது.
இவ்வாறு மாற்றுக் கொள்கைகளுக்கான மத்தியநிலையத்தின் பணிப்பாளரும், நல்லிணக்கச் செயலணியின் பொதுச் செயலருமான பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் பங்கேற்றிருந்த கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, நிறைவேற்றப்பட்டுள்ள ஐ.நா. தீர்மானம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2015 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டிருந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்தவே இலங்கைக்கு மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோர் கூறுவது போன்று பன்னாட்டுச் சமூகத்தை நிராகரித்துச் செயற்பட முடியாது. இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்தை நிராகரித்துவிட்டு முன்நோக்கிப் பயணிக்கும் என்று நான் நினைக்கவில்லை.
பன்னாட்டுப் பங்களிப்பை நிராகரித்துச் செயற்படுமானால் தீர்மானத்துக்கு ஆதரவு வழங்கிய நாடுகள் எதிர்ப்புகளை வெளியிடும். அரச தலைவர் மைத்திரி உட்பட அரசு இந்த விடயத்தில் உறுதியான தீர்மானத்தை எடுப்பது அவசியமாகும் என்றார். (த-5)

## யாழ்...

களுக்கு வகுப்புத் தடை விதிக்க நிர்வாகம் தீர்மானித்துள்ளது.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடந்த 18ஆம் திகதி இடம்பெற்ற முதலாம் வருட மாணவர் வரவேற்பு நிகழ்வுக்கான ஏற்பாடுகளின்போது பல்கலைக்கழகக் கட்டடத்தின் கண்ணாடிகள் பல அடித்து நொறுக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டப்பட்டது.
இதனையடுத்து பல்கலைக்கழக நிர்வாகத்தால் வரவேற்பு நிகழ்வுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் குறித்த தடையை மீறி நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன் எதிரொலியாகக் கலைப்பீடம் தற்காலிகமாக மூடப்பட்டது. இதற்கு மாணவர் ஒன்றியம் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தது.
இருப்பினும் இவை தொடர்பில் நேற்று ஆராய்ந்த கலைப்பீடம், இதனுடன் தொடர்புடைய 13 மாணவர்களுக்குத் தற்காலிக வகுப்புத் தடை உத்தரவு பிறப்பிப்பது எனவும், கலைப்பீடத்தின் சகல வகுப்புக்களையும் உடனடியாக ஆரம்பிப்பதெனவும் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (த-101)

## மீண்டும்...

வில்லை. நாட்டில் மீண்டும் ஒரு போர் மூளாத நிலமையை நாங்கள் உறுதி செய்வோம்.
இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவித்தார்.
மகேஸ் சேனநாயக்கவின் பிரிவுபசார வைபவம் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எனது முன்னோடிகள் சமாதானம் தொடர்பில் மிகச் சிறந்த பணியை ஆற்றியுள்ளனர். அது பலவீனமானதாகக் காணப்படலாம். ஆனால் அவர்கள் அது தொடர்பில் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளனர். தற்போது நாங்கள் இந்தச் சமதானத்தை உறுதியானதாக மாற்ற விரும்புகின்றோம். அதனுடன் தொடர்புபட்ட அனைத்துத் தரப்பினருடனும் ஈடுபாட்டைக் காண்பிப்பதன் மூலம் நாங்கள் இதனைச் சாதிக்க விரும்புகின்றோம். இதில் குறிப்பாக போரில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களிடம் எங்களின் ஈடுபாட்டைக் காண்பிப்பதன் மூலம் இதனைச் சாதிக்கலாம் என்று எண்ணுகின்றோம்.
வடக்கு கிழக்கில் உள்ள எங்கள் சகோதரர்கள் துயரை அனுபவித்துள்ளனர். தென் பகுதியில் உள்ள எங்கள் சகோதரர்களும் துயரை அனுபவித்துள்ளனர். பலர் காணாமற்போயுள்ளனர். பலர் போரில் கொல்லப்பட்டுள்ளனர்.
போர் என்பது அரசியலின் தொடர்ச்சி என்று சொல்லப்படுவதுண்டு. நாங்கள் அரசியல்வாதிகள் அல்லர். என்னையும் நான் அவ்வாறு கருதவில்லை. நாங்கள் போர், அரசியலின் தொடர்ச்சி என்று தெரிவிக்கப்படுவதில் மீண்டும் சிக்கிக்கொள்ள விரும்பவில்லை. மீண்டும் ஒரு போர் ஏற்படாத நிலையை நாங்கள் உறுதிசெய்வோம். யதார்த்தத்தைப் புரிந்து கொள்வது அவசியமானது.
மக்களின் காணிகள் விடுவிக்கப்படுவது தொடர்பான விடயத்தில் இராணுவத்தின் கரிசனை தொடர்பில் கவனம் செலுத்துகின்றோம். தவறான வழியில் செயற்பட்ட 12 ஆயிரம் இளைஞர்கள் போரின் இறுதியில் எங்களிடம் சரணடைந்தனர். அவர்கள் சமூகத்தில் சிறந்த வாழ்வு வாழவேண்டும் என்பது தொடர்பில் கரிசனை செலுத்துகின்றோம்.
ஐ.நா. பொதுச் செயலர் பான்கீமூன் இது தொடர்பில் என்னிடம் வினவினார். முன்னாள் போராளிகளுக்கு மறுவாழ்வளிப்பது உங்கள் பணியல்ல என்று கேட்டிருந்தார்.
நாம் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காத வகையில் பாதுகாப்புத் தரப்பினரிடமுள்ள காணிகளை விடுவிப்பதில் கவனம் செலுத்துகின்றோம். எதிர்வரும் 10 ஆம் திகதி ஊறணியில் 30 ஏக்கர் காணிகளை விடுவிக்கவுள்ளோம் என்றார். (த-5)

## ஐந்து...

கட்டளையிட்டது.
இந்த வழக்கு நீதிவான் சி.சதீஸ்தரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக அறிக்கையை மன்றில் முன்வைத்தனர்.
"இந்த வழக்கில் தற்போது விளக்கமறியலில் இருக்கும் 5 இராணுவத்தினருக்கும் எதிராக சுருக்க முறையற்ற விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைக்கப் பெற்றுள்ளது" என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.
அதற்கு ஏதுவாக விரைவில் அவர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
இதேவேளை இவ்வழக்கு நடவடிக்கை தொடர்பான கோவைகள் யாவும் பொலிஸாரால் எரியூட்டப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. வழக்கு நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து நடவடிக்கை பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர். அதனையடுத்து சந்தேகநபர்களை எதிர்வரும் 6 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.
**பின்னணி**
1997ஆம் ஆண்டு புத்தூர் சிறுப்பிட்டிப் பகுதியில் சரஸ்வதி சவுந்தரராஜன் மற்றும் முத்துப்பிள்ளை ஜெயசீலன் ஆகியோர் காணாமல் ஆக்கப்பட்டனர். பின்னர் அவர்களை கொலை செய்த குற்றச்சாட்டின் பேரில் சிறுப்பிட்டி இராணுவ முகாமிலிருந்த 16 இராணுவத்தினர் அச்சுவேலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண நீதிவான் மன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.
இவர்கள் 16 பேருக்கும் எதிராக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து யாழ்ப்பாண நீதிவான் மன்றால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டு, அவர்களில் 14 இராணுவத்தினர் நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தனர். இருவர் உயிரிழந்துவிட்டனர் என்று மன்றில் கூறப்பட்டு இறப்புச் சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்பட்டன.
ஏனைய பதினான்கு இராணுவத்தினரும் யாழ்ப்பாண நீதிவான் மன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். எனினும் அவர்கள் சார்பில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. 14 இாணுவத்தினரில் 5 பேருக்கு பிணை வழங்கப்பட்டது. ஏனையோர் தொடர்ந்தும் விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்தனர்.
10 இராணுவத்தினரை வழக்கு நடவடிக்கைகளிலிருந்து விடுவிக்குமாறும் ஏனைய ஐந்து இராணுவத்தினர் தொடர்பாக ஆலோசனை கிடைக்கும் வரை அவர்களை விளக்கமறியலை நீடிக்குமாறும் சட்டமா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. அதன்படி அவர்கள் விளக்கமறியலில் உள்ளனர்.
(வ-4-103-ரி)

## மாலி...

மாலியில் ஐ.நாவின் சண்டை வாகனத் தொடரணியில் இடம்பெறவுள்ள இராணுவத்தின் 15 அதிகாரிகள் மற்றும் 185 படையினர் இந்தப் பெரிய ஒத்திகைப் பயிற்சியில் பங்கேற்றனர்.
மாலியில் உள்ள களநிலைச் சவால்களை எதிர்கொள்வது குறித்த தயார்படுத்தல்களை மேற்கொள்ளவே இந்த ஒத்திகை முன்னெடுக்கப்படுகின்றது. இந்தப் பயிற்சியில் கவசப் படை, இயந்திர காலாட் படை, மற்றும் ஏனைய உதவிப் படைப் பிரிவுகளுடன் 68 வாகனங்களும் ஈடுபடவுள்ளன.
காங்கேசன்துறையிலிருந்து கடற்கரையோர வீதியின் ஊடாக பருத்தித்துறை நகருக்குள் திடீரென இராணுவத்தின் தொடர் வாகன அணி பிரவேசித்தமையால் மக்கள் திகிலடைந்தனர். வெள்ளை நிறப் பூச்சுகளுடன் ஐ.நா. அடையாளம் பொறிக்கப்பட்ட 68 வாகனங்களும் ஒன்றன் பின் ஒன்றாகக் கடற்கரையோர வீதியின் ஊடாகச் சென்றன.
போர் மற்றும் விநியோக நடைமுறைகள், கட்டளை மற்றும் தலைமைத்துவம், அவசர காலத் திட்டங்கள், போர் தொடரணி நடவடிக்கைகள், அவசர நிலையின்போது முடிவெடுத்தல், தொடரணி பயிற்சி உத்திகள், போராட்டங்களைக் கட்டுப்படுத்தல், வெடிபொருள்களைச் செயலிழக்கச் செய்தல், நிர்வாக மற்றும் விநியோகம், தொலைத்தொடர்பு பராமரிப்பு, மற்றும் ஏனைய நடைமுறைகள், தொழில்நுட்பங்கள் குறித்து இந்தப் பயிற்சியில் கவனம் செலுத்தப்படும்.
மாலியில் ஐ.நா. அமைதிப்படையில் பணியாற்றுவதற்கு படையினரைத் தயார்படுத்தும் வகையிலேயே இந்தப் பெரிய பயிற்சி முன்னெடுக்கப்படுகின்றது. (த-526)

## நிபுணர்...

றில் சமர்ப்பிக்குமாறு மல்லாகம் நீதிமன்று வடக்கு மாகாண சபை அவைத் தலைவருக்கு நேற்றுப் பணித்தது.
இந்த வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் ஏ.யூட்சன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. இதன்போதே மன்று இவ்வாறு பணித்தது.
தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை சார்பில் மன்றில் நேற்று எவரும் முற்படவில்லை. இந்த நிலையில், சுன்னாகம் உள்ளிட்ட தண்ணீர் வழங்க வேண்டிய சில இடங்களுக்கு உரிய முறையில் தண்ணீர் வழங்கப்படவில்லை என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் குற்றஞ்சாட்டினர்.
நீதிமன்றின் கட்டளையை உரிய தரப்பினர் மன்றின் கட்டளைப்படி செயற்படுத்தவேண்டும். தவறின் கட்டளையை மீறியதாக உரிய தரப்பினருக்கு எதிராக நீதிமன்று நடவடிக்கை எடுக்கும்.
இந்த வழக்கு அடுத்த முறை நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும்போது கனியவள ஆய்வு மையத்தின் பொறுப்பு உத்தியோகத்தர் மன்றில் முற்படவேண்டும்.
அது மட்டுமன்றி நீர்வளச் சபையினர் தமது நடவடிக்கைகள் தொடர்பில் முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவித்த நீதிமன்று, இந்த வழக்கை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது. (த-4)

## வேலையற்ற...

மாவட்டச் செயலகம் முன்பாகத் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தப் போராட்டத்தின் அடுத்த கட்டமாக நாளை புதன்கிழமை வடக்கு மாகாணத்துக்குட்பட்ட கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட செயலகங்களின் முன்பாகக் காலை 8.30 மணியளவில் இந்தப் போராட்டம் இடம்பெற உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
அரச வேலைவாய்ப்பை உறுதிப்படுத்தும் வகையில் இடம்பெறவுள்ள பட்டதாரிகளின் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு அனைத்துப் பட்டதாரிகளும் தமது ஆதரவைத் தெரிவித்துப் போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
வடக்கு மாகாணத்தில் உள்ள ஆயிரக்கணக்கான பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பை வழங்கக் கோரி யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் நேற்று 27 ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (த-21)

## ஒன்றரை...

வர் நடமாடுவதாக மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கடற்படையினருக்குத் தகவல் கிடைக்கப் பெற்றது. உடனடியாகச் செயற்பட்ட மதுவரித் திணைக்கள அலுவலர்கள் சந்தேக நபரைச் சோதனை செய்து அவர்வசம் இருந்த 485 கிராம் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர்.
தொடர்ந்து மேலதிக விசாரணையை சந்தேக நபரிடம் மேற்கொண்ட மதுவரித் திணைக்கள அதிகாரிகள் வல்வெட்டித்துறை ஆலடிப் பகுதியில் உள்ள வெற்றுக்காணியில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு கிலோ ஹெரோயின் போதைப்பொருளைப் பின்னர் மீட்டனர்.
போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட நபர் அந்தப் பகுதியை சேர்ந்த 60 வயது மதிக்கத்தக்கவராவார். இவரது குடும்பத்தினர் தற்போது இந்தியாவில் உள்ளதாக விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது. (த-526)



## திணறியது மே.தீவுகள்

பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் சொந்த மண்ணில் படுதோல்வியடைந்தது மேற்கிந்தியத் தீவுகள்.
பாகிஸ்தான் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான நான்கு ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தீவுகள் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகள் இழப்புக்கு 111 ஓட்டங்களையே பெற்றது. பந்துவீச்சில் சடப்கான் 3 இலக்குகளையும், வசீம், ரன்வீன், ரியாஸ், ஹசன் அலி நால்வரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் 17 பந்துகள் மீதமிருக்க 4 இலக்குகளை இழந்து இலக்கை அடைந்தது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 28

**ஐக்கியம் வி.க. கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழகம் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வல்வை ஆதிசக்தி அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**அரியாலையின் கரப்பந்தாட்டம்**

அரியாலையின் 98 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்டத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் மாவட்ட அணிகளுக்கு இடையில் நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இன்று இரவு இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி அணியும் இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சரஸ்வதி அணியை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா அணியும் இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணியை எதிர்த்து கச்சாய் வொலிகிங்ஸ் [illegible] அணியும் மோதவுள்ளன. (ம-[illegible]-23-108)

## தூண்போல் நின்றார் வில்லியம்சன்
## நியூசிலாந்து அணி முன்னிலையில்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றது நியூசிலாந்து அணி.
வெலிங்டனில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சலக இலக்குகளையும் இழந்து 314 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக குயின்டன் டி ஹொக் 90 ஓட்டங்களையும், பிளாசிஸ் 53 ஓட்டங்களையும், அம்லா 50 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஹென்றி 4 இலக்குகளையும், வாக்நெர் 3 இலக்குகளையும், கிராண்ட்ஹோம் 2 இலக்குகளையும், சான்நெர் ஓர் இலக்கையும் வீழ்த்தி னர்.
பதிலுக்குக் களமிறங்கிய நியூ சிலாந்து அணி இலக்குச் சரிவில்லாமல் 67 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இரண்டாம் நாள் முடிவுக்கு வந்தது. லாதம் 42 ஓட்டங்களுடனும், ராவல் 25 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 50 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். அதிகம் நிதானிக்கவும் இல்லை அதிரடிகாட்டவும் இல்லை. ஆரம்பம் முதல் சிறந்த சராசரியில் விளையாடி சதம் கடந்தார் வில்லியம்சன். ராவல் 88 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஒரு முனையால் இலக்குகள் சரிந்தாலும் வில்லியம்சன் தொடர்ந்தும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். நாள் முடிவில் நியூசிலாந்து 321-4 என்றுள்ளது. வில்லியம்சன் 148 ஓட்டங்களுடனும் சான்நர் 13 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். ஆட்டத்தின் முதல் மூன்று நாள்களும் முடிவடைந்துள்ளன. ஆனால் இன்னும் ஓர் இன்னிங்ஸ்கூட முழுமையாக நிறைவு காணவில்லை. இதனால் ஆட்டம் சமநிலையில் முடிவடைய அதிக வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது. (ம)

## ஹங்கேரியை நொறுக்கினார் ரொனால்டோ


கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கான தகுதி ஆட்டமொன்றில் ரொனால்டோவின் துடிப்பான ஆட்டத்தால் அபார வெற்றிபெற்றது போர்த்துக்கல்.
ரஷ்யாவில் அடுத்த வருடம் கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடர் நடைபெறவுள்ளது. இதற்கான தகுதிகாண் ஆட்டங்கள் தற்போது உலகெங்கும் பரவலாக நடைபெற்று வருகின்றன. ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான தொடரில் 'பி' பிரிவில் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ஹங்கேரியை எதிர்த்துப் போர்த்துக்கல் பலப்பரீட்சை நடத்தியது.
ஆட்டத்தின் 17ஆவது நிமிடத்தில் ஆந்ரே போர்த்துக்கலின் முதற் கோலைப் பதிவுசெய்தார். 43 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ பதிவுசெய்த கோலால் முதல் பாதியின் முடிவில் 2:0 என்று முன்னிலை பெற்றது போர்த்துக்கல். இரண்டாம் பாதியிலும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தியது போர்த்துக்கல் அணி. 60 ஆவது நிமிடத்தில் ரொனால்டோ மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது போர்த்துக்கல்.
'பி' பிரிவின் மற்றொரு ஆட்டத்தில் சுவிற்சர்லாந்து 1:0 என்ற கோல் கணக்கில் லத்வியாவை வென்றது. கிரீஸ், பெல்ஜியம் அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்று சமநிலையில் முடிந்தது. (ம)

## இந்தியாவின் பிடியில் ஆஸி.

ஆஸ்திரேலிய அணிக்கெதிராக தற்போது நடைபெற்றுவரும் நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி வெற்றிபெறுவதற்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 300 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சிமித் 111 ஓட்டங்களையும், வேட் 57 ஓட்டங்களையும், வோர்ணர் 56 ஓட்டங்களையும் குவித்தனர்.
பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 4 இலக்குகளையும், உமேஸ் யாதவ் 2 இலக்குகளையும், புவனேஸ்வர் குமார், அஸ்வின், ஜடேயா மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 6 இலக்குகள் இழப்புக்கு 248 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சகா 10 ஓட்டங்களுடனும், ஜடேயா 16 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அடித்தாடினார் ஜடேயா. அவர் 83 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். 63 ஓட்டங்களுடன் ஜடேயாவை வீழ்த்தினார் கும்மின்ஸ். அவர் சகாவையும் வீழ்த்தினார். இலக்குச் சரிவு தொடர்ந்தது. 332 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இந்திய அணி.
பந்துவீச்சில் லையன் 5 இலக்குகளையும், கும்மின்ஸ் 3 இலக்குகளையும், ஹசில்வூட், கெபி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழத்தினர்.
பதிலுக்குக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணி வெறும் 137 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. மத்தியவரிசையில் மக்ஸ்வெல் பெற்ற 45 ஓட்டங்களே அதிகபட்சம்.
பந்துவீச்சில் உமேஸ் யாதவ், ஜடேயா, அஸ்வின் மூவரும் தலா மூன்று இலக்குகளையும், புவனேஸ்வர் குமார் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.
106 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய இந்திய அணி நாள் முடிவில் இலக்குச் சரிவில்லாமல் 19 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)



பழனித்துரை தர்மகுமாரன்



# பெண் சமத்துவம் பற்றிய சிந்தனை ஆண்கள் மனதில் எழவேண்டும்

உலக புவிமேற்பரப்பில் வாழுகின்றஉயிரினங்கள்அனைத்தில் இருந்தும் வேறுபட்ட இனமாக மனித குலம் காணப்படுகின்றது. எனவே, அன்பு, பாசம், அரவணைப்பு, புரிந்துணர்வு என்பவற்றின் மூலம் மனித நேயத்துடன் கட்டுக்கோப்பான ஒழுங்கமைக்கப்பட்டஒருவரையறைக்குள் வாழ்வதே மனித குலம். இதனால் ஏனைய உயிரினங்களில் இருந்து மனிதன் உயர்ந்தவனாகக் கருதப்படுகின்றான்.

அதாவது நேர்மை, ஒற்றுமை, ஒழுக்கம், உதவிசெய்தல், பகிர்ந்து உண்ணல், துரோகம் செய்யாமை, பக்தி என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு சிந்தனையுடன்கூடிய அறிவைப்பயன்படுத்தி சமூக பங்காளனாக வாழ்வதே மனித இனமாகும்.

இந்த மனித குலத்தில் நாகரிகமான சமூக அமைப்பு, தமது இனத்தின், மொழியின்அடிப்படையில்கலை, கலாசார, பண்பாடுகளுடன் பின்னிப் பிணைந்து வாழ்வது ஆகும்.

## பெண்களுக்கு மதிப்பு

தமிழ்இனமானதுபெண்களைப்புகழ்ந்தும், மதித்தும், பாதுகாத்தும், சமத்துவம் வழங்கியும் பண்பாட்டுடன் வாழ வழிசமைத்துக் கொடுத்த போதும், சில மிலேச்சத்தனமானவர்களின்நாகரிகமற்றசெயற்பாட்டால் பெண்கள் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளது. இந்த வாழ்க்கையில் அனைத்து ஜீவராசிகளும்ஆண், பெண் என ஆண்டவனால் படைக்கப்பட்டு ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து ஆண் இல்லாமல் பெண் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லைஎன்னும்அளவுக்கு அமையப் பெற்றபோதும், உடலியல் மாற்றம் மற்றும் உளவியல் மாற்றத்தினால் ஏற்படும் உணர்வு அவர்களை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

இதனைக்கருத்திற்கொண்டு "சிவன் இல்லையேல் சக்தி இல்லை, சக்திஇல்லையேல் சிவன் இல்லை" என்னும் கருத்தை இந்து மதம் வலியுறுத்துவதுஆண், பெண்சமத்துவத்தையேஎடுத்துக்காட்டுகின்றது. மதக் கொள்கையிலேயே தெளிவாக பெண் சமத்துவம் எடுத்துக்காட்டப்படுவதை சமய, இதிகாச, புராணக் கதைகள் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

அதாவது ஆண் தெய்வ வழிபாடு, பெண்தெய்வ வழிபாடு என தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டு ஆண், பெண் வேறுபாடு இன்றி சமத்துவமாக வழிபாட்டில் ஈடுபட்டனர். இதனால் உயர்வு, தாழ்வு, அடக்குமுறை என்பன காணப்படவில்லை.

அதேபோல கிறிஸ்தவ மதத்திலும் ஆதாம், ஏவாள் மூலமே சிருஷ்டிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என புனித விவிலிய நூல் குறிப்பிடுகின்றது. இங்கு ஆண்டவரின் படைப்பினால் எல்லாம் நிகழுகின்ற போதும் சமத்துவத்தைக்காட்டுவதற்கு ஆதாம்என்ற ஆணையும், ஏவாள் என்றபெண்ணையும் சிருஷ்டித்து, இருவரின் மூலமே இனவிருத்தி ஏற்படுத்தப்படும். அதற்கு ஆண்பெண் முக்கியமானவர்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

இருந்த போதும் மதக் கொள்கையில் இவ்வாறான சமத்துவத்தை எடுத்துக் காட்டிய போதும் பிற்காலத்தில் மத வழிபாடுகளைஉருவாக்கியவர்கள், சில இயற்கை நிகழ்வுகளை முன்னிறுத்தி ஆண்களைமுக்கியப்படுத்திக்காட்டியுள்ளனர். அதாவது கிறிஸ்தவ மதத்திலே ஆண் பாதிரிமார்கள், பெண்பாதிரிமார்கள்காணப்படுகின்றபோதும் கூட பெண்களால் பாப்பாண்டவராகவோ அல்லது பேராயராகவோ அல்லது முதன்மைக் குருவாகவோ வரமுடியாத அளவுக்கு மதக்கட்டுப்பாடு இருப்பதைக் காணமுடிகிறது.

## ஆண்களால் உருவாக்கப்பட்ட சட்டங்கள்

இதனை கடவுள் கொள்கையிலிருந்து வேறுபடுத்திப் பார்த்தால் இவ்வாறான சட்டங்களை ஆண்களே உருவாக்கியுள்ளனர்என்பதே உண்மையாகும்.

இதனைக்குறிப்பிட்டுக்காட்டியதன்மூலம்பெண்சமத்துவம், மதங்களின் மாண்புகளிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

> தமிழ் இனமானது பெண்களைப்புகழ்ந்தும், மதித்தும், பாதுகாத்தும், சமத்துவம் வழங்கியும் பண்பாட்டுடன் வாழ வழிசமைத்துக் கொடுத்த போதும், சில மிலேச்சத்தனமானவர்களின் நாகரிகமற்ற செயற்பாட்டால் பெண்கள் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளது. இந்தவாழ்க்கையில் அனைத்துஜீவராசிகளும் ஆண், பெண் என ஆண்டவனால் படைக்கப்பட்டு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து ஆண் இல்லாமல் பெண் இல்லை, பெண் இல்லாமல் ஆண் இல்லை என்னும் அளவுக்கு அமையப்பெற்றபோதும் உடலியல்மாற்றம் மற்றும் உளவியல் மாற்றத்தினால்ஏற்படும் உணர்வு அவர்களை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

இதற்குப் பின்னர் ஏனைய விடயங்களை நாம் நோக்க வேண்டும். அதாவது பெண் உடல் அமைப்பிலும் உள அமைப்பிலும் மென்மையானவள் என்பதை அடிப்படையாக வைத்துக் கொண்டு அடிமையாக்கிக் கொள்ள முடியாது. ஏனெனில் இன்றைய பெண்கள் அர்ப்பணிப்பு நிறைந்தவர்களாக உருவெடுத்துவருவதைஅவர்களின் கல்வி, தொழில், தகுதி, பதவி என்பவற்றிலிருந்து அறியலாம். இதை விடுத்து பெண்களின் உணர்வுகளை வைத்துக் கொண்டு அவர்களின் செயற்பாடுகளை எடைபோட முடியாது. அதாவது ஆண், பெண் வேறுபாட்டிற்கு காரணம் உடலியல் மாற்றங்கள் அந்த உடலியல் மாற்றங்களுக்குக் காரணம் ஓமோன்சிறப்புக்களின்தூண்டுதலே ஆகும்.

இது இயற்கையில் ஏற்படுவது மட்டுமன்றி உயிரினங்கள் எல்லாவற்றிலும் ஏற்படுவது ஆகும். தனது பகுத்தறிவினால், சிந்தனை அறிவினால் ஏனைய உயிரினங்களிலிருந்து தன்னை வேறுபடுத்தி, அன்பு, ஒழுக்கம், சுயகட்டுப்பாடு, சுய மரியாதை என்பவற்றை தன்னகத்தே கொண்டு மானிடனாக வாழும் மனிதன், பெண்கள் விடயத்தில் மட்டும் ஏனைய உயிரினங்கள் போல் செயற்படுவது மனம் வருந்தத்தக்கது. இதனை எமது தேசிய தலைவர் தனது சிந்தனையிலேபின்வரும்கருத்தைமுன்வைத்திருந்தார்.

பெண்கள் எல்லா வழிகளிலும் முயற்சி கொண்டு எழுச்சிகண்டாலும், ஆண்கள் மனதில்பெண்மை பற்றியஎண்ணம், சிந்தனைஎழுச்சியுறும்போதே பெண் சமத்துவம் ஏற்படும்.

அதுமட்டுமன்றி பெண்ணை உடலாலும்உள்ளத்தாலும், சமூகத்தாலும்சிதைக்காது சின்னாபின்னமாக்காது. பாதுகாப்பதே ஆணின் கடமையாகும். இது நிறைவேறினால் பெண்சமத்துவம் சாமானியர்கள் மட்டத்திலும் தோன்றிக் காணப்படும்.

பெண் இனத்தின் பெருமையை ஆண்கள் மனதில் பதியச்செய்ய வேண்டும். அதாவது அடுப்படியில் அடைபட்டபெண்கள் அகப்பையை ஏந்தினார்கள்.
பின்னர் இனத்தின் அடக்கு முறைக்கு எதிராக ஆயுதம் ஏந்தி ஆணுக்கு நிகராகினர்.

கட்டுரையாளர்:
ஆசிரியர் உடுவில் மகளிர் கல்லூரி

**SPOKEN ENGLISH**
WITH DIPLOMA CERTIFICATE

16 வயதிற்கு மேற்பட்டோர், பல்கலை மாணவர்கள்,தொழில் தேடுவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்கள்கூட மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில் பேசமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் -01.04.2017

1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00

1. திங்கள், புதன் பிரிவுகள் காலை 10-12 மாலை 3-4.30
2. செவ்வாய்,வியாழன் பிரிவுகள் காலை 10-12 மாலை 3-4.30

SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# அவசர அவசரமாக குலசேகர அழைப்பு

## முதலாவது ஆட்டத்தின் தோல்வியை அடுத்து

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்ததை அடுத்து இன்று நடைபெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் அணியில் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரை பங்களாதேஷ் அணி சமன்செய்தது. இது இலங்கைக்கு விழுந்த பலத்த அடி என்று வர்ணிக்கப்படுகிறது.


ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் 90 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி தற்போது 1:0 என்று முன்னிலையில் உள்ளது. தொடரில் மூன்று ஆட்டங்கள் என்பதால் அடுத்த இரு ஆட்டங்களில் வென்றால் மட்டுமே இலங்கை அணியால் கிண்ணம் வெல்லமுடியும் என்ற நெருக்கடிநிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு இலங்கை அணியில் பல அதிரடி மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

வேகப்பந்து வீச்சாளர்களான குலசேகர மற்றும் நுவான் பிரதீப் இருவரும் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் இலங்கை அணியின் பந்துவீச்சு வரிசை இன்று மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(ம)

# Obituary Notice

## Mr.Alex Thambirajah



Mr.Alex (Alexander Kanagarajah) Thambirajah Retired teacher of St.John's College, of 158, Old Park Road, Chundikuli has passed away.

He is the beloved husband of late Damayanthi Thambirajah, Son of late retired post master Ponnampalam Thambirajah and late Satkunam Thambirajah, Father of Jesuran Thambirajah and Deborah Seevaratham, brother of George Thambirajah and late Pathmini Sugunananthan, Father - in- law of Jeyendran Seevaratnam and Jasmine Arudchelvam, Grand father of Daniesha, Gideon and Jeriel and son- in- law of late retired DRO Balasanthiran and Mrs. Alice Balasanthiran.

His Funeral will be held on Wednesday, the 29th of March 2017 at 8.00 am at the Ceylon Pentecostal Mission Church hall, 111 Kandy Road, Jaffna.

**Alexander Jesuran Thambirajah**
158, Old Park Road, Chundikuli, Jaffna.

# மரண அறிவித்தல்

## இராமசாமி சண்முகதாஸ்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும். வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி சண்முகதாஸ் நேற்று (27.03.2017) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமசாமி - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் நகுலேஸ்வரியின் அன்புக்கணவரும் விக்னேஸ்வரி. கஜேந்திரன். ஐங்கரன். சிவகௌரி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அனனாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2017) செவ்வாய்க்கிழமை வவுனியா வேப்பங்குளம் 6 ஆம் ஒழுங்கையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றுதகனக்கிரியைக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**6 ஆம் ஒழுங்கை.**
**வேப்பங்குளம் வவுனியா.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

**விற்பனைக்கு**

சாப்பாட்டுக்கடைக்குத் தேவையான நல்ல நிலையில் உள்ள தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. (சைவ உணவகத்தில் பாவிக்கப்பட்டது)

**077 222 9955**

**வெளிவந்து விட்டது**

**A/L பாஸ்பேப்பர்** (2016 இணைக்கப்பட்டுள்ளது)

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிரியல் தொழினுட்பவியல்
- தொழில் நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- பரதநாட்டியம்
- விவசாயம்
- மனைப்பொருளியல்
- நாடகமும் அரங்கியலும்

அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.
021 222 9881

# பெருமைக்குரிய இலங்கையர்களுக்கு

e-wis
ORIGINAL DEVICE MANUFACTURER



**நாம் யார்?**

- தகவல் தொழில்நுட்பத் துறையில் 30 வருடங்களுக்கு மேலான அனுபவம் மிக்கவர்கள்.
- இலங்கையின் பெருமைமிக்க முதலாவது அசல் சாதன உற்பத்திச்சாலைக்கு சொந்தக்காரர்.
- முழு இலங்கைக்குமான சேவைகளை வழங்கும் நாடளாவிய ரீதியில் கிளை வலையமைப்பைக் கொண்ட ஒரே நிறுவனம்.
- நேரடி உற்பத்தி உத்தரவாதத்தை வழங்கும் ஒரே நிறுவனம்.
- சர்வதேச தரத்துடன் கூடிய கணினி மற்றும் கணினி சார் உபகரணங்களை தயாரிப்போர்.

**EWIS நாம் எதிர்பார்ப்பது...**

- வெளிநாட்டு தயாரிப்புக்களுடன் போட்டியிட தயாராக உள்ளோர்.
- இலங்கையின் சொந்த உற்பத்திப் பொருட்களை வியாபாரப்படுத்துவதில் பெருமை கொள்வோர்.
- சவால்களை ஏற்று முன்னோக்கிச் செல்ல விரும்புவோர்.

**அது நீங்களாக இருப்பின்,**
நீங்களும் EWIS தயாரிப்புக்களின் மாவட்ட விநியோகஸ்தர்களாக ஓர் அரிய வாய்ப்பு. வாருங்கள்! எம்முடன் கைகோர்த்திடுங்கள்!

பெயர், விலாசம், தொடர்பு இலக்கம் மற்றும் வியாபார விபரங்கள் உள்ளடங்கிய உங்கள் விண்ணப்பத்தை கீழ் காணப்படும் விலாசத்திற்கு அல்லது www.ewispc.com எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து இன்றே உங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பித்திடுங்கள்.

தொடர்புகளுக்கு : 077 0 520 520



வியாபார அபிவிருத்தி முகாமையாளர்
**E-W INFORMATION SYSTEMS LIMITED**
252, மெத்தோடிஸ்ட் கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03.

Microsoft
intel inside

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 28.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.